

# நான் கண்ட உலகம்

ஜி.டி.நாயுடு

T16991
R005J02
T.16991

# நான் கண்ட உலகம்

*Approved by the Madras T. B. C. Vide Consolidated list page 114, dated 7—5—1952.*

திரு. ஜி.டி. நாயுடு

மணி & கோ.

தெப்பக்குளம் — திருச்சி

முதற் பதிப்பு: 1952.

விலை ரூ. 1—0—0

தமிழாக்கம்:

திருலோக–சீதாராம்

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி.

# முன்னுரை

என்னுடைய சுற்றுப்பிரயாணங்கள் பற்றி அவ்வப்போது வெளியான விபரங்களைக் கொண்டு இச்சிறு நூல் தொகுக்கப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் மாணவர்களும் மற்றவர்களும் பிற நாடுகளின் தொழில் நுட்பங்கள், சமுதாயப் பழக்க வழக்கங்கள், கல்வி ஆகியவற்றில் தகுந்தவற்றை சிறிதளவேனும் விரும்பிப் பயன்பெறுவர் என்று கருதியே நண்பர் டி. எம். முத்து அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இதை வெளியிட ஒப்புக்கொண்டேன். அவருக்கு என் நன்றி.

ஜி. டி. நாயுடு.

# பதிப்புரை

தென்னிந்தியத் தொழில் விஞ்ஞானி கைத்தொழில் மேதை என்று உலகம் வியக்கும் கோவை ஜி. டி. நாயுடு அவர்களின் உலகக் காட்சிகள் இந் நூல்.

உயர்திரு ஜி. டி. நாயுடு அவர்கள் கோவை மாவட்ட குக்கிராமமொன்றில் சாதாரண விவசாயக் குடும்பத்தின் தோன்றல். பிறந்த இரண்டாண்டிலேயே பெற்ற தாயைப் பறி கொடுத்த பரிதாபக் குழவி.

'விளையும் பயிர் முளையிலே' என்பதே போல் பிஞ்சிலே இன்றைய எதிர் கால வாழ்வு பல காட்சி தந்தவர், 'கல்லினுட் தேரை — ஈத்தையில் முத்து' என்பர். நாயுடு அவர்களின் பிறப்பும் வளர்ப்பும், வாழ்க்கையும் இவைகளை நன்கு மெய்ப்பிக்கிறது.

1920-ம் ஆண்டில் ஒரு மோட்டார் ஓட்டி —'டிரைவர்'. இன்று உலகக் கவ

னத்தை தன்பாற் கவர்ந்துகொண்டு விட்டார். தென்னிந்தியாவிலே முதன் முதல் சிறந்த மோட்டார் போக்கு வரத்து ஸ்தாபனம் அவருடையதுதான் என்பதைப் போல, யந்திர நிபுணர்—தாவர விஞ்ஞானி என்பதிலும் அவருக்கு நிகர்-அவரே யாவர்.

நாயுடுவின் கண்டுபிடிப்புகள்—ஆராய்ச்சிகள் அனந்தம். அவர் வாழ்க்கை வரலாற்று நூல் ஓர் அளவு இதைக் கூறுகிறது.

ஆரஞ்சுப்பழம் கசக்கும்! ஆனால் 15, 20 பங்கு அந்தப் பழச்சாற்றின் அளவுக்குத் தண்ணீர் கலந்தால் இனிக்கும். அதாவது 15, 20 பழங்களின் சாற்றை ஒன்றில் கிடைக்கச் செய்கிறார் நாயுடு—அவருடைய தோட்டத்தில்.

பருத்திச்செடி 10 அடி உயரம்-மரமாக வளர்ந்து 24 ராத்தல் பருத்தியைக் காய்க்கிறது. இது சராசரி நம் நாட்டில் ஓர் ஏகர் நிலப்பரப்பின்

மொத்த விளைச்சலுக்கு, ஆறு அல்லது ஏழில் ஒரு பங்கு.

சோளச்செடி 18½ அடி உயரம்—தலை நிமிர்ந்து எண்ணினால் 36 முதல் 39 கதிர்கள். இப்படித் தாவரங்களும் பேசுகின்றன இவ் வியந்திர மனிதருடன்! நோபல் பரிசுபெற்ற நம் இந்திய விஞ்ஞானி சர் சி. வி. ராமன் முதல் ஆங்கில மண் ஆராய்ச்சி நிபுணர் சர். ஜான் ரஸ்ஸல் ஈறுக நாயுடுவைக் கண்டு வியக்கின்றனர்.

இப்படிப்பட்ட தலையாய தமிழ் மகன் ஒன்றிரண்டல்ல; நான்கு தடவைகளில் உலகத்தைப் பவனி வந்தார். மேல் — கீழ்நாடுகள் நெடுந்தொலை வென்றிராமல் 1932, 1935, 1939, 1950 ஆண்டுகளில் திரும்பத் திரும்ப சுற்றுப் பிரயாணங்கள் செய்தார். பல லட்சம் சொந்தப் பொருட்செலவில் பல்வேறு நாட்டினையும் வெவ்வேறு காட்சி—அனுபவங்கள் பெற்றார். அவ்வப்போது பத்திரிகைகள் — கடிதங்கள் சொற்பொழிவுகள் என்பதாக அவைகளைத் தனித்

தனியே எழுதினர்—பேசினர். இவற்றின் தொகுப்பே இச்சிறு நூல்.

தொகுப்பில் சிறு குறைகள் தவிர்க்க முடியாததாயினும், நம் நாட்டு மாணவர் — பொதுமக்கள் ஒரு சிறிதேனும் உலகத்தைக் காட்சி பெறுவர் என்ற எம் நம்பிக்கையே இம்முயற்சி.

# முதன் முதலில்

## அழைப்பு

1932-ம் ஆண்டில் ஒருநாள். கொழும்பு துறை முகத்திலிருந்து ஐரோப்பா புறப்பட்ட கப்பலில், என்னுடைய முதல் மேனாட்டுப் பிரயாணம் தொடங்கியது. பிரயாண அனுபவங்களைப் பற்றிக் கூறுவதற்கு முன்னால், எனது வெளிநாட்டு யாத்திரைக்குக் காரணமாய் அமைந்த ஓர் சிறு நிகழ்ச்சியைக் குறிப்பிட வேண்டியது இன்றியமையாத தாகும்.

மேனாடுகளுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு நெடுங்காலமாகவே யிருந்துவந்த போதிலும், அதனை மேற்கொள்ளுவதற்குரிய அவசியமும் சந்தர்ப்பமும் 1929-ம் ஆண்டுக்கு முன்னர் ஏற்பட்டதில்லை.

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக வந்து சேர்ந்த குயென்ஸ் என்ற ஜெர்மனியரும் அவரது துணைவியாரும் கோவைக்கு வந்திருந்தபோது தற்செயலாக அவர்களுடன் நட்புரிமை கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டதே எனது மேனாட்டுத் தொடர்பின் தோற்றுவாய் எனலாம்.

குயென்ஸ், பிரசித்திபெற்ற ரப்பர் சாமான் வியாபாரியாவார். இவரது இருப்பிடம் ஹாம்பர்க் என்னுமோர் அழகிய, ஜெர்மன் நகரம். தனது மனைவியாருடன் இவர் கோவை வந்துற்ற காலை அந்த அம்மையாருக்கு உடல் நலம் குன்றியிருந்ததனால் அவர்கள் கோவையில் சற்று தாமதிக்கும்படி நேர்ந்தது. யாத்ரீகர்கள் தங்குவதற்காக வென்று

அமையப்பெற்ற "முஸாபுரி பங்களா"வில் அவர்களுக்கு இடம் கிடைக்காததனாலோ அந்த இடம் அவர்களுக்கு ஏற்ற வசதியுடையதாக இராமையினாலோ வேறிடம் தேடவேண்டியதாயிற்றுப் போலும்! எனது மோட்டார் போக்குவரத்து மத்திய நிலையத்தில் பிரயாணிகளுக்காகவென்று தனித்த வசதிகளுடன் அமையப்பெற்ற அறைகளில் ஜெர்மன் நண்பர் தனது மனைவியாருடன் தங்கியிருந்தார்.

உலகம் சுற்றிப் பல நாடுகளையும் பார்த்திருந்த அவர்களுக்கு, கோவை போன்றதொரு சிறிய நகரத்தில் பஸ் நிலையம் ஒன்றில் ஏற்ற தங்குமிடமும் உபசரிப்பும் கிடைத்தது முற்றிலும் எதிர்பாராததாகவும் பெருமகிழ்வு தரக்கூடியதாகவும் தோன்றியிருக்க வேண்டும்.

அன்னிய நாட்டினரான விருந்தினர் வந்து தங்கியிருக்கும் செய்தியை மறுநாள் நான் அறிந்து அவர்களை நேரில் கண்டு அளவளாவி இருந்தேன். வர்த்தகத் துறையில் மிகுந்த திறமையும் அனுபவமும் படைத்திருந்த குயென்ஸ் பழகுவதற்கு இனிய பண்பினராகவும் காணப்பட்டதுடன் சுற்றுப்பிரயாணம் முடித்துத் தாய்நாடு சென்ற பின்னர் அவர்கள் அழைக்கும்போது நான் ஜெர்மனிக்கு வரவேண்டுமென்றும், அவர்களுடைய நாட்டில் சிறிது காலம் தங்கியிருந்து நாட்டு வளப்பம் காணவேண்டுமென்றும் அன்புடன் என்னை அழைத்தும் போயினர்.

நன்றி பாராட்டி அவர்கள் என்னை அழைத்த போது நானும் ஆகட்டுமென்று தலையசைத்தேன். ஆனால் உண்மையிலேயே, அவர்கள் நாடு திரும்பிய பிறகும் இச்சிறு நிகழ்ச்சியையும் சந்திப்பையும் நினைவில் மாறாமல் வைத்திருந்து என்னை வருமாறு அழைப்பார்கள் என்றோ கடிதங்கள் எழுதுவார்கள் என்றோ நான் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் தற்

செயலாக ஏற்பட்ட சாதாரணமான ஒரு சந்திப்பு ஆழமான நட்பை உண்டாக்கி விடுவதற்குப் போதிய தாகாது என்றே எண்ணினேன். இது நடந்து மாதங்கள் பல கடந்துவிட்டன. ஓர்நாள் ஜெர்மன் தேசத்திலிருந்து எனது முகவரிக்கு வந்த உறையைப் பிரித்த போதுதான் நான் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். குயென்ஸ் தம்பதிகள் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் அனுப்பியிருந்தார்கள். வாக்களித்தபடி என் வருகைக்கு அழைப்பும் அத்துடன் தீட்டியிருந்தார்கள். இவ்வழைப்பை மட்டும் காரணமாகக்கொண்டு உடனே மேனாட்டு யாத்திரையைத் தொடங்கிவிடும் எழுச்சி எனக்கு ஏற்பட்டுவிடவில்லை. நண்பர் குயென்ஸ் அவர்களும் அடுத்து மூன்று ஆண்டுகளின் தொடக்கத்திலும் விடாது அழைப்பு அனுப்பிக் கொண்டே யிருந்தார். இடைவிடாத இந்தத் தூண்டுதலின் காரணமாக 1932 ல் முதல் முதலாக எனது மேனாட்டுப் பிரயாணம் கொழும்பு துறை முகத்திலிருந்து தொடங்கியது.

முகமறியாத மக்களின் இடையில் மொழியறியாத நான் சென்று பழகமுடியுமா என்று ஐயப்பாடும் சிறிது கவலையும் எனக்கு இருந்ததுண்டு. ஏனெனில் உலகப் பொதுமொழியாக உயர்வடைந்து விளங்கக் கூடிய ஆங்கில மொழியில் தடையின்றிப் பேசும் வலிமை அன்னாளில் எனக்கு ஏற்பட்டிருக்கவில்லை. வெளிநாடுகளில் சுற்றித் திரிந்து பல்வேறு அனுபவங்களைப் பெற்ற பின்னாளில்தான் ஆங்கில மொழியை ஒரு கருவியாக உபயோகிக்க முடிந்ததென்று கூற வேண்டும்.

முதல் யாத்திரையின் போதும் சிறிதளவு ஆங்கிலம் தெரிந்திருந்தேன். குறிப்பால் எனது கருத்தை மற்றவர்க்குப் புலப்படுத்தி விடுவதுடன் பிறர் பேசுவதைப் புரிந்துகொள்ளக்கூடிய அளவிலும் எனக்கு ஆங்கிலம் தெரியும்.

மொழி ஒன்றுமட்டுமா, உணவு, உடை, பழக்க வழக்கங்கள் போன்ற பல்லாற்ருனும் புதியதான ஒரு உலகை நோக்கிச் செல்வதான எண்ணமே என்னில் மிகுந்திருந்தது. வானிலே, சூழ்நிலைகளுக்கு ஏற்ற வாறு இறுகிய உடைகள் தேவைப்படக்கூடுமென்று நண்பர்கள் எச்சரித்திருந்தார்கள். எனவே தேவை யான மேனுட்டு முறை உடைகளும் கொண்டு சென் றேன். ஆயினும், பெரும்பாலும் தமிழ்நாட்டு உடை களிலேயே நான் மேலைநாட்டு வீதிகளில் நடமாடிக் கொண்டிருந்தேன் என்று சொல்லலாம். இதன் காரணமாக நான் சிற்சில வேடிக்கையான அனுபவங் களைப் பெற்றேன். பின்னுல் சமயம் வரும்போது ஆங்காங்கு ஒரு சில கூறுவேன்.

உணவு விஷயத்திலும் நான் மிகவும் கண்டிப் பான சைவம் அனுஷ்டிப்பவன். மேனுடு சென்று திரும்பும் நமது நாட்டு இளைஞர்கள், உணவு உடை, நடை ஆகியவற்றில் முற்றிலும் மாறுபாடுடையவர் களாக, விதம்விதமான மதுவகைகளுடனும் வெள் ளைப் பெண்களுடனும் உருமாறித் திரும்பி வருவார் கள் என்ற பேச்சும் எனக்குச் சிறிது மனக்கலக்கத் தைக் கொடுத்தது. இத்தகைய விபத்துக்களில் அகப் படாமல் திரும்பவேண்டும் என்ற அழுத்தமான எண் ணம் என்னில் உண்டாயிற்று. சந்தர்ப்பங்களின் சூழ்ச்சியால் இச்சீரிய கொள்கை, நினைவிலிருந்தும் உணர்விலிருந்தும் ஒழிந்துவிடக் கூடாதென்று எண்ணி, சிறு குறிப்பொன்றை எழுதி உறையில் போட்டு வைத்துக்கொண்டேன். "**மது, மங்கை, மாமி சம் இவற்றைத் தீண்டாதே**" என்பதே அக்குறிப்பு.

இந்தக் குறிப்பு எனக்குப் பல சந்தர்ப்பங்களில் பயன் பட்டதுண்டு. நமது பண்பாட்டுக்கு ஒத்து வராத, மேனுட்டு நாகரீகச் சுழற்காற்றில் சிறியடிக் கும் விபத்துக்களிலிருந்து தப்பி வருவதென்பது எளி தன்று என்ற உண்மையை அத்தகைய சந்தர்ப்பங்

களில் தான் நான் நன்கு உணர்ந்து கொண்டேன். லண்டனிலோ, பாரிஸிலோ அடிவைக்கும் இந்திய மாணவர்கள் ஏன் திசைமாறிப் போய்விடுகிருர்கள் என்பதைப் பளிங்குபோல் காட்டும் சலனப்படம் ஒன்றையும் எனது வெளிநாட்டு யாத்திரைகளில் நான் தயாரித்திருக்கிறேன். மாணவர்களை எதிர் நோக்கும் விபத்துக்களில் நான் குறித்த மூன்றும் முதன்மையானவை என்பது வெள்ளிடை மலை.

கொல்லாமை, புலால் உண்ணுமை என்ற இரு பெரும் நோன்புகளும் மனிதப் பண்பின் உயிர் ஊற்றுக்கள். புலால் உண்ணு நோன்பினனுகிய எனக்கு, எனது முதல் யாத்திரையின்கண், ஐந்தாம்நாள் கடலில் ஏற்பட்ட ஒரு விந்தையான அனுபவம் பல அரிய உண்மைகளைக் கற்பித்ததென்று சொல்ல வேண்டும்.

கொழும்பு துறைமுகத்தைவிட்டு நீங்கி அலைகடலைக் கிழித்துக்கொண்டு சென்ற வங்கத்தின் பெயர் தான் 'ஜார்ஜஸ் பிலிப்பர்' என்பது. இது பிரெஞ்சு நாட்டுக் கப்பல். பிரான்ஸ் மக்களின் சுதந்திரக் கொடி கப்பல் முகட்டில் நிமிர்ந்து வானில் கரம்தூக்கிக் கம்பீரமாக ஆடிக்கொண்டிருக்கக் கரை கண்ணுக்கு மறையும் வரையில் பார்த்துக்கொண்டு தளத்தில் நின்று கொண்டிருந்தேன். என்னுடன் வேறு இரு நண்பர்களும் உடன் வந்தார்கள். மண் வாடை முற்றிலும் மறைந்து எட்டிய வரையிலும் எங்கும் ஒரே நீர்ப்பரப்பும், எத்திக்கும் எங்கள் தலைக்கு மேலும் ஒருங்கே மறைத்துக் கவிந்திருக்கும் வான வெளியும் தவிர வேறு உலகத் தொடர்பே யில்லாத கடற் பிரயாணத்தில் எவ்வளவுதான் தனிமையில் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாலும் நமது மொழியறிந்து நமது மன நிலைமைகளைப் புரிந்துகொண்டு எண்ணங்களை மாற்றிக் கொள்ளக்கூடிய நண்பர்கள் மிகவும் இன்றியமையாதவர்களாகி விடுகிருர்கள். தரையில் நாம் வசிக்கும் மண்வாடைக்கும் நீர்ப்பரப்பில் மிதந்து

செல்லும் சூழ்நிலைக்கும் இடையே எவ்வளவு வேற்றுமை யிருக்கிறது! தரையில் இயற்கையின் வனப்பும், செயற்கையின் திறனும் சேர்ந்த அளவிறந்த காட்சிகள். விந்தைகள் ஆகியவற்றைக் காணலாம். கடலில் கண்ணுக்கெட்டிய வரையில் ஒரே வெள்ளப் பரப்பு! கருமையாகவும் நீலமாகவும் பசுமையாகவும் அந்த நீர்ப்பரப்பை ஒளிரச்செய்து தலைக்கு மேலே கவிந்திருக்கும் வான் கிண்ணியின் ஒளிப்படலம்!

ஆழம் காண முடியாத நீரை மனிதன் வென்று மேலே ஊர்ந்து செல்லும் வெற்றி கப்பலில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையானதாகவே தோன்றும். இயற்கையின் அற்புதமான அழகையெல்லாம் அடிவானத்தில் காலையும் மாலையும் கண்டு களிக்கலாம். இரவின் மோன அமைதியில் வீசிவரும் காற்றில் நின்றுகொண்டு வானத்தில் இறைந்து கிடக்கும் ஒளிக் கோளங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்!

மறுபடியும் கரைக்குச் சென்று விடுவோம் என்ற நிச்சயம் நினைவின் ஆழத்தில் உணர்வாகப் பதிந்திருக்காவிட்டால் கடலின் அகண்டமான பெரும் வியப்பின் முன்னிலையில் நாம் அணுவிலும் அணுவாகிக் கரைந்து நம்மை மறந்துதான் போய் விடுவோம்!

ஜார்ஜஸ் பிலிப்பரில் புதுமையான அனுபவங்களுடன் இப்படி நான்கு இரவு பகல்கள் கடந்த பின்னர் ஐந்தாம் நாள் பொழுது புலர்ந்தது.

ஏன், எப்படி என்று உடனே தெரிந்துகொண்டு விட முடியாதபடி அன்று எங்கள் கப்பல் திடீரென்று தீப்பிடித்துக் கொண்டது.

குதித்து ஓடிவிட முடியாத நடுக்கடலில் கப்பல் தீப்பிடித்துக் கொண்டால் பிரயாணிகளின் மனோநிலை

எப்படியிருக்கும்! எண்ணற்ற பொருள்களையும் உடன் இருக்கும் உற்றார் உறவினரையும் பற்றிச் சிந்திக்க நொடி நேர வசதியும் இல்லாமல் அவரவர் உயிர் பிழைக்க வேண்டுமென்ற துடிப்பில் இன்னது செய்வதென்று அறியமாட்டாமல் திகைத்தார்கள்.

தீப்பிடித்த ஆரவாரத்தில் தான் எனக்கு விஷயம் விளங்கியது. உடன் இருந்த நண்பர்களைத் தேட ஆரம்பித்தேன். நான் தேடும் வரையிலும் அவர்கள் காத்திருக்கவில்லை. திடீரென்று கடலில் பலபேர் குதித்தார்கள். ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் மேல் தட்டில் நின்றுகொண்டு நடைபெறும் விபத்தில் கண் முன் நிகழ்ந்துகொண்டிருக்கும் உயிர் வதைகளையும் தப்புவதற்காக மனிதர்கள் சஞ்சலப்படும் கோரக் காட்சியையும் பார்த்தேன்.

கடைசியில் இத்துணைபேருக்கும் நடுக்கடலில் நாசம் சம்பவிக்கிறது; அதை நானும் சான்றாக நின்று பார்க்கிறேன்; இன்னும் சிறிது நேரத்தில் எனது நிலையும் என்ன ஆகுமென்று சொல்லமுடியவில்லை. ஓலமிட்டு ஓவென்று அழுது பரிதபிக்கும் மக்களின் உயிர்த்துடிப்பைக் கேட்டு இன்னது செய்வதென்று தெரியவில்லை. எவ்வளவு உரக்கக் கூச்சலிட்டாலும் கண்ணுக்கெட்டாத நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கும் கரையிலிருந்து யார் உதவிக்கு ஓடிவரப் போகிறார்கள்!

உயிர்ப் படகுகள் சில இருந்தன. அவற்றில் குதித்துப் பலபேர் நீரில் மிதந்துகொண்டிருந்தார்கள். வேறு சிலர்-கடலில் குதித்து நீந்திக்கொண்டிருந்தார்கள். கடல் மீன்கள்—பெரிய பிராணிகள்—சிலரைக் கவ்விக்கொண்டு நீரில் வாலடித்துச் செல்லும்போது அவர்கள் அலறிய அலறல், அப்பப்பா, இப்போது நினைத்தாலும் அந்தக் காட்சி மிகப் பயங்கரமானது.

அருகே நின்றிருந்த இரு பெண்கள் ஒன்றும் தோன்றாமல் வெறி பிடித்தவர்கள் போல் கடலில் குதித்தார்கள். ஏதோ வேகத்தால் உந்தப்பட்டு நானும் நீரில் பாய்ந்தேன்.

நீரில் நெடுநேரம் போராடிக்கொண்டிருந்த போது அந்தப் பெண்கள் இருவரையும் கரங்களால் இழுத்துக்கொண்டு நீந்த வேண்டியதாயிற்று. நீரில் குதித்து மற்றவர்களுக்கும் துணைபுரிவதென்றால் அதை ஒரு தற்கொலை யென்றே கூறிவிடலாம்.

நல்ல வேளையாகக் கையருகே உயிர்ப் படகு ஒன்று ஊர்ந்துகொண்டிருந்தது. மெதுவாக அந்தப் பெண்களையும் என்னையும் உயிர்ப் படகில் தொத்த வைத்துக் கொண்டேன். படகில் ஏறிக்கொண்டு திரும்பிப் பார்க்கும்போது தூரத்தில் கப்பல் பற்றி யெரிந்துகொண்டிருந்தது.

தற்செயலாக அவ்வழியே வந்துகொண்டிருந்த ரஷ்ய எண்ணெய்க் கப்பல் உதவிக்கு வந்து சேர்ந்தது. ஜார்ஜஸ் பிலிப்பரிலிருந்து மீட்கமுடிந்த ஆட்களுடன் ரஷ்யக் கப்பலில் நாங்கள் மீண்டும் எங்கள் அபாயமான பிரயாணத்தைத் தொடங்கினோம். நான் தப்பித்துக்கொண்டதுடன், என்னுடன் உயிர் தப்பிய பெண்மணிகளில் ஒருத்தி சைனாக்காரி, மற்றொருத்தி ஆங்கில மாது என்பதையும் அறிந்தேன். எனது நண்பர்களும் தப்பித்துக் கொண்டார்கள்.

பலர் கடலில் மீன்களுக் கிரையானார்கள் என்பதையும் மணிக் கணக்கில் நீரில் போராடிக் கொண்டிருந்த எனக்கு, கடல் பிராணிகளால் எவ்வித அபாயமும் நேரவில்லை யென்பதையும் எண்ணுங்கால் அது வெறும் தற்செயல் என்று கூறிவிடலாம். கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகிய கோட்பாடுகளை யுடைய ஒருவனை வேறு பிராணிகளும் தீண்டக்கூடா

தென்று கருதித்தான் மன்னித்து விட்டனவென்றும் கட்டுரைக்கக் கூடுமன்றோ!

கடற் பிராணிகளின் மனோதத்துவங்களை இங்கு ஆராய்ந்து நிச்சயிக்க முயல்வது வெறும் கலையழகு பொருந்திய செயலாகத்தான் இருக்கக்கூடும். ஆனால் அந்த மா விபத்தில் மனித மனோபாவத்தைப் பற்றி நான் அறிந்துகொண்ட உண்மைகள் மகத்தானவை என்பதில் சிறிதும் ஐயமின்று.

சர்வ நாசத்தின் எல்லைக்கோட்டில் மக்கள் நின்று தவித்தார்கள். சுகமான வாழ்க்கையமைப்பில் எவ்வித விபத்துக்களோ உயிர்வாதையோ ஏற்படாத அமைதியான நேரங்களில், தாய் தந்தை பெண்டு பிள்ளை, சொத்து சுகம் என்ற பிரிவினைகளிலும், பாசங்களிலும், உடமை உணர்ச்சியிலும் தோய்ந்து கிடக்கிறார்கள் மனிதர்கள். தன்னைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு துயரம் விளைந்தால் அதனைப் போக்குவது தன் கடமையென்றெண்ணி முன்வந்து பணங் காசுகளை லட்சியமின்றிச் செலவிடவும் செய்கிறார்கள். இவையெல்லாம் தனது உயிருக்கு அபாயம் ஏற்படாத வரையில்தான்.

மரணத்தின் பயங்கரமான குகை வாசலில் ஒவ்வொருவனும் நுழைந்து திரும்படியான நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் போது அவனவனும் தன்னுடைய உயிர் ஒன்றைப் பற்றித்தான் கவலையும் பரபரப்பும் கொண்டு துடிக்கிறான். மற்றவர்களையும் மற்றவற்றையும் அறவே ஒரு கணம் மறந்தே போய் விடுகிறான். இந்த நேரத்தில் ஏற்றத் தாழ்வுகள் சாதிப் பிரிவுகள், உறவு, நட்பு, தேச பக்தி, உயிர் இரக்கம் யாவும் பஞ்சாய்ப் பறந்து போய்விடுவதை நேருக்கு நேர் கண்டேன்.

இத்தகைய புதிய அனுபவங்களுடன் பெரும் சாகஸம் புரிந்து வெற்றி பெற்ற வீரர்களில் ஒருவன்

என்ற உணர்வில் கப்பல் பிரயாணம் தொடர்ந்தது. ஜார்ஜஸ் பிலிப்பர் என்ற பிரெஞ்சுக் கப்பலில் கொழும்பு துறைமுகத்தில் புறப்பட்ட நாங்கள் ரஷ்ய எண்ணெய்க் கப்பல் பிரயாணிகளாக ஜிபூதி என்னும் துறைமுகத்தில் வந்திறங்கினோம்.

## ஜெர்மனியில்

இந்தத் தடைகளை யெல்லாந் தாண்டி இறுதியாக மார்ஸேல்ஸ் வந்தடைந்தோம். ஆவலுடனும் வரவேற்கக் காத்திருந்த ஹாம்பர்க் நகரத்து நண்பர்களை நாடிச் சென்றேன். மூன்றுண்டுகளாக எதிர்பார்த்துக் காத்திருந்த நண்பர்கள் ஆவலுடனும் அன்புடனும் வரவேற்று உபசரித்தார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. என்னுடைய கப்பல் பிரயாணமும் தீ விபத்தும், தப்பிவந்த தீரச்செயலும் சுவைமிகுந்த கதையாகவும் சோகம் நிறைந்த சரித்திரமாகவும் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். மேலெல்லாம் இருந்த ஆருத காயங்களைக் கண்டு அவர்கள் வேதனைப்பட்டனர்.

நண்பர் குயென்ஸ் அந்த நகரத்துப் பிரபல வர்த்தகரென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். இருபதாம் நூற்றுண்டில் ஏற்பட்ட முதல் மகா யுத்தத்திற்குப் பின்னர், துயின்று கிடந்த ஜெர்மனியை மறுமலர்ச்சி பெறச் செய்ய வந்த ஹிட்லரின் மகோன்னதமான ஆட்சியின் பாலைப் பருவத்தில் அந்த நாட்டின் கைத்தொழில், பொருளாதார வளர்ச்சியை நேருக்கு நேர் காணும்படியான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த மக்களின் தொழில் ஊக்கமும், சுறுசுறுப்பும் தேசிய ஆர்வமும் இப்படி ஒரு தனித் தலைவனுல் உருவாக்க முடிந்தவை என்பதை எண்ணும்பொழுது நான் அடைந்த வியப்பைவிட, புதிய தத்துவம் என்று கூறப்படும் ஜனநாயக அமைப்பில் கூட இவ்வளவு வெற்றி சாதிக்கப்படக் கூடியதுதானு என்ற சிந்தனையே எனக்கு உண்டாயிற்று.

ஓர் இரவு தங்குவதற்கு இடவசதி செய்து கொடுத்த நன்றிக்காகத் தங்கள் நாடு முழுமையும் நான் சுற்றிக் காண்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து உடனிருந்து உதவிய அந்த ஜெர் மன் தம்பதிகளின் பண்பும் அன்பும் சாதாரணமாக எங்கும் காணக்கூடியவை அல்ல.

ஜெர்மனியில் ஹெய்ல்பிரோன் என்னும் இடத் தில் ஒரு தொழிற்சாலைக்குச் சென்றிருந்தேன். எனது தயாரிப்பான ரேசண்ட் பிளேட்' க்ஷவரக் கத்தியைப் பரிசோதனை செய்துபார்த்தேன். இங்கே எனக்கு வேடிக்கையான ஒரு அனுபவம் ஏற்பட்டது. அந்தத் தொழிற்சாலையில், பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஜெர்மனிய மங்கை ஒருத்தியும் வேலைசெய்து கொண்டிருந்தாள். ஏற்கனவே இரண்டு முறை மணம் முடித்து ரத்து செய்துகொண்ட 'பிரம்ம சாரிணி' அவள். மூன்றுவதாக என்னை வரிக்க அவள் விரும்பினுள். தன்னை மணக்கும்படி ஒரு ஆணைப் பெண் வலியக் கேட்கும் பண்பாடு நமது மரபுக்கு முற்றிலும் மாறுனதல்லவா? நான் திகைத்துப் போனேன். பையில் நான் எச்சரிக்கையாக எழுதி வைத்திருந்த அந்தக் குறிப்பு என் நினைவுக்கு வரா விட்டாலும் கூட ஒரு ஜெர்மன் மனைவியுடன் இந்தி யாவுக்குத் திரும்பி வரவோ, அங்கேயே தங்கி விடவோ கூடிய அளவுக்கு என்னை மறந்து போய் விடுவேன் என்ற ஐயம் எனக்கில்லை. அவள் உரைத் தாள் "எனக்கு இரண்டு முறை வாழ்வில் காதல் கசந்துபோய்விட்டது. பழைய மணவாளர் இருவரும் என்னைவிட என் பணத்தையே மிகவும் காதலித்தார் கள், இந்த ஜெர்மன் ஆண்களே இப்படித்தான் என்னை நீங்கள் ஏற்றுக்கொண்டால்......? இந்தியர் கள் மிகவும் அன்புள்ள கணவர்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றெல்லாம் அன்புரை கூறினுள். பாவம், பெண்ணைப் பணயம் வைத்துச்

சூதாடிய இந்திய புராண நாயகர்களைப் பற்றி அவள் கேள்விப்பட்டதில்லை போலும் என்றெண்ணி எனக்குள் சிரித்துக் கொண்டேன். இல்வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் எளிதில் நீங்க இயலாத நமது பண்புக்கும் மேனாட்டு முறைக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது.

என் மீது அவளுக்கு மனஸ்தாபம்தான். இருந்த போதிலும் அந்த ஆண்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களில் அவளிடமிருந்து வந்த தபாலில் அவளது கைச்சாற்றிட்ட புகைப்படமும் தனது உணர்ச்சியைப் புலப்படுத்தும் இரண்டொரு எழுத்துக்களும் இருந்தன. அவளுடைய கடிதத்தில் "... நீங்கள் தான் என்னை விரும்பவில்லை என்றாலும் தங்களுக்கு ஆரோக்கியமான புத்தாண்டு ஆனந்தமான கிறிஸ்துமஸும் கிடைக்கவேண்டுமென்று வாழ்த்துகிறேன்" என்று எழுதியிருந்தாள். எப்படி ஜெர்மன் கதாநாயகி!

## லண்டனில்

நான் லண்டன் நகரம் சென்றிருந்தபோது மதிப்பிற்குரிய நண்பர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களை அங்கு சந்தித்தேன். ஆனால் என்னையும் என் உடையையும் கண்டபோது அவர் திடுக்கிட்டுப் போனார். நான் அங்கு சென்று தங்கியிருக்கும் போது இரண்டொரு மாதங்களுக்குப் பின்னர் ஏதோ அரசாங்க அலுவலாகச் செட்டியார் அங்கு வந்து சேர்ந்தார். அவர் வருகையை அறிந்து ஒரு நாள் அதிகாலையில் அவர் தங்கியிருக்கும் விடுதிக்குச் சென்றேன். என்னை எதிர் கொள்ள வெண்ணி அவர் கீழே இறங்கி வந்தார். மேனாட்டாரைப் போல உடை யுடுத்திருந்த நண்பருக்கு, கோயமுத்தூர்ப் பேர்வழி தனது சொந்த நாட்டு தோவத்தியும் சட்டையும் போட்டுக் கொண்டு அந்நிய நாட்டில் தன்னைப் பார்க்க வந்தது பெரும் வியப்பை அளித்திருக்க

வேண்டும். மேலை நாட்டுப் பழக்க வழக்கங்களின் நடுவில், பலருடைய கவனத்தையும் விசித்திரமான முறையில் கவரும் எனது தோற்றம் அவருக்குத் திகைப்பை உண்டாக்கி விட்டது, அந்த நிலையில் என்னுடன் வெளியில் நாலுபேரறிய சுற்றித்திரிய அவருக்கு ஒப்பில்லை. என்னைப் புறக்கணித்துப் போய் விடாமல், முதல் வேலையாக என்னைக் கடைக்கு அழைத்துச் சென்று வெள்ளைக்கார உடைகள் வாங்கிக் கட்டாயமாக அணிவித்தார். எனக்கு அதன் அவசியம் தோன்ருவிட்டாலும் கூட, நண்பரின் விருப்பத்தைத் தடுக்க மனமில்லாமல் தொப்பியும் சராயும் மாட்டிக்கொண்டேன். அந்த உடைகள் இன்னமும் என்னிடம் இருக்கின்றன. சில சமயம் வேடிக்கைக்காக அவற்றை அணிவதுண்டு. ஆயினும் இந்தியாவில் நான் அவற்றைப் பயன் படுத்துவதேயில்லை.

இந்த யாத்திரையில் பெரும்பாலும் ஆங்காங்கு நாடுகளைச் சுற்றிப் பார்த்துக் காட்சி இன்பங்கள் பெறுவது தான் முதன்மையாக இருந்தது. தீப் பிடித்த கப்பலில் எரிந்து போன சில குறிப்புகள் போய் விட்டமையால், திட்டப்படி, குறித்த செயல்கள் அனைத்தையும் செய்துவிட முடியவில்லை.

மோட்டார் பஸ் போக்குவரத்துத் துறையிலும் அது சம்பந்தமான கருவி, அமைப்புகளிலும் எனக்கு ஏற்பட்டிருந்த பயிற்சி காரணமாகவும் அந்தத் துறை பற்றிய மேனுட்டு முறைகள் பலவற்றையும் கண்டறிய வேண்டும் என்ற ஆவலினுலும் பொருத்தமான இடங்களையும் ஸ்தாபனங்களையும் சென்று அறிமுகம் செய்து கொண்டேன். சந்தடியும் ஜன நெருக்கமும் மிகுந்த நகரங்களில் போக்கு வரத்து வேலை எப்படி நடைபெறுகிறது என்பதை ஆராய்வதில் அளவற்ற ஊக்கம் கொண்டிருந்தேன். புதிய புதிய யந்திரக் கருவிகளைக் கண்டுபிடித்தவர்களான

அறிஞர்கள் பலருடன் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அந்த நாடுகளில் மக்களையும் பழக்க வழக்கங்களையும் காணும் போது அவற்றைப் பற்றி ஆராய்ந்து அறியும்போதும் ஏற்பட்ட வியப்பும் மதிப்பும், இந்தியாவைப் பற்றி அறிவதிலே அந்த நாட்டினர்க்கு ஏற்பட்ட ஆவலுக்குச் சமமாகத்தான் என்னைச் சொல்லவேண்டும். ஆங்காங்கு சிறு சிறு கூட்டங்களிலே எனக்குத் தெரிந்த "அற்புதமான" ஆங்கிலத்தில் "சொற்பொழிவுகள்" நிகழ்த்தியும் வந்து மொய்த்த பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டிகள் அளித்தும் இந்தியாவைப் பற்றிய அவர்களின் வினாக்களுக்கு விடையிறுக்கும் இனிமையான பொழுதுபோக்கு என்னுடையதாயிற்று. இத்தகைய நிகழ்ச்சிகளினால் ஆங்கில மொழியோடு எனக்கு நல்ல தொடர்பு ஏற்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஜெர்மன், லண்டன் நகரத்தில் சிறிது காலம் கழித்தபின் புத்துலகம் என்று அழைக்கப்படும் அமெரிக்க நாடுகளில் பின் எனது சுற்றுப்பிரயாணம் தொடர்ந்தது. அங்கிருந்து கடல் வழியாக ஜப்பான், மஞ்சூரியா, கொரியா, மங்கோலியா, சைனு, இந்தோ சீனு, மலேயா முதலிய கீழ் நாடுகள் வழியே எனது ஓராண்டு உலக யாத்திரையை மறுபடியும் இலங்கையிலேயே வந்து முடித்தேன்.

எனது முதல் மேனுட்டுப் பிரயாணம் பெரும் விபத்துக்கள் நிறைந்தது என்று கூறலாம். இவ்வளவு காலத்திற்குப் பிறகு அவற்றை நினைக்கும் பொழுது சுவையான கதையொன்றை நினைவுபடுத்திக் கொள்வது போலத்தானிருக்கிறது.

வழியிடையில் ஏற்பட்ட ஒரு சில ஆபத்துக்களைப் பற்றிக் கூறுவிட்டால் முதல் பிரயாணம் முற்றுப் பெறுமெனக் கருதுகிறேன்.

நகர்ப் புறங்களுக்குச் சென்றிருந்த நான் லண்ட னுக்குத் திரும்பி வருவதற்காக எக்ஸ்பிரஸ் ரயிலுக் குப் பிரயாணச் சீட்டுப் பெற்று முன்கூட்டி இடம் ஒதுக்கி வைக்கும்படி ஏற்பாடு செய்திருந்தேன். ஆயி னும் குறித்த நேரத்திற்கு முன்னமேயே எனது அலு வல்கள் முடிந்து விட்டமையால் புகையிரத நிலையம் வந்துவிட்டேன். நான் திட்டமிட்டிருந்த எக்ஸ்பிரஸ் வண்டி புறப்படுவதற்கு சில மணிநேரங்களே இருந் தன. அதற்கு முன்னமேயே புறப்படும் சாதாரண வண்டி ஒன்று தயாராக இருந்தது. காத்திருந்தது, நில்லாது நேரே செல்லும் வண்டியில் தலைதெறிக்கப் போவதைவிட, ஆங்காங்கு நின்று செல்லும் சாதா ரண வண்டியில் நிலையந்தோறும் காட்சிகள் கண்டு செல்லலாம் என்று எண்ணம் உதித்தது. அந்த வண் டியில் புறப்பட்டு நான் லண்டன் வந்தேன். ஆனால், நான் புறப்படத் திட்டமிட்டிருந்த எக்ஸ்பிரஸ் வண்டி ஏதோ ஒரு இடத்தில் கவிழ்ந்து, பெரும் விபத்திற்கு உள்ளாகிவிட்ட தென்றும் சேதம் மிக அதிகம் என்றும் அறிந்தேன். தலைக்கு வந்தது பாகை யோடு போயிற்று என்றாலும் விபத்துக்களிலிருந்து மயிரிழையில் நான் தப்பித்துக்கொள்ளும்படி நேரும் சம்பவங்களை எண்ணிப் பெரு மூச்சுவிட்டேன்.

உலகத்திலேயே தொழிலூக்கம் மிகுந்தவர்களும் ஆனால் உருவத்தில் 'வாமனாவதாரங்களும்' ஆகிய ஜப்பானியரின் தாய் நாட்டை சுற்றிப் பார்த்துவிட்டு டோக்கியோவிலிருந்து கொரியாவிற்கு விமானப் பிரயாணம் புரிந்தேன். ஜப்பானியத் தீவுகளை விட்டு, கடலுக்கு மேலே விமானம் பறந்து கொண்டிருக்கும் பொழுது வானிலை திடீரென்று மாறுதலடைந்தது. பயங்கரமான பேய்க்காற்றில் சிக்கி. சிறிது நேரம் விமானம் தத்தளித்தது. ஆனாலும் எப்படியோ விமானம் நிலையம் சேர்ந்துவிட்டது. அன்று கடற் கரைப் பிரதேசங்களிலுள்ள அநேக வீடுகள் நாச

மடைந்தனவென்றும் பின்னல் அறிந்துகொண்டேன். சண்டமாருதத்தில் சிக்கி ஹார்பின் கடல் நீரில் சில கப்பல்கள் அமிழ்ந்தும் போய்விட்டன.

கப்பல், ரயில், விமானம் அனைத்தும், விபத்துக்களை விருந்தாகக் கருதி என்னை உபசரித்ததைப் போல், சீனத்துக் கொள்ளைக்கூட்டமும் என்னைப் பரிவுடன் (!) உபசரித்தது. சைனுவில் பீக்கிங் நகரிலிருந்து கோபி பாலைவனத்தைக் கடந்து சரித்திரப் பிரசித்தமான சைன பெரிய மதிற்சுவரைப் பார்த்து விட்டு மங்கோலியாவை நோக்கிச் செல்லுகையில் ஓர் கொள்ளைக் கூட்டமும் நியதிப்படி என்னையும் வழி மறித்தது. என்றுலும் கருணையினுலோ கவைக்கு உதவாததனுலோ கடலும் வானும் தந்த மன்னிப்பை அவர்களும் குறைவின்றி அருளிப்போனுர்கள். அந்தப் பக்கங்களில் இம்மாதிரி கொள்ளைகள் மிகவும் சகஜம்.

"ஜார்ஜஸ் பிலிப்பர்" கப்பல் தீப்பிடித்த சம்பவம் பத்திரிகைகளுக்குச் சுவையுள்ள செய்தியாகையால் அந்த அழிவின் வர்ணனைகளில் ஏறிச்சென்ற பிரயாணிகளின் பெயர்களுக்கும் இடம் கிடைத்தது. விபத்தில் நான் அகப்பட்டுக்கொண்டு தப்பிப் பிழைத்ததும் சுற்றுப் பிரயாணம் முடித்துப் பின் இந்தியா திரும்புவதும் முக்கிய பத்திரிகைச் செய்தி - அறிக்கைகளாயின. இலங்கையிலிருந்து நேரே சென்னைக்கு வந்தேன். என்னை வரவேற்பதற்காக நண்பர்கள் பலர் ஆவலுடன் காத்திருந்தார்கள்.

ஊரை விட்டுச் சில நாள் வெளியே இருந்துவிட்டுத் திரும்பினுலே, சொந்த ஊரில் கொஞ்சம் மதிப்பு அதிகம் தானே! வெளி நாட்டுக்கே போய் விட்டு வந்தால் கேட்க வேண்டுமா? மேலும் தீப்பிடித்த கப்பலில் "ஆம்புலன்ஸ்" வேலையும் பார்த்து "தீரச்செயல்கள்" வேறு புரிந்து வந்திருக்கும்

எனக்கு, நான் கொழும்பிலிருக்கும் போதே வாழ்த்துக்கூறி, சென்னையில் ஒரு பாராட்டுக்கூட்டம் ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஆனால் நான் நண்பர்களின் "அன்பையும் வரவேற்பையும் விபத்தி(?)ற்குள்ளாக்கக் கருதி சென்னை எழும்பூருக்கு முதல் நிலையத்திலேயே இறங்கி ஒருநாள் தாமதித்து நகருக்குச் சென்றேன். என்றாலும் இந்த விபத்தி(?)லிருந்து மட்டும் நான் தப்பித்துக்கொள்ள முடியவில்லை.

---

# மறுமுறையும்

உருசி கண்ட பூனே உறியைத் தாவும் என்று சொல்லப்படுவது போல சுற்றுப் பிரயாணங்கள் புரிந்து பழக்கப்பட்டுவிட்டால் மேன்மேலும் அந்த ஆவல் வளர்ந்துகொண்டே யிருக்கும்.

உண்மையிலேயே அனுபவ ஞானம் பெறவிரும்பும் ஒவ்வொரு மனிதனும் பல நாடுகளைச் சுற்றிப் பார்க்கவேண்டியது இன்றியமையாததே யாகும். பூகோள அமைப்பாலும் சீதோஷ்ண மாறுதல்களாலும் நாட்டுக்கு நாடு, மனித சமூகங்கள் பல பிரிவுகளில் இயங்கி நின்றபோதிலும், மானிடப் பண்பு என்ற ஒரு அம்சம் உலகெங்கும் ஒரே தரத்தினதாக அமைந்திருப்பதைக் காணலாம். எனினும் இயற்கையின் வளத்துடன் செயற்கையின் அறிவையும் பயன்படுத்தி உயர்ந்த வாழ்வு பெற விரும்பும் முயற்சியில் பல்வேறு நாட்டினர் எத்தகைய ஊக்கமும் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள் என்பதை நேரில் அறிந்து உணர்ந்துகொள்வதைப் போன்ற கல்வி, பாடசாலைக் கட்டிடங்களின் நான்கு சுவர்களின் இடையில் பெறுதல் இயலாது. ஏட்டுப் படிப்பைவிட எதிரே விரிந்திருக்கும் உலகியல் அறிவைப் பெறுவதே மனிதன் பெறத்தகுந்த அடிப்படைக் கலைஞானமாகும். கல்லூரிகள், கலைக்கூடங்கள் ஆகியவற்றிலும்கூட மாணவர்கள் உல்லாசப் பிரயாணங்களை மேற்கொள்ளச் செய்வது நம் நாட்டிலும் உண்டல்லவா? கண்டு, கேட்டு, உணர்ந்து, பயின்று, வாழ்வைப் புரிந்துகொள்ள மாணவர்க்கு உதவி செய்வதே இவற்றின் நோக்கம்.

மறுமுறையும் ஐரோப்பிய யாத்திரை புறப்பட வேண்டுமென்ற எண்ணம் எனக்கேற்பட்டது. புறப்

பட்டேன் என்று சொல்லவேண்டியதில்லை, அது மட்டுமல்ல, இதுவரை நான் நான்கு தடவைகள் வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறேன். ஒவ்வொரு யாத்திரையும் பலப்பல மாதங்கள் நடைபெற்றிருக்கிறது. இயற்கையாகவோ, செயற்கையாகவோ என்னை, இந்தப் பிரயாண மோகம் கவ்விக்கொண்டு விட்டதென்றுதான் சொல்லவேண்டும். இந்தியாவில் இருக்கும் காலங்களில்கூட, சேர்ந்தாற்போல நாட்கள் பலவற்றை ரயில் வண்டியிலேயே போக்குவதுண்டு. ஆயினும் இத்தகைய பிரயாணங்கள் பெரும்பாலும் புத்தகங்களைப் படிப்பதற்கு என்று திட்டமிடப்பட்டவையே யாகும்.

அன்றாடம் வந்து குவிந்துகொண்டிருக்கும் பல நாட்டுப் பத்திரிகைகள், பல்வேறு கலைத்துறைகள் பற்றிய நூல்கள் ஆகியவற்றை முழுதும் விடாமல் படிப்பதுடன், சேமிக்கத்தக்க கருத்துக்களை குறிப்பிட்டுத் தொகுக்கும்படி செய்வதற்காகவும் தொடர்ந்து படிப்பைத் தவிர வேறு செயல்களை ஒதுக்கிவைக்க நேரிடுவதுண்டு. இந்த நாட்களில் தனிமையும் அமைதியும் வேண்டியே குறிப்பிட்ட காலம் முழுவதும் ரயில்வண்டி வாசமாக என்னை நான் ஆக்கிக்கொள்வேன்.

படிப்பதற்காக எடுத்து வைத்திருக்கும் நூல்கள், பத்திரிகைகளுடன் முதல் வகுப்புப் பெட்டி ஒன்றை "ரிசர்வ்" செய்துகொண்டு கோவையில் ஏறி அமர்ந்துவிட்டால் சென்னை வரையிலும் சென்று, அதே வண்டியில் திரும்பிச் செல்லும் எல்லைவரை பிரயாணம் செய்து—மறுபடியும் சென்னை—பழைய படி கோவை—இப்படி நான்கு நாட்கள்கூட சில சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக இடையறாமல் புகையிரத வாழ்க்கை பயின்றிருக்கிறேன். படிப்பு தவிர வேறு வேலைகளை சிந்திப்பதும், புகையிரத நிலையத்தை யகன்று வெளியே செல்வதும் இல்லை.

எந்த சுற்றுப்பிரயாணத்தையும் தொடங்குமுன்பாக, சந்திக்க வேண்டிய இடங்கள், நண்பர்கள், கவனிக்கவேண்டிய வேலைகள், காணத் தகுந்த காட்சிகள் ஆகிய பலவற்றையும் வகைப்படுத்திக் குறிப்பு தயாரித்து வைத்துக்கொள்வது என் வழக்கம். இதனால் காலவிரயமும், பொருள் அழிவும் நேராமல் அருமையான பிரயாணத்தின் வாய்ப்பை நன்கு துய்ப்பதற்கு இயலுமன்றோ!

வழிப்பயணத்துக்கும் பேச்சுக்கும் உற்ற நண்பர்கள் இருந்தால், கிடைக்கும் உதவியும் இன்பமும் போன்று, மிகுந்த பயனுடைய ஒரு பொருள் புகைப்படக் கருவி.

வெளிநாட்டு யாத்திரைகளிலும், உள் நாட்டுப் பிரயாணங்களிலும் காமிராவைப்போல நல்லதொரு அந்தரங்கக் காரியதரிசி கிடையாதென்பதே என் அனுபவம்.

காட்சிகளையும் எண்ணற்ற நண்பர்களையும் நிகழ்ச்சிகளையும் எந்நாளும் நமது நினைவிலேயே வைத்துக் கொள்வதென்பது இயலாத காரியம். காமிராக்கண்கள் சிறிதும் பிழையின்றி, நினைவின் நிலைதவறாமல் கண்டவற்றையெல்லாம் அப்படியே பதிவுசெய்து விரும்பியபோது நமக்கு நினைவூட்டுமன்றோ! நான்கு தடவைகள் வெளிநாடுகளில் திரிந்திருந்தபோதிலும் இவை நடைபெற்ற இருபதாண்டு எல்லைக்குள் நினைவில் இறுத்திவைக்கத் தகுந்த அனுபவங்கள் பெரும்பாலும் என்னில் பசுமையாக நிலைபெற்றிருக்கின்றன. ஆயினும் எந்நாளும் என்னுடைய மார்பிலும் தோளிலும் கச்சையிலும் தவழ்ந்து பொருந்திக்கிடந்த அருமைத் தோழனாகிய புகைப்படக் கருவி, மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என்பதில் ஐயமில்லை.

மோட்டார் போக்கு வரத்துத் துறையிலும், அது சம்பந்தமான யந்திர விஞ்ஞானத்திலும் நெஞ்சைப் பறிகொடுத்துவிட்ட எனக்கு பலவேறு நாடுகளிலும் இந்தத்துறை பற்றிய விரிந்த அனுபவமும், புத்தறிவும் பெறவேண்டுமென்ற ஆவல் எழுந்தது தான் இரண்டாவது முறையாக நான் மேற்கு நோக்கிச் செல்லக் காரணமாயிற்று. நான் சென்ற நாடுகள் பெரும்பாலும் எனக்கு முன்னமேயே பழகிப் போனவையாக இருந்தபடியாலும், முதல் தடவையில் நான் நட்புரிமை கொள்ளும்படி வாய்த்த அருமை நண்பர்கள் இத்தடவை என்னை வரவேற்று வேண்டிய வசதிகள் செய்து உதவியதாலும், நாட்டு வளமும் தொழில் சிறப்பும் நின்று ஆராய்ந்துணர்ந்து கொள்ள, சௌகரியமாயிருந்தது. நான் சென்ற நகரங்களிலெல்லாம் குறிப்பிட்ட இடத்தின் பெயரைச் சொல்லி நான் விசாரிக்கும்பொழுது வண்டிக்காரர்களும ஊர் சுற்றிக் காட்டும் வழிகாட்டிகளும் என்னை அந்த இடங்களைப்பற்றி மிகவும் அறிந்தவன் என்றே எண்ணிக்கொள்வார்கள்.

நம்முடைய நாட்டில் மாந்தரின் வாழ்க்கைத் துறையில் பல்வேறு நிலைகளையும் பற்றிய கசப்பான அனுபவங்கள் எனக்கு நிறைய உண்டு. கால் நூற்றுண்டுக்கு மேலாக மோட்டார் போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டிருக்கும் கண்டக்டர்கள், டிரைவர்கள் போன்றவர்களை ஒழுக்கமும் பொறுப்பும் உடையவர்களாகச் செய்வதிலே பெருந் தொல்லைகளைக் கண்டிருக்கிறேன். அதிகாரத் திமிரும் கைக்கூலி பெறும் இழி இச்சையும் நிறைந்த பொது ஊழியர்களையும் எதிர்த்துப் போராட நேர்ந்திருக்கிறது. சமூகத்தின் அமைதிக்கும் கட்டுப்பாட்டுக்கும் காவலர்களாக இருக்கவேண்டிய போலீஸ் இலாக்காவின் ஒழுக்கக் கேடுகள் அனைத்தையும் கண்டு நாணத்தால் நான் நலிவுற்றிருக்கிறேன், விபத்தில் சிக்கித் தவித்

தோறும் பிணியால் வருந்துகிறவர்களும் அன்பும் ஆதரவும் பெற்றுச் செல்லவேண்டிய மருத்துவசாலைகளில் ஆளுக்கு ஆள் பணத்தையே அடிப்படையாகக் கொண்டு பாரபட்சம் காட்டப் படுவதைக் கண்டு கலக்கம் எய்தியதுண்டு. பெரிய தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் ஊழியர்கள் தொழில் சிறிதும் பற்றுதல் இல்லாது கடமைகளைப் புறக்கணித்து வெறும் உரிமைக் கூச்சல்கள் போடுவதன் காரணமாக முன்னேறவேண்டிய பல தொழில்கள் முடங்கிக் கிடப்பதையும் அறிவேன்

எனவே வேற்று நாடுகளில் பல்வேறு துறைகளிலும் மாந்தரின் பண்பினையும் ஊக்கத்தையும் ஊன்றி ஆராய்வதிலே எனக்கு அளவிறந்த ஆவல் இருந்தது. இத்தகைய ஆராய்ச்சியில் நான் புரிந்த பரிசோதனைகளும் கண்டறிந்த முடிவுகளும் எண்ணிறந்தன. மனோ தத்துவ ஆராய்ச்சியாளர்கள் இவற்றைப் பயன்படுத்தினுல் சிறந்த தத்துவ விளக்கங்கள் தயாரிக்கலாம்.

விரிவஞ்சி ஒரு சில நிகழ்ச்சிகளையே இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கலாம். இங்கிலாந்தில் மக்களின் நாணயம் எனக்குப் பெரும் மகிழ்வு கொடுத்தது. நாணயம் என்று நான் இங்கு குறிப்பிடுவது சமூக வாழ்வில் மக்கள் பயிலும் ஒழுக்கம் என்பதையே பொருள் கொண்டு கூறுகிறேன்.

## லண்டனில் நாணயம்

லண்டன் மாநகரத்திலுள்ள தபால்காரர்களின் திறமையைப்பற்றி நான் கேள்விப்பட்டிருந்தேன். அவர்களுடைய பொறுப்பையும் திறமையையும் சோதித்து அரியவேண்டுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. கூட்டத்தில் பிரிந்துவிட்டால் எளிதில் தேடிக் கண்டுபிடிக்க இயலாத ஜன நெருக்கடி

மிகுந்த நகரங்களிலே லண்டன் ஒன்று. அவ்வளவு பெரிய நகரில் போதுமான விபரங்கள் கொடுக்காமல் 'ஜி. டி. நாயுடு லண்டன் W. C. I.' என்று மட்டும் விலாசம் தீட்டி நானே ஒரு கடிதம் எழுதி, தபால் பெட்டியில் போட்டுவிட்டு, நான் தங்கியிருந்த இடத்திற்குப் போய்விட்டேன். நேரான விலாசம் கொடுத்திருந்தால் எவ்வளவு உரிய நேரத்தில் அந்தக் கடிதம் எனக்குக் கிடைத்திருக்கக் கூடுமோ அதே நேரத்தில் கடிதம் எனக்கு வந்து சேர்ந்தது என்பதைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்,

இந்தியாவிலும், நாணயமும் பொறுப்பும் வாய்ந்த இலாக்காக்களில் சிறந்ததாகத் தபால் இலாக்காவைச் சொல்லக்கூடும். பல ஆண்டுகளுக்குப் பின்னுல் விலாசதாரரைக் கண்டுபிடித்துக் கடிதங்கள் சேர்க்கப்பட்டன என்ற செய்தி சிலசமயங்களில் பத்திரிகைகளில் வருவதுண்டு. ஆனுல் லண்டன் நகரத்துத் தபால்காரர்கள் காலத்தையும் வீணுக்காமல் கடமையையும் சரியாகச் செய்கிறுர்கள் என்பது பாராட்டுக்குரியதன்றே !

ஒரு சமயம் 'டிரங்கு டெலிபோனி'ல் இந்தியாவில் நண்பரைக் கூப்பிட்டுப் பேசவேண்டியிருந்தது. பேச்சு முடிந்த பிறகு ஐந்து நிமிஷங்களுக்குரிய டெலிபோன் வாடகையை என்னிடத்தில் வசூலித்துக் கொண்டார்கள். உண்மையில் நான் பேசியது மூன்றே நிமிஷங்கள். இதனை அந்த இலாகா அதிகாரிகளுக்கு அறிவித்து என்னிடமிருந்து அதிகப்படியாக வசூலித்த இரண்டு நிமிஷங்களுக்குரிய தொகையைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று எழுதினேன்.

பேச்சின் காலக் கணக்கை உறுதிப்படுத்தும் இயந்திரக் குறிப்புகளோ ஆதாரங்களோ இல்லாத நிலையில் என்னுடைய பேச்சையே அவர்கள் நம்பித் தீரவேண்டியிருந்தது. அவர்கள் மறுத்திருந்த போதி

லும் எதிர்த்து என்னுடைய கணக்கை நிலை நாட்ட முடிந்திருக்காது. எனினும் இந்த நிமிஷக்கணக்கை 'டெலிபோன் இலாக்கா'வினர் என் வாக்கு நாண யத்தை ஆதாரமாகக் கொண்டே ஏற்று, பணத்தை யும் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். மற்றவரு டைய வாக்குக்கு மதிப்பும் நம்பிக்கையும் அவர்கள் காட்டியது பெருமகிழ்ச்சியளித்தது. அந்த மகிழ்ச்சி யின் அடையாளமாக திரும்பிப் பெற்ற, தொகையை, 'டெலிபோன் ஊழியர் சகாயநிதி' உண்டியலில் போட்டுவிட்டு வந்தேன். இதிலிருந்து அங்குள்ள மக்களும் பெரும்பாலும் நாணயமாகவே நடந்துகொள்வார்கள் என்று நம்பி எதிர்பார்க்கப் படுகிறது என்பது விளங்குகிறதல்லவா! ஒழுக்கம் நிறைந்த சமூகப் பொறுப்புணர்ச்சி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஏற்படுவதே சமூகத்தின் உயிர் நாடி.

---

நம்முடைய நாட்டில் ரயில்வேக்களில் டிக்கெட்டு இல்லாமலேயே பரம்பரையாகப் பிரயாணம் புரியும் சாமர்த்தியக்காரர்கள் உண்டு. இதன் காரணமாக வண்டியில் போகும் ஒவ்வொரு பிராயாணியும் டிக் கெட் வாங்காமல்தான் பிரயாணம் செய்வான் என்று எதிர்பார்த்து டிக்கட் பரிசோதகர்கள் வண்டி யில் ஏறுகிறார்கள் உண்மையாக டிக்கெட் வாங்கி அதைப் போக்கடித்துவிட்டு விழிப்பவர்கள் தலை கீழாக நின்று உண்மை கூறினும் ரயில்வே ஊழியர் கள் நம்புவதில்லை.

தொழில் செய்பவர்கள், வியாபாரிகள் விவசாயி கள், சர்க்கார் அதிகாரிகள் தவிர மற்றவர் எல்லோ ரும் திருடர்களாகத்தான் இருப்பார்கள் என்று கருதியே அரசாங்கக் கண்காணிப்பு நடைபெறுகிறது. மாதம் ஒரு சில வழக்குகளேனும் பிடிப்பதுதான் திறமையாக வேலை நடைபெறுவதற்குச் சான்றெனக் கருதுவது ஒவ்வொரு இலாகாவின் அடிப்படைத் தத்துவமாக இருக்கிறது. சர்க்கார் அதிகாரிகள்

தங்கள் எல்லைக்குள் குற்றங்களே நடைபெறவில்லை யென்று உண்மையாகவே கணக்குக் கொடுத்தாலும் மேலதிகாரிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், எனவே, தங்கள் உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவாவது கற்பனை வழக்குகள் ஜோடிக்கும் நோய் அரசாங்க இலாக்காக்கள் பலவற்றின் பண் பாகிவிட்டது. வாழ்க்கை இவ்வளவு பொய்யான அடிப்படையில் இயங்கும் இந்த இழிநிலையில் கட்டுண்டு பல தொல்லைகளையனுபவித்திருக்கும் எனக்கு, வெளி நாடுகளில் போலீஸ்காரர்களும், உத்தியோகஸ்தர்களும் காட்டும் பொறுப்புணர்ச்சியையும் மக்கள்பால் காட்டும் பரிவையும் நேருக்கு நேர் பார்த்தபோது பொறாமையாகவே இருந்தது என்று சொல்லவேண்டும். நாணயம் பற்றிய எனது ஆராய்ச்சி மோட்டார் போக்குவரத்து, போலீஸ் ஆகிய இரண்டு துறைகளிலும் எனக்கு அரிய அனுபவங்களைத் தந்திருக்கிறது.

இங்கிலாந்தில் 'லெனிங்ட்டன்ஸ்பா' என்பது ஒரு நகரம். பாதைகள் ஒன்று கூடும் நாற்சந்தியொன்றில் நடந்துகொண்டிருக்கும்பொழுது வயிற்றுவலி தாங்காமல் ரோட்டிலேயே உட்கார்ந்துவிட்டேன். ஜன நடமாட்டம் மிகுந்ததும் வாகனுதிகள் சிட்டாய்ப் பறந்து கொண்டிருப்பதுமான சந்திப்பு அது. அங்கு நின்றுகொண்டு வழி ஒழுங்கு செய்துகொண்டிருந்த போலீஸ்காரன் என்னைப் பார்த்துவிட்டான். திடீரென்று உட்கார்ந்துவிட்ட எனக்கு ஏதோ அவதி ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதைப் புரிந்துகொண்டான். ஒரு நொடியில் தனது கடமைகளுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்து வைத்துவிட்டு என் அருகே வந்தான். வயிற்று நோயால் நான் அவதியுற்றிருப்பதையும், எழுந்து நடக்கமாட்டாமல் நான் உட்கார்ந்து விட்டதையும் உணர்ந்தவுடன் என்னைக் கைலாகுகொடுத்து அழைத்துச் சென்று என்னைக்

கவனித்து உதவிசெய்யும்படி மற்ருெரு போலீஸ் அதிகாரியிடம் அடைக்கலந்தந்து தன் கடமைகளை மீண்டும் போய் ஏற்றுக்கொண்டான். இரண்டாவது நபர் 'தாகமாகவிருக்கிறது' என்று ஜாடை காட்டிய என்னை அருகிலிருந்த ஒரு உணவு விடுதிக்கு அழைத்தேகினுன். அவர்களுடைய பரிவு எனக்கு வியப்பளித்தது. உடனே எனது ஆராய்ச்சியும் தொடங்கியது. உணவு விடுதிக்குச் சென்றவுடன் தாகத்தை விடப் பசியே அதிகமாக இருக்கிறதென்றும் ஆனல் கையில் ஒரு காசுகூட இல்லையென்றும் பாசாங்கு செய்தேன். இந்த நிலையில் என்னை அவன் புறக்கணித்துப் போவாஞ என்பதை அறிந்துகொள்வது என்நோக்கம். ஆயினும் அவன் அப்படிச்செய்யாமல் எனக்கு உணவு கொண்டுவரும்படி கட்டளையிட்டான். மேஜைக்கு வந்தது புலால் உணவு. நான் அதை எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டு நான் மரக்கறிமட்டுமே விரும்புபவன் என்பதை அறிவித்தேன். அவனும் தயங்காது மேலும் இரண்டு தட்டுகள் சைவ உணவை எனக்காக வரவழைத்து, புலால் உணவைத் தானெடுத்துக்கொண்டான். உண்டி முடிந்து வெளியேறும்போது உரிய தொகையையும் அவனே செலுத்திஞன். இப்படித் தெருவில் போவார் வருவோர்க்கெல்லாம் அவனுல் செலவழிக்க முடியுமா? அப்படிச் செலவிடும் தொகையை எப்படிச் சரிக்கட்டமுடியும் என்று அறியத்துடித்தேன். துறைமுகங்களிலும் ரயில்வே நிலையங்களிலும் போர்ட்டர்கள் பெறுவது போல இவனுக்கும் ஏதாவது மறைமுக வரும்படிகள் கிடைக்குமோ வென்று எனக்கு ஒரு ஐயம். இதனை மறைக்காமல் அவனிடமே கேட்டுத் தெரிந்துகொள்ள முயற்சித்தேன். எனது வினவிஞல் புன் முறுவல் பூத்த அப்போலீஸ் காரன் நிதானமாக விடையிறுத்தான். இந்தமாதிரி நிலைகளில் அதற்கேற்படும் செலவு அரசாங்கக்கணக்கில் எழுதப்படுமென்றும் பிறவழிகளில் பொருளீட்டு

வது அவனுக்கு அவசியமில்லை யென்றும் அறிந்து கொண்டேன். ஆயினும் நான் விடவில்லை. "கிட்டத் தட்ட இரண்டு 'ஷில்லிங்கு' இப்பொழுது செலவிட் டிருக்கிறாய். இதற்கு சர்க்காரிடம் கணக்குக் கொடுத்துப் பணம் பெறும்போது கூடக்கொஞ்சம் சேர்த்து வாங்குவது உண்டோ? இல்லையானால் இவ்வளவு சிரமப்படுவதில் உனக்கு என்னலாபம்?" என்று கேட்டேன்.

"நான் ஏன் அப்படிச் செய்யவேண்டும். செய் யாத செலவைச் செய்ததாகப் பொய்க்கணக்கைக் காட்டிப் பொதுப்பணத்தை யெடுத்துக்கொள்ள எங்களுக்கு யாரும் கற்பிக்கவில்லை" என்று கூறிச் சிரித்தான் அவன். நன்றி கூறிவிட்டு என்வழியே நடந்தேன், நம்முடைய நாட்டில் பொதுமக்கள் எந்த போலீஸ்காரனிடமிருந்தும் இவ்வளவுப் பரிவான உதவியைப் பெறமுடிந்தால்....... என்ற சிந்தனையே எனக்கு உண்டாயிற்று. போகாத பிர யாணத்திற்குக் கணக்கெழுதி, படி வாங்கும் மனப் பான்மை இங்கிலாந்தில் நான் எவ்வளவு ஆராய்ந்தும் காணவே முடியவில்லை.

இதுபோன்ற மற்றொரு ரசமான சம்பவம் செல்ட்டன் ஹாம் என்ற ஒரு ஜன நடமாட்டம் மிகுந்த ஒரு இடத்தில் ஓர் நாள் மாலை நான் நடந்து சென்றுகொண்டிருந்தேன். அங்கு ஒரு போலீஸ் காரனைக் கண்டதும் கொஞ்சம் பேச்சுக் கொடுக்கலா மென்று தோன்றியது. ஏதாவது பேசவேண்டும்! "ரயில்வே ஸ்டேஷன் எங்கேயிருக்கிறது" என்று கேட்டு வைத்தேன். அவன் சொன்னான்; "இடது புறமாகச் சென்று மேலும் இடது புறம் முதல் தெரு வில் திரும்பினால் அந்தப் பாதை நேரே ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் விட்டுவிடும்" என்று. நான் வேண்டுமென்றே அவன் சொன்னது போல் முதலில் இடதுபுறம் செல்லாமல் அவன்

பார்க்கவே வலதுபுறம் திரும்பி நடந்தேன். வேக மாகப் போய்க்கொண்டிருக்கும் என்னைத் தொடர்ந்து ஓடிவந்து அவன் என் தோள்களைப்பற்றி "இது அல்ல சரியான வழி. எதிர்த் திசையிலல்லவோ போய்க்கொண்டிருக்கிறீர்கள். இடதுபுறமென்று நான் சொன்னேனே! வாருங்கள் நான் காட்டுகிறேன்" என்று அன்புடன் கூறி என்னை அழைத்துச் சென்று சரியான திசையில் விட்டு விட்டுச் சென்றான். எப்படி?

உலகத்திலேயே மிகவும் சந்தடி மிகுந்த போக்கு வரத்து ஸ்தலம் ஒன்று இங்கிலாந்திலிருக்கிறது. நாள் ஒன்றுக்கு எண்பதினாயிரம் ஊர்திகள் அந்த வழியாகக் கடந்து செல்கின்றன. இந்த இடத்தில் இரவு பகல் எந்நேரமும் வழிகாட்டும் போலீஸ்காரர்கள் பல்பேர் இருந்து போக்குவரத்தைச் செப்பனிடுகிறார்கள். கொஞ்சம் கவனக்குறைவாக இருந்தாலுங்கூட ஒரு நொடியில் பல ஊர்திகளும், பாதசாரிகளும் விபத்துக்குள்ளாக நேரிடும். இங்கே நின்று வழி செப்பனிடும் போலீசார் அருந்திறன் உடையவர்கள். இதற்கென்றே நுணுக்கமாகப் பயிற்சியளிக்கப்பட்டவர்கள். எந்நேரமும் விழிப்புடனும், பரபரப்புடனும், கடமையில் இயங்கி யிருப்பவர்கள். அவர்களுடைய கையசைவுகளிலே எத்தனை உயிர்களின் பாரம் சுமத்தப்பட்டிருக்கிறது! இப்பேர்ப்பட்ட இடத்திலும் மற்றொரு சமயம் என் ஆராய்ச்சியை நடத்தினேன்.

நாற்சந்தியின் நடுவில் நின்று வழிகாட்டியிருந்த தலைமைச் சேவகனிடம் குறுக்கே நடந்து சென்றேன். ஏதோ அவசரமான காரியமென்றெண்ணி அவன் என்பால் திரும்பினான். அருகே தெருக்களிருந்த பிரமாண்டமான சில கட்டிடங்களைச் சுட்டிக் காட்டி அவை ஒவ்வொன்றைப் பற்றியும் "யாருக்குச் சொந்தம், என்ன வாடகை, கட்டிட மதிப்பு என்ன

இருக்கும், என்ன வர்த்தகம் நடைபெறுகிறது" என்பன போன்ற பல கேள்விகளைப் பேதமை தோன்றக் கேட்டு நின்றேன். தேவையற்ற, சம்பந்த மற்ற, அவனுடைய அரிய காலத்தை—கடமைகளைக் குலைக்கும் இந்தக் கேள்விகளினால் அவனுக்குக் கோபம் வரக்கூடுமென்றும் அல்லது என்னைப் பித்த னென்றோ வேலையற்றவன் என்றோ அவன் புறக் கணிக்கக் கூடுமென்றும் எண்ணி எதிர்பார்த்தேன். ஆனால் எனக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. அந்நிய நாட்டானாகிய ஒருவன் ஆவல் மிகுதியினால் அறிந்து கொள்ள விரும்பும் செய்திகள் என்றே மதித்து, அந்த வியப்பு உணர்ச்சிக்குச் சமாதானம் கூறுவது தன் கடமையென்றே கருதி, அத்தனை கேள்விகளுக் கும் முகஞ்சுளிக்காமல் பொறுமையாக விடை யிறுத்தான். கிட்டத்தட்ட இருபத்தேழு நிமிஷங்கள் கடமையிலிருந்து நழுவாமலும் என்னுடைய கேள்வி களுக்கு விடை கூறிக்கொண்டும் இருந்த அவ னுடைய ஆச்சரியமான திறமையையும், பொறுமை யையும் எண்ணி நானே சோர்ந்துபோனேன்.

இந்தத் தோல்வியுடன் திரும்ப எனக்கு இஷ்ட மில்லை. அவனுடைய பொறுமையின் எல்லையையும் சீற்றத்தில் அவனுடைய தோற்றத்தையும் காணாமல் திரும்ப மனமில்லை. உடனே கொஞ்சம் தொகையை எடுத்து அவன் கையில் வைத்து அழுத்தி "தங்கள் அருமையான நேரத்தைக் கொள்ளை கொண்டுவிட் டேன், அதற்குப்பதிலாக இதைப்பெற்றுக்கொள் ளுங்கள், மிகவும் வந்தனம்" என்று கூறினேன். அவன் புன்சிரிப்புடன் அதை மறுத்துவிட்டான். மீண்டும் மீண்டும் நான் வற்புறுத்தியபோது அவன் சிறிது சினமுற்று என்னை வெறுத்துப் பார்த்தான். அரசாங்க ஊழியருக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற குற்றம் என்மீது சாட்டப்படும் என்றதில் எனக்கு ஏற்பட்டுவிட்டது. தோல்வியுடன் திரும்பிச் சென் றேன். மனச்சாட்சி என்ற ஒன்று அந்த நாட்டில்

இவ்வளவு அழுத்தமாக, போலீஸ்காரர்களிடத்திலும் இருப்பதை எண்ணி, எண்ணி வியப்பிலும் மகிழ்விலும் ஆழ்ந்தேன். இத்தகைய ஒழுக்கம் இருப்பதனுல்போலும் ஆங்கில ஆட்சி வலிமை பொருந்தி விளங்குகிறது.

என்ன இருந்தாலும் வெளிநாட்டார் நம்மைவிடச் சிறந்தவர்கள் என்பதை முழுதும் ஒப்புக்கொள்ளக் கொஞ்சம் வருத்தமாகத்தானிருக்கும். மற்றவர்களைவிட நாம் தாழ்ந்திருக்கிரும் என்பதை ஒப்புக்கொண்டுவிட மனம் வராது. ஓரிருவர் ஒழுங்கீனம் உள்ளவர்கள் இங்கிலாந்திலுங்கூட இருக்கக்கூடும் என்று கருதுவதில் தவறில்லை. உயர்ந்த ஒழுக்கமுடைய பொதுநல ஊழியர் பலர் நம் நாட்டிலும் உண்டு. ஆயினும் நல்லவர் ஒருசிலர் எவ்வளவு உண்மையாகப் பாடுபட்டாலுங்கூட சமூகப் பொது அடிப்படையில் சிறந்த பயிற்சி கிடைக்காதவரையிலும் அது கடலில் கரைத்த பெருங்காயமாகவோ விழலுக்கிரைத்த நீராகவோ ஆகிவிடுகிறது.

ஆங்கிலேய ஆட்சிக்கு துணையாக இருந்து அரசாங்கம் நடத்தியோர், இந்த நாட்டு மக்களை அடக்கி ஆளமட்டுமே பழகினுர்களேயன்றி தேச மக்களின் சேவைக்குத் தங்கள் பணியை ஈடுபடுத்தும் அளவுக்குப் படித்துக்கொள்ளவில்லை. சுபாவமாகவே நல்ல ஒழுக்க சிலமுடையவர்கள் அத்திப் பூத்தாற்போல் ஆங்காங்கு உயர்ந்த அதிகாரங்களில் வீற்றிருந்த போதிலும், தங்களின் கீழ் இயங்கும் முழு இயந்திரத்தையும் மாற்றியமைக்கும் வலிமை பெற்றிருக்கவில்லை.

சட்டத்திற்கும் அமைதிக்கும் பாதுகாவலாயிருக்கும் போலீஸ்காரர்கள் முதலில் ஒழுக்கத்தை நடத்திகாட்டுவது அவசியம். இங்கிலாந்து போலீஸ் இலாகா இத்தகைய பண்பைப் பெற்றிருப்பதால் தான் அதன் திறமை உலகப்புகழ் பெற்றிருக்கிறது.

சமூகத்திலும் அங்கு உயர்ந்த நாகரீகம் வளர்ச்சி யுற்றிருக்கிறது. இந்த உதாரணம் நாம் கற்கத் தகுந்ததொன்று.

மோட்டார் போக்கு வரத்துத் துறையில் நம் நாட்டில் பல வருஷங்கள் வருந்தத்தக்க நடத்தை யையே ஊழியர்பால் கண்டிருக்கும் எனக்கு, லண்டனில் அத்துறை மக்களைப் பற்றியும் அறிய விருப்பம் உண்டாயிற்று.

கோயர் தெருவையும் டாட்டன்ஹாம் கோர்ட் பாதையையும் இணைக்கும் ஒரு சிறு ரோட்டில் (அந்த ரோட்டின் பெயர் இப்போது நினைவில்லை) டாக்ஸி கம்பெனி ஒன்றுக்குச் சென்றேன். அந்த இடத்திற் கும் நான் போய்ச் சேரவேண்டிய கோயர் தெரு 112-ெந. கட்டிடத்திற்கும் சுமார் 100 கெஜ தூரம் தான் இருக்குமென்பது எனக்குத்தெரியும். இருந் தாலும் அந்த இடத்திற்கு டாக்ஸி வருமா என்று கேட்டுவைத்தேன். இதன் மூலம் நான் அங்கே இடம் தெரியாது அலையும் புதியவன் என்பதை அவன் தெரிந்துகொண்டால் எப்படி நடந்துகொள்ளுகிருன் என்பதை சோதித்தறிவதே என் நோக்கம். என் னுடைய அறியாமையைப் பயன்படுத்தி சம்பாதிக்க எண்ணி உடனே டாக்ஸியில் ஏற்றிக்கொண்டு எங்கேயாவது நாலு தெருவுகளைச் சுற்றிவிட்டு அரு கிலிருக்கும் அந்த இடத்தில் என்னை இறக்கிவிட்டு வாடகையை நிறைய வாங்கிக் கொண்டிருப்பான் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. டாக்ஸி டிரைவர் என்னிடம் "நேரே கொஞ்ச தூரம் சென்று இடது பக்கம் திரும்பினுல் அங்கே தான் இருக்கிறது நீங்கள் போகவேண்டிய இடம்" என்று கூறினுன் நான் விடாமல் "இல்லை, கார் கொண்டுவா: அதில்தான் போகவேண்டும்" என் றேன். அவன் வியப்படைந்தவனுய் "நாலடி தாண்டி னுல் இருக்கும் இடத்திற்கு வாடகை வண்டி

எதற்கு? உடல் நலமில்லையா? அப்படியானால் வண்டி கொண்டுவரத்தடையில்லை. அல்லது இடம் தெரியா விட்டால் நானே நடந்து அழைத்துக்கொண்டு போய்விடுகிறேன்" என்றான். அதன் படியே அந்தத் தெரு முழுதும் என்னுடன் நடந்துவந்து நான் குறிப்பிட்ட கட்டிட வாசலில் என்னை விட்டுச் சென்றான். எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? அவனுடைய பொறுப்புணர்ச்சியும் சேவை மனப்பான்மையும்?

ஒரு சர்வீஸ் பஸ்ஸில் பிரயாணம் செய்ய நேர்ந்த போது பஸ் கண்டக்டரின் நாணயத்தை சோதித்தறிய விரும்பி என்னுடைய விலையுயர்ந்த புகைப் படக்கருவி (நிகழ்ச்சிகளை சினிமா படம் எடுக்கும் கருவி) ஒன்றை பஸ்ஸிலேயே விட்டுவிட்டு வழியில் இறங்கி போய்விட்டேன். நான் பிரயாணம் செய்த அந்த மோட்டார் வண்டியின் நம்பரை மட்டும் குறித்து வைத்துக்கொண்டேன். மறு நாள் போலீஸில் இதைப்பற்றி புகார் பதிவு செய்தேன். பர்மிங்ஹாம் என்ற நகருக்குச் சென்று இருந்துவிட்டு மீண்டும் நான் லண்டன் வந்ததும் பஸ் சர்வீஸ்காரர்கள் நடத்தும் "காணமற்போன பொருள்களின் சேகர நிலையம்" சென்று விசாரித்தபோது என்னுடைய காமிரா கவனமாக அங்கு பாதுகாத்து வைக்கப் பட்டிருந்ததைக் கண்டு அதிசயித்தேன். அது சம்பந்தமான ரிஜிஸ்தரை நான் பரிசோதித்துப் பார்த்தேன். நான் பஸ்ஸில் காமிராவை விட்டுவிட்டு இறங்கிய சில நிமிஷங்களுக்குள் இது இந்த நிலையத்தில் சேர்ப்பிக்கப்பட்டிருந்ததாகக் கண்டு எனக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

வர்த்தகர்களின் நேர்மையைப் பற்றியும் நான் சோதித்திருக்கிறேன். ஒரு சமயம் ஒரு கடையில் 100 பாட்டரிகளை வாங்கிக்கொண்டு போனேன். நான்கு நாள் கழித்துக் கணக்குப் பார்க்கும்போது 91

தான் இருந்தது. மற்றவை ஏன் காணவில்லையென்பதை நான் கண்டுபிடிக்க முடியவில்லை. மிகுந்திருந்தவற்றிலும் 6 பாட்டரிகள் மின்சாரம் இழந்து கெட்டுப்போயிருந்தன. பின்னும் இரண்டு தினங்களுக்குப் பிறகு கடைக்காரனிடம் சென்று தெரிவித்தேன். "எந்த இடத்தில் ஒன்பது பாட்டரிகள் கெட்டுப்போயின தெரியுமா?" என்று கேட்டான் கடைக்காரன். "வாங்கிக்கொண்டு போன நான்காம் நாள் தான் 9 பாட்டரிகள் காணவில்லை யென்பதை அறிந்தேன். எந்த இடத்தில் தவறிப்போயின வென்பதை நான் அறியேன்" என்று கூறினேன். மறுகேள்வி கேட்காமல் காணமற்போன 9 பாட்டரிகளுடன் கெட்டுப்போன 6-க்கும் வேறு பாட்டரிகளை அவன் உடனே எனக்குக் கொடுத்துவிட்டான்,

ஹோட்டல்களில் இன்னும் வேடிக்கை. லண்டன் மணிக்கூண்டு அருகாமையில் பிரசித்தமான ஒரு ஹோட்டல் இருக்கிறது. அங்கே சென்றால் நமக்குத் தேவையான உணவு வகைகளை நாமே எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிடலாம். அதைக் கவனிக்கவே அங்கு யாரும் ஆட்கள் இல்லை. நம்முடைய நாணயத்தில் அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் அவர்கள். விபரங்கள் அங்கு எழுதி ஒட்டியிருக்கிறது, நாமாகக் கணக்கிட்டு சில்லரையை உரியவரிடம் கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டியதுதான். முதல் நாள் நாங்கள் மூவர் அங்கே சென்று வேண்டிய மட்டும் சிற்றுண்டி அருந்திவிட்டுப் பேசாமல் வெளியே போய்விட்டோம். யாரும் எங்களை வழியில் தடுத்துப் பணம் கேட்கவில்லை. ஆச்சரியமாக இருந்தது எனக்கு. மறு நாளும் இப்படியே செய்து பார்த்தேன். மூன்றாம் நாள் எனக்கே பரிதாபமாகப் போய்விட்டது. அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை நம்ப முடியாததாக இருந்தது. மூன்று நாளைய தொகையையும் சேர்த்துச் செலுத்திவிட்டேன். கடைசி

யாக வர்த்தகர்கள், அதிகாரிகள் பொது மக்கள் ஆகியோர் பிறர்பால் கொண்டுள்ள மதிப்பும் நம்பிக்கையும் இங்கிலாந்து மக்களின் சமூகக் கட்டுக்கோப்பின் ஜீவாதார சக்திகளாக விளங்குவதைக் காணப் பொருமையாகக்கூட இருந்தது.

சமூகம் என்பது பல மனிதர் ஒன்று சேர்ந்து வாழும் ஏற்பாடு, தனி மனிதர் ஒவ்வொருவரும் தனிப்பட்ட திறமையும் அறிவும் படைத்திருப்பவர். சமூக வாழ்வில் இப்படித் தனி மனிதர்கள் தங்கள் உழைப்பையும் பயனையும் பரஸ்பரம் பண்டமாற்றிக் கொண்டு அனைவரும் இன்பமடைவதுதான் நோக்கம். சமூகக் கட்டுக் கோப்பில் ஒவ்வொருவரும் தன்னைப் பிறர் நன்மைக்கும், பிறருடைய உழைப்பில் தனக்குத் தேவையான பயனையும் பெறுவதே அடிப்படை ஏற்பாடு. இந்த ஏற்பாடு வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால் பிறர்பால் நம்பிக்கையும் நல்ல எண்ணமும் செயல் முறையும் சகிப்புத் தன்மையும் தேவையாக இருக்கின்றன. இவற்றை வகைப்படுத்தி அனைவரும் இனிமையாக இயங்கவும் உயிர் வாழவும் செயல்புரியவும் சிந்திக்கவும் அறிவில் ஓங்கவும் மனிதன் கண்டுபிடித்த இயக்கம் தான் அரசாங்கம். தனி மனித உழைப்பையும் பயனையும் சமூகம் முழுவதிலும் விநியோகிக்கும் அரசும், குடி வகுப்பும் எந்த நாட்டில் வெற்றிகரமாக வளர்கின்றனவோ அந்த நாட்டை நாகரீகம் மிகுந்ததென்று கூறுகிறோம். இந்த நாகரீக வளர்ச்சியைக் காலத்தாலும், தூரத்தாலும் அளவிட்டுக் காட்டும் கணக்கைத்தான் சரித்திரம் என்று கருதுகிறோம்.

தமிழ் நாட்டின் சரித்திரம் மிகப் புராதனமானது. அதாவது சமூக ஏற்பாட்டில் தமிழ் மகன் மற்றவர்களைவிட நாகரீகச் சிறப்புடன் வாழ ஆரம்பித்த அந்த முதல் நாள் மிகப் பழமையானது. ஆனால் இன்று நம்முடைய சமூக வாழ்வில் நாகரீகம்

தேய்ந்து மங்கிக் கிடக்கிறது. பரஸ்பர நம்பிக்கையும் சகிப்புத் தன்மையும் தியாக சீலமும் அழிந்து கொண்டிருக்கிறது. காரணம் அரசாங்க முறை இடைக் காலத்தில் மற்ற நாட்டினரின் நன்மை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டிருந்தது தான் காரணம். என்ருலும் விடுதலை யடைந்திருக்கும் இந்த நிலையில் இனியாவது நம்முடைய சமூக வாழ்வில் நாகரீகம் புத்துயிர் பெற வேண்டாமா?

இடைக் காலத்தில் அன்னியர் ஆட்சியில் சமூக வாழ்வு, பொய்யும், சுயநலமும் நிறைந்ததாக அமையப் பெற்றிருந்தது. அதன் வாசனை நம்மை விட்டுத் தொலைய இன்னும் எத்தனை காலம் ஆகுமென்று தெரியவில்லை.

"மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி" என்பது நீதி மொழி. அரசாங்க அதிகாரிகளும், சட்டம், ஒழுங்கு இவற்றிற்குக் காவலராக இருக்கும் போலீஸ்காரர்களும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கா விட்டால், கடைத் தெருவில் கள்ளச் சந்தையும், நீதிமன்றங்களில் பொய் வழக்கும், கோயில்களில் மதச் சண்டைகளும் ஒருக்காலும் நீங்கப்போவதில்லை.

ஆஸ்பத்திரிகளில் ஏழைகளுக்குத் தக்க உதவி இன்றும் கிடையாது. கோர்ட்டுகளில் ஏழை நீதி பெற ஏராளச் செலவு செய்யவேண்டும். தொழிற்சாலைகளில் உழைப்பாளிக்குப் போதிய ஊதியம் கொடுக்காமல் முதலாளிகள் சுரண்டிக்கொள்ளுகிருர்கள். வாழ்வே வரண்டு கிடக்கிறது.

தீப் பிடித்த கப்பலிலிருந்து தப்பிப் பிழைத்த கதையைச் சொன்னேன் அல்லவா? லண்டனுக்கு வரும்போது ஆருத காயங்களுடன் இருந்தேன். அங்கு யூனிவர்சிடி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகப் போய்ச் சேர்ந்தேன். என்னை அனுமதிக்கு முன்பு என்னுடைய மாதாந்திர வருமானம் பற்றி விசாரித்

தார்கள். நான் ஏதோ ஒரு தொகையைக் குறிப்பிட்டேன். அந்த அடிப்படையில் ஒரு கட்டணம் விதித்தார்கள்; அங்கு என் சம்பந்தமாக ஆகும் செலவுகளுக்கு ஈடாக, அதனை எப்படிக் கணக்கிடுகிறார்கள் என்ற திட்டம் எனக்குப் புரியவில்லை. சிகிச்சை பெற்றுத் திரும்பினேன்.

சில காலம் கழித்து மறுமுறையும் நான் அங்கே செல்ல நேர்ந்தது. ஆனால் இந்தத் தடவை எனக்கு வருமானமே கிடையாது என்று தெரிவித்தேன். எனவே கட்டணம் எதுவும் அவர்கள் விதிக்காமல் இலவசமாக வைத்தியம் செய்தார்கள்.

பணம் கொடுப்பவருக்கும் இலவச உதவி பெறுவோருக்கும் மருத்துவ முறைகளில் ஏற்றத்தாழ்வோ கவனக் குறைவோ, பரிவோ இருக்கக் கூடும் என்றே நான் ஐயுற்றேன். அப்படியொன்றுமில்லை. அனைவருக்கும் ஒரேவிதமான பரிவும் மரியாதையும் உதவியும் தருவதைக் கண்டு நான் அதிசயித்தேன். இந்தத் தடவை நான் ஒன்றும் பணம் கொடுக்காமலே வெளியேறி விட்டேன். எனினும் வருமானம் ஒன்றுமில்லையென்று சோதனைக்காகக் கூறியதனால் அவர்களை ஏமாற்றிவிட்ட என் மனசாட்சியை அமைதியுறச் செய்துகொள்ள வேண்டி மற்றொரு முறை சென்று ஒன்றுக்குப் பத்தாகப் பணத்தைச் செலுத்திவிட்டேன்.

நியூபிரைட்டன் என்ற இடத்தில் மற்றொரு நிகழ்ச்சி இந்த போன்று எனக்கு ஏற்பட்டது. ஒரு சனிக்கிழமை பிற்பகலில் அங்கு ஒரு ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அன்று விடுமுறை நாளாகையால் வழக்கமாக வேலை செய்பவர்கள் பெரும்பாலோர் இல்லை. ஒரு சில ஊழியர்களே இருந்தார்கள். என்னுடைய உடல்நிலை பற்றி முழு விபரமும் அவர்கள் கேட்டார்கள். பதில் கூற அறியாதவன் போல

நான் நடித்தேன். உடனே ஒரு டாக்டருக்கு அவர்கள் டெலிபோன் செய்தனர். டாக்டர் வந்து என்னை உடனே சோதித்தார். ஆனால் அவருக்கு ஏற்பட்ட ஒரு ஐயத்தின் விளைவாக மற்றொரு டாக்டரைத் தருவிக்க வேண்டியிருந்தது. எனவே வேறொரு டாக்டரும் உடனே வரவழைக்கப்பட்டார். இருவருமாகக் கலந்தாலோசித்து தக்க மருந்து ஒன்றைப் பிரயோகம் செய்தார்கள். அந்த விடுமுறை நேரத்தில் கூட தேவையான உதவி புரிய ஊழியர்களும் டாக்டர்களும் பறந்தோடி வந்ததைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை. நான் விடைபெற்றுத் திரும்பும்போது வாசலில் ஒரு கூடத்தில் நின்றுகொண்டு என்னைக் கடந்து செல்லும் டாக்டர்களிடமும் தாதிகளிடமும் 5 பவுன் நோட்டு ஒன்றை ஒவ்வொருவரிடமும் நீட்டினேன். சொல்லிவைத்தாற்போல ஒவ்வொருவரும் அதை மறுத்ததுடன் அருகில் இருக்கும் உண்டிப்பெட்டியில் அதைப் போடும்படி எனக்குச் சுட்டிக்காட்டிவிட்டுத் தங்கள் வேலை மீதே நாட்டமாக நடந்துவிட்டனர். இத்தகைய உயர் ஒழுக்கத்தைக் காணும்போது, காசை வாரியிறைப்பவர்களுக்கு ஒருவிதமும் ஏழைகளுக்கு ஒருவிதமும் அளிக்கப்படும் மருத்துவ உதவியை நினைத்தால் வெட்கமாக இருக்கிறதல்லவா?

போலீஸ், பஸ் சர்வீஸ், ஹோட்டல், ஆஸ்பத்திரி இவைகளைப்பற்றிய உதாரணங்கள் கூறினேன். இதைப்போலவே இங்கிலாந்தில் பல்வேறு துறைகளிலும் அதிசயிக்கத்தக்க சமூக உணர்ச்சியை நேருக்கு நேர் கண்டு மகிழும் சந்தர்ப்பங்கள் பல எனக்கு ஏற்பட்டதுண்டு. புகைப்படங்களும் சலனப் படங்களும் ஆங்காங்கு நான் எடுத்திருக்கிறேன். இவை சம்பந்தமாக என் அனுபவங்கள் பசுமையானவை. ஜெனரல் போஸ்டாபீஸ், பாதாள ரயில்வே, ஸ்காட்லாந்து யார்ட் முதலான இடங்

களிலும், ஒலிம்பிக் கண்காட்சியில் மன்னர்பிரான் விஜயம் செய்தபோதும் புகைப்படங்கள் எடுத்திருக்கிறேன். இந்த இடங்களில் பொதுஜனங்களை அனுமதிப்பதில் மிகுந்த கட்டுப்பாடுகள் உண்டு என்பதை நினைவில் வைத்துக்கொண்டு என்னைப் போன்ற புதியவன்—அந்நியன் இவ்விடங்களில் சங்கடமின்றி ஆர்வத்துடன் நடமாட முடிந்ததென்பதைக் கவனிக்க வேண்டும். எதற்குச் சொல்லுகிறேன் என்றால் அந்தஸ்து, நிறம், ஜாதி போன்ற பாகுபாடுகளைப் புறம்பே தள்ளிவைத்து ஒருவனுடைய ஆர்வம், நடத்தை இவற்றைப்பற்றிய அனுதாபமும் மதிப்பும் ஆதரவும் காட்ட அங்கு மக்களும் சரி அதிகாரிகளும் சரி நன்கு பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டத்தான்,

மக்கள் கைக்கூலி கொடுப்பதனால்தான் அதிகாரிகள் வாங்குகிறார்கள் என்று வாதிக்கப்படுகிறது. கொடுக்காவிட்டால் வாங்கமாட்டார்கள் அல்லவா என்ற வாதம் மேலுக்கு மிகவும் சரியானதாகவே காணப்படலாம். ஆயினும் மக்கள் ஏன் கொடுக்கிறார்கள் என்பதைக் கவனித்தால் இந்த வாதம் தவறானதென்று தெரிந்துபோகும். நீதியும் உதவியும் தகுதிக்கு ஏற்பப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை அரசாங்கம் ஏற்படுத்தினால், அரசாங்க அதிகாரிகளுக்கு கைக்கூலி கொடுத்து கெடுத்துத்தான் தீருவோம் என்று யாராவது சொல்வார்களா? எதுவும் நேரிய வழியில் கிடைப்பதில்லையென்றால், குறுக்கு வழியில் அதைப்பெறவே மக்கள் முனைவது மிகவும் இயற்கை, அநீதியை எதிர்த்துத் துன்பங்களை வலிய ஏற்றுக்கொள்ள எத்தனை பேருக்கு வசதியும் நேரமும் இருக்கிறது. ஒரு அரசாங்க இயந்திரத்தை தனிப்பட்ட மனிதர்கள் தியாகம் செய்துதான் சீர்திருத்த வேண்டுமென்றால், அத்தகைய அரசாங்கம் ஒன்று எதற்காக இருக்கவேண்டும். எனவே

அரசாங்கத் தலைமையில் உள்ளவர்கள் கண்டிப்பாக வும் நேர்மையாகவும் நடந்துகொண்டாலன்றி ஒரு நாடு விடுதலை அடைந்தாலும் அந்த விடுதலை நிலைப்ப தாகவோ, பயனுடையதாகவோ இருக்காது.

புகைப்படங்களையும், பெரிய மனிதர்களின் கையெழுத்துக்களையும் சேர்ப்பது இந்த நூற்றாண்டு இளைஞர்களின் பொழுது போக்காக இருக்கிறது. தேசிய உணர்ச்சியினாலும் வீரவணக்கம் புரியும் விருப்பத்தினாலும்கூட இப்படிச் செய்கிறார்கள். ஆனால் நான் 'காமிராக்' கண்களை மேல்நாட்டிலும் இங்கும், காட்சிகளில், திருப்பியதற்குக் காரணம் செய்திகளையும் விஞ்ஞான அறிவையும் சேகரிக்கும் ஒரே நோக்குதான். ஒரு காலத்தில் காமிராவை சதா என்னுடன் வைத்திருந்தேன். கடைசி காமிராவை எங்கே நான் பிரிந்தேன் என்பது இப்போது சரியாக நினைவில்லை.

1935-ல் என்று நினைக்கிறேன், சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தின் தலைவரான ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தி காலமான சமயம். என்னுடைய 16. M. M. 'காமிரா' அவருடைய இறுதி யாத்திரைக் காட்சியில் ஒரு பகுதியைப் படம் எடுத்ததுண்டு. பக்கிங்காம் அரண்மனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு தெருக்களில் சென்றபோது ஜனக்கூட்டம் சொல்லிமுடியாது. கூட்டத்தில் ஒருவர் சிக்குண்டு இறந்தே போய்விட்டார். சுமார் நூற்றைம்பது பேருக்குமேல் மருத்துவ சாலைக்கு அனுப்பப்பட்டார்கள். பதினாயிரம் பேர் முதல் உதவி பெறவேண்டியதாகவும்கூட நேர்ந்துவிட்டது. அவ்வளவு நெருக்கடியான தருணத்திலும்கூட என்னுடைய படப்பிடிப்பு வேலைக்கு இடம் கிடைத்துவிட்டது. சில மாதங்களுக்குப் பிறகு ஒலிம்பிக் கண்காட்சி நடைபெற்ற போதும் நான் அங்குதான் தங்கியிருந்தேன். காட்சி 10 நாட்கள் நடைபெற்றது. பிரிட்டிஷ் மோட்டார்

யந்திர உற்பத்திசாலைக்காரர்கள், 'டீசல் என்ஜின்' பற்றிய சொற்பெருக்கு நிகழ்த்தும்படி அழைத்திருந்தார்கள். மற்றொரு நாள், காதலுக்குப் பட்டம் துறந்த எட்டாவது எட்வர்ட் அரசர்—இப்போது விண்சர் கோமகனாக இருப்பவர்—கண்காட்சி சாலைக்கு விஜயம் செய்தார். அந்த சமயத்தில் பார்வையாளர் யாரையும் அனுமதிக்கமாட்டார்கள். அவர் வரும் வாசலில் நின்று அவர் உள்ளே நுழையும் காட்சியைப் படம் எடுக்கத் தயாராய் நான் ஒரு ஒதுக்கு இடத்தில் காத்திருந்தேன். பெண்கள் வரிசையாக நின்றிருந்த ஒரு இடத்தில் கொஞ்சம் இடங்கேட்டு அந்த இடத்தில் 'காமிரா'வைத் தயாராக்கி வைத்திருந்தேன்.

மன்னர் அங்கு வந்து இறங்கும் தருணத்தில் நான் வேகமாக நடந்து நடுப்பாதைக்கே போய்விட்டேன். அங்கு காவல் நின்ற போலீஸ்காரன் என்னைப் பிடித்துக் கொண்டுவிட்டான், கழுத்தில் கை கொடுத்து வெளியேற்ற முயலுவதை அரசர் பார்த்து விட்டு என்னை விடுவிக்கும்படி உத்திரவிட்டார். அதுவரை தொடர்ந்து வந்த என் துணிவுக்கு அவர் பாராட்டினார். 20 நிமிஷங்களில் 400 அடி சினிமாப் படம் பிடித்துக்கொள்ள வசதி கிடைத்தது.

1936-ல் ஜெர்மனிக்கே சென்று நாஜித் தலைவர்களைப் படம்பிடிக்கவேண்டுமென்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது. நாஜிப் பட்டாளம் அழகிட்டு நடை போட்டு வந்தபோது படம் பிடித்துக்கொண்டிருந்த என்னை யாரோ ஒற்றன் என்று சந்தேகித்துக் கைது செய்துவிட்டார்கள். நான் பொழுது போக்குக்காகப் படம் பிடிக்கும் இந்தியன் என்றும், உளவறியும் வேலை யாராலும் எனக்குத் தரப்படவில்லையென்றும் நான் பணிவுடன் விளக்கிக் கூறியபோது யாதொரு ஐயமுமின்றி என் வேலையைத் தொடர்ந்து செய்து கொள்ள விட்டுவிட்டார்கள்.

கொலோன் என்னும் இடத்தில் ஒரு சமயம் இரண்டாவது உலக யுத்தத்திற்குத் தந்தையும் பயங்கர மனிதன் என்று வர்ணிக்கப்பட்டவருமான ஹிட்லர் விஜயம் செய்தபோது நான் அங்கு இருக்க நேர்ந்தது. நான் தங்கியிருந்த விடுதியொன்றிலேயே நாஜிகளின் ஏகத் தலைவனான ஹிட்லரும் தங்கியிருந்தார். அவரை நான் படம் பிடிக்க விரும்புகிறேன் என்பதை அந்த விடுதியின் நிர்வாகிகளிடம் தெரிவித்து உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டேன். நாங்கள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஹெர் லீ என்பவர் எங்களுக்கிடையில் அப்போது 'துபாஷா'க இருந்து உதவினார். ஹிட்லருடன் பேசக் கிடைத்த அந்தச் சிறு நேரத்தில் நாங்கள் அரசியல் பற்றி எதுவும் பேசவில்லை. பேசத்தான் என்ன இருக்கிறது? இந்தியா-ஜெர்மனி இவற்றின் கலாசாரம்-பண்பாடு பற்றிய இனிமையான சம்பாஷணை அது. இறுதியாக என் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு வினாடி என் காமிராவுக்கு முன் அவர் முழுத்தோற்றமளித்து நின்று என்னை மகிழ்வித்தார். சில அடிகள் அவரைப் படம் எடுத்துக்கொண்டு அவற்றிலிருந்து எடுத்த சில நிலைத் தோற்றங்களை (ஸ்டில்) அவரிடம் காட்டி அவருடைய கையெழுத்தும் பெற்றுக்கொண்டேன். அவருடன் கோயரிங், ஹெர் கோயபெல்ஸ் ஆகியோரும் இருந்தார்கள். அவர்கள் அனைவருடனும் பேசினேன். ஆனால் அற்புதமான ஆங்கிலத்தில் ஹெர் லீ என்னுடன் நெடுநேரம் பேசினார்.

பிற்காலத்தில் உலகப் போர் மூண்ட பின்னர் நான் மேற்கொண்ட மற்றொரு யாத்திரையின்போது அமெரிக்காவில் தங்கியிருக்க நேர்ந்த காலை சில அமெரிக்க நண்பர்கள் ஹிட்லரின் கையெழுத்துள்ள படத்தை பத்தாயிரம் டாலர் வரையிலும்கூட என்னிடமிருந்து விலைக்குப்பெற முயற்சித்தார்கள். நான் கொடுப்பேனா? ஹிட்லர் காரில் போகும் காட்சிகூட

பிடிக்கப்பட்டிருக்கிறது. நான் பிடித்த அந்தப் படங்களை சிலசமயம் ஆராய்ச்சிக்காக வைத்துப் பார்த்ததுண்டு. ஹிட்லருடைய வதனத்தில் உணர்ச்சித் தோற்றங்கள் விசித்திரமானவை. ஒரு படத்திற் போல மற்றொன்றில் காணமுடியாது. அவரை அடையாளம் கண்டுபிடிக்கக்கூடிய பாவனை எதுவும் அவருடைய வதனத்தில் நிலையாகக் காணப்படவில்லை. சில படங்களைப் பார்த்தால் அது ஹிட்லர் தான் என்று நம்புவதுகூடக் கடினமாகிவிடும். நானே எடுத்த படங்கள் ஒன்றில் அழகு பொதிந்திருந்த அவருடைய முகபாவம் மற்றொன்றில் மிகவும் கொடிய தோற்றத்துடன் இருந்ததென்றால் பார்த்துக்கொள்ளுங்கள். மிகவுயர்ந்த ரகமான என் புகைப் படக் கருவியில் அப்பழுக்குச் சொல்லமுடியாது. அவரது தன்மைக்கே இது ஒரு உதாரணமாகும்.

ஜெர்மனியில் நான் தங்கியிருக்கும்போது பண்டித ஜவஹர்லால் நேருவையும் நான் அங்கே சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் அது அவருடைய வாழ்வின் சோகமான கட்டத்தில் நடைபெற்றது. அப்போதுதான் இந்தியாவிலிருந்து சிறை விடுவிக்கப்பட்டு பேடன் வீலரில் தனது அருமைத் துணைவி கமலாவின் சிகிச்சையின்பொருட்டு வந்திருந்தார். அதுவரையிலும் நான் அந்தத் தம்பதிகளைப் பார்த்துப் பேசிப் பழகியிருக்காவிட்டாலும் அன்றாடம் ஆஸ்பத்திரிக்குச் சென்று கமலாவின் உடல்நிலை பற்றித் தாதிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தவறுவதில்லை. அச்சமயம் அங்கு நான் ஓய்வெடுத்துக்கொண்டு தங்கியிருந்தேன். ஒரு நாள் நான் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே செல்லும்போது அப்போதுதான் உள்ளே நுழைந்துகொண்டிருந்த நேருவை சந்தித்தேன். கமலாவின் உடல் நிலைபற்றி விசாரித்துக்கொண்டே அவருடைய தோற்றத்தைப் படம் எடுத்தேன். அப்போது அவருடைய தோற்றம்

கவலை நிரம்பியதாக இருந்தது. மோனத்தில் அடங்கிய முனிவரைப்போல் ஆழ்ந்த சிந்தனை குடிகொண்டிருந்தது அவர் முகத்தில். அவர் அறியாமலே ஒரு நொடியில் நான் எடுத்த படத்தில் அவர் கையெழுத்திட்டுக் கொடுத்திராவிட்டால் அவருடைய படம் தானா என்று கண்டுபிடிக்க முடியாது. விநோதமான ஒரு தொப்பியுடன் குனிந்த பார்வையில் பக்கவாட்டில் விழுந்திருக்கும் படம் அது.

கமலா நேரு காலமாகிவிட்ட பின்னர் நேரு லண்டனுக்கு வந்திருந்தார். ஆண்ட்ரூஸ்—நேரு இருவரையும் சேர்த்து அங்கு படம் எடுத்திருக்கிறேன். நேருவுக்கு அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவங்கள் பலவும் என் காமிராவுக்குத் தப்பவில்லை.

இரண்டாண்டுகட்குப் பின்னர் அங்கே இந்தியாவில் திரிபுரி காங்கிரஸின்போது மேடையில் இருந்துகொண்டே காட்சிகள் எடுத்தேன். ஒரு நாள் காலையில் நேருவின் காரியதரிசி உபாத்தியாயா என்னோடு அன்புடன் பேசிக்கொண்டிருந்தபோது தன் ஜாகையிலிருந்து நேருஜீ வெளியே வந்தார். என்னைக் கண்டதும் அடையாளம் தெரிந்துகொண்டு புன்முறுவல் செய்தார். சில விநாடிகள் பேசிவிட்டுப் பிரிந்தார். இந்த சமயத்திலுங்கூட என்படப்பிடிப்பு நடைபெறத்தான் செய்தது.

உடல் நலமின்றி ஓய்ந்து போயிருந்த ராஷ்டிரபதி சுபாஷ் சந்திரபோஸ்கூட என் வேண்டுகோளுக்கிணங்கி நின்று உதவி செய்திருக்கிறார். அந்தப்படங்களிலும் அவருடைய அப்போதையத் தோற்றங்கள் தெளிவாக விழுந்திருக்கின்றன. மகாத்மா காந்தியடிகளுடனும் என் காமிராவுக்கு நல்ல தொடர்பு உண்டு. படம் பிடிப்பவர்களைப்பற்றி அவர் கூறிய விகடத் துணுக்குகள் நினைவில் இல்லை.

படம் பிடிப்பதற்குத் தயாராய் ஆவலுடன் இருந்த பெரிய மனிதர்கள்—பிரபலஸ்தர்களிலே—நான் முஸோலினியைப் போல் ஒருவரைப் பார்த்ததேயில்லை. நான் அவரைப் பேட்டி கண்டபோது ஒரு விநாடி எனக்காகத் தோற்றமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஒரு விநாடியல்ல; இஷ்டப்படி எவ்வளவு நேரமானாலும் தயார் என்று எழுந்து நின்றார் அவர். படம் பிடித்த பிறகு அவர் கேட்டார். "ஆமாம், இந்தப் படங்களால் உனக்கு என்ன உபயோகம்?" என்று. அதை இனிமேல்தான் சிந்திக்கவேண்டுமென்றும் கூடுமான வரையிலும் நல்ல வழியில் அதை உபயோகிப்பேனென்றும் அவருக்கு உறுதி கூறினேன். ஆனாலும் அந்த மனிதருக்குக் கொஞ்சம் சந்தேகம்தான். 'என் படங்களைக் கெடுத்துவிடமாட்டாயே' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். பிறகு கை குலுக்கிவிட்டு விடையளித்தார்.

மேல் நாடுகளைச் சுற்றிப்பார்த்து, சமூக அமைப்பில் மக்கள் பயிலும் ஒழுக்கமும், சுறுசுறுப்பும், செயல் திறனும், நாம் கண்டறிய வேண்டியவையேயாகும். ஆயினும் அவற்றிலிருந்து நாம் கொள்ளத் தகுந்த அறிவைத் தேர்ந்தெடுப்பதில் தான் நமது வெற்றி அடங்கியிருக்கிறது. அதிலும் மேனாடுகள் சென்று கலைப்பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் இது பற்றி நன்கு சிந்தித்தே ஆகவேண்டும்.

ஒவ்வொரு மண்ணும் வெவ்வேறு வளம் உடையது. பண்பாடு—கலாசாரம் என்றெல்லாம் சொல்கிறோமே இவை யாவும் ஒவ்வொரு மண்ணின் சீதோஷ்ண பூகோள நிலையைப் பொறுத்தே தாம் உருவாகின்றன. மனிதன் மட்டுமல்ல—ஜீவராசிகள் யாவுமே தங்கள் உயிர்வாழ்விலும், இயக்கத்திலும் இந்த நியதிக்கு உட்பட்டவைதான்.

குளிர் நிறைந்த மேல்நாடுகளிலே இருக்கிய கால் சட்டையும் மேலுடையும் நாகரீகமாக கருதப்படு கிறது — இயற்கையை யொட்டித்தான். ஆனால் உஷ்ணப் பிரதேசமான இந்தியாவில் அந்த உடை இயற்கைக்கு மாறானதாகும். மேல் நாடுகளிலே பிரம் மசாரிகள் மணம் செய்துகொண்டு இல்லறம் அனுஷ் டிக்க அரசாங்கத்தார் பண உதவியும் பிரசாரமும் கூட செய்ய வேண்டியிருக்கிறது. ஆண்டுதோறும் பயங்கரமான அளவில் ஜனத்தொகை பெருகிக் கொண்டிருக்கும் நம்முடைய நாட்டில் மேல்நாட்டு முறையைக் கடைபிடித்து இல்லறப் பெருமையை வலியுறுத்தவேண்டிய அவசியம் எங்கே இருக்கிறது? அன்றாட வாழ்க்கை முறை—நடையுடை பாவனை களில் நமக்கு முற்றிலும் மாறுபட்டது மேல்நாடு.

மனிதன் செயலிலும் அறிவிலும் ஓங்கி வளர் வதைத்தான்—அந்த வாழ்க்கை முறையைத்தான்— நாகரீகம் என்று சொல்லுகிறோம். இடத்திற்கு ஏற்ப இயல்பாக அமையும் வாழ்க்கை முறையை ஏற்று, அதைச் சிறப்புற வளர்ப்பது நாகரீகம். ஆனால், இன்று எந்த விஷயத்தையும் காலதூர வர்த்தமானம் கடந்து அகில உலக ரீதியில் பார்த்துப் பழகவும் நடைமுறையில் கொண்டு செலுத்தவும் கூடிய நிலை மையில் இருக்கிறோம். அரசியல் பொருளாதாரத் துறையில் எல்லா நாடுகளுடனும் நமக்குத் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொடர்பில் நாம் எவ் வளவு தூரம் எச்சரிக்கையாக இருக்கிறோம் என் பதைப் பார்க்கும்போது பெரும்பாலும் நாம் அடைந் திருக்கும் லாபத்தைவிட நஷ்டமே அதிகமாக இருக் கிறது.

இந்திய மாணவர்கள் இங்கிலாந்திலோ—பாரி ஸிலோ காலடி வைத்த மூன்று மாதங்களுக்குள் எப் படியெல்லாம் உருமாறி — உளம்மாறி — நடையுடை மாறி சீர்கெட்டுப் போகிறார்கள் என்பதை மிகுந்த

வேதனையுடன் கவனித்திருக்கிறேன். அந்தக் காட்சிகளைப் படம் பிடித்தும் வந்திருக்கிறேன்.

மாணவர்கள் இங்கிலாந்து சென்று படித்துத் திரும்பினாலும் அவர்கள் பெறும் கல்வியறிவு அல்லது இலாபம் பத்து சதவிகிதமென்றால், நமக்குக் கொஞ்சமும் அவசியமற்ற மேல்நாட்டு வேஷங்களிலே மனதை பறிகொடுத்து அந்தச் சேற்றைப் பூசிக்கொள்வதன் மூலம் 90 சதவிகித நஷ்டம் அடைகிறார்கள். அங்கு பெறும் கல்வி அல்லது அறிவுக்காக இந்திய மாணவர்கள் செலவிடும் நேரமும் செல்வமும் பத்து சதவிகிதம்கூடப் பயன் தருவதில்லை. எந்தத் துறைபற்றிய கல்விக்காக மேல்நாடு சென்றாலும் அந்தத் துறையின் அடிப்படையான ஒரு சிலவற்றையாவது இங்கிருக்கும்போதே அனுபவ பூர்வமாகச் செயல் புரிந்தும் படித்தும் தன்னை தகுதியாக்கிக்கொண்டு சென்றால் வெளிநாட்டில் பெறும் பயிற்சி ஓரளவு பயன் தரலாமென்பது எனது கருத்து. அத்துடன் நமக்குச் சற்றும் பொருந்தாத நாகரீகங்களைக் கண்டு மயங்குவது மதியீனம்.

இரண்டாவது ஐரோப்பிய பிரயாணத்தில் இங்கிலாந்து ஜெர்மனி போன்ற இரண்டொரு நாடுகளில் மக்களின் நடத்தை, வாழ்க்கை ஆகியவைப்பற்றி மட்டுமே கூறினேன். ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் நான் பெற்ற அனுபவங்களை விரிக்கின் பெருகும். நான் திரும்பி வரும்போது கப்பலில் இந்திய பிரதிநிதியாக லின்லித்கோ தம்பதிகளும் உடன் வந்தார்கள்.

# புத்துலகை நோக்கி

மூன்றாவது தடவையாக 1939-ல் வெளிநாட்டு பிரயாணத்தை மேற்கொண்டேன். கோவையில் எனது மேற்பார்வையில் நடைபெறும் மோட்டார் போக்குவரத்து ஏற்பாடுகளுக்கு தக்க நபர்களை அமர்த்திவிட்டு, அமெரிக்க நாட்டின் விஞ்ஞான அதிசயங்களைக் கற்று வரவேண்டுமென்பதே என் நோக்கம். ஆனால் நான் முதலில் சென்றது ஐரோப்பாவுக்கேதான். இங்கிலாந்தில் பல மாதங்கள் கழித்த போது ஹிட்லர் யுத்தப் பிரகடனம் செய்துவிட்டார். எனவே அங்கு அமைதியற்ற சூழ்நிலை உருவாகி வளர்ந்துகொண்டிருந்தது. எப்படியும் நியூயார்க்கில் அப்போது ஆரம்பமாகவிருந்த உலகப் பொருட்காட்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்ற திட்டம் எனக்கு உறுதியாக இருந்தது.

புது உலகம் என்று வியப்புடனும் பூரிப்புடனும் மக்கள் கூறும் அமெரிக்கப் பெருநிலம் நோக்கி நான் வங்கம் ஊர்ந்து சென்றேன். நியூயார்க் நகரிலே வந்து இறங்கியபோது எனக்கு ஏற்ற வாசஸ்தலமாக ஒரு பெரிய ஹோட்டலில் இடம் ஏற்பாடு செய்து கொண்டேன், அந்தத் திருநகரில் உல்லாசமான பெரிய விடுதிகளில் ஒன்று அது. உலகக்காட்சி நடைபெறும் காலமும் அதுவாகவே இருந்தபடியால் அந்த ஹோட்டலில் தங்கியிருக்கப் பெரும் தொகை செலவிட வேண்டியிருந்தது.

உணவுச் சாலைகளில் அருந்திச் செல்வோர் வேலைக்காரர்களுக்கு, சில்லரைக் காசுகளை மேஜையிலேயே விட்டுச் செல்வது ஒருவகை சமூகப் பெருமிதமாகக் கருதப்படுகிறது. அமெரிக்காவிலே ஒரு

நாள் இந்த ஹோட்டலிலிருந்து வெளியேறும்போது எழுபது டாலர்களை இப்படிச் சில்லரை விட்டுச் சென்றேன் என்றால் அந்த ஹோட்டலைப்பற்றி ஒருவாறு கற்பனை செய்துகொள்ள முடியுமல்லவா?

நியூயார்க் நகரிலே எனது அன்றாட வேலை திட்டம் மிகவும் ஒழுங்கானது. பத்து நாட்கள் வரையில் பொருட்காட்சிசாலையிலே சென்று சுற்றித்திரிவது ஒரு நியமம். வெறும் விநோதங்களை மட்டும் கொண்ட பகுதிகள் தவிர அறிவுக்கும் தொழிற் பயிற்சிக்கும் விஞ்ஞானப் புதுமைக்கும் ஆதரவான இடங்களையும் பொருள்களையும் கவனித்து அவற்றைப் பரிசோதித்து அறிவதிலேயே முழு கவனமுமிருந்தது. நான் கண்டு வியந்த—அல்லது அறிந்த பெரும் காட்சிகளையும் பொருள்களையும் நாலாயிரம் அடி வரையிலும் படம் பிடித்திருக்கிறேன். நான் பார்த்தது, கேட்டது, அறிந்தது ஆகிய ஒவ்வொன்றையும் பற்றிய விரிவான குறிப்புகள் என்னிடம் இருக்கின்றன. இது அமெரிக்காவுக்கு இரண்டாவது தடவையாக இருந்தபோதிலும் அலட்சியமெதுவும் காட்டாமல் மிகவும் ஊக்கத்துடன் ஒவ்வொன்றையும் கவனித்திருக்கிறேன். நம்முடைய நகரப் பகுதிகளில், ரயில் வரும் நேரத்தில் நடுப்பாதையை அடைத்து இருமருங்கிலும் பிரயாணிகளையும் ஊர்திகளையும் நெடுநேரம் தேக்கி வைப்பதில் 'ரயில்வே கேட்' காவலாளிகளுக்கு ஒருவித 'மதிப்பே' ஏற்பட்டுவிடுகிறதல்லவா? ஜன சந்தடியும் ஊர்திகளின் ஓட்டமும் மிகுந்த நியூயார்க் நகரத்தில் ஒரு ரயில்வே 'லெவல் கிராஸிங் கேட்' கூட நான் பார்க்கவில்லை. இந்தியாவில் ரயில் வண்டிகளில் நான்கு மைல் பிரயாணம் செய்தாலும் ஒரே கரிப்புகையுடன் தான் கீழே இறங்கவேண்டும். வீட்டுக்கு வரும் போது ஆளைப்பார்க்கச் சகிக்காது. அமெரிக்காவில் ஆயிரம் மைல் ரயில் வண்டியில் இரவு பகலாகப்

போய்வந்தாலும் சிறிதும் அழுக்குபடியாத உடையுடன் கீழே இறங்கமுடியும்.

ஒவ்வொரு நாளும் பொருட்காட்சிக்கு சென்றேன். முதலில் சென்று கடைசியில் வெளியேறுபவன் நான்தான். காலையில் சிற்றுண்டி முடித்துச் சென்ருல் இரவு திரும்பி வரும் வரையில் இடையில் உணவு கொள்ளவே முடியவில்லை. உணவு அங்கே கிடைக்க வில்லையென்று யாரும் கருதிவிடக்கூடாது. அதற்கு நேரமோ கவனமோ இல்லாமல் பொருட்காட்சியில் மனம் பறிகொடுத்திருந்ததே.

நெடுங்காலமாக என்னைத் துன்புறுத்தியிருந்த வயிற்றுக்கோளாறு அங்கும் என்னைத் தொடர்ந்தது. டாக்டர் பிக்கார்டு என்ற பிரபல மருத்துவரிடம் சிகிச்சையும் பெற்றுக்கொண்டு, சிகாகோ நகருக்கு பிரயாணமானேன்.

சிகாகோ நகரத்தைப்பற்றி நம்மவர் அனைவரும் அவசியம் கேள்விப்பட்டிருப்பார்கள். காவி உடையும் கமண்டலமும் பூண்டு, ஆங்கில மொழித்திறனும் அறிவுச் சுடரும் கொண்டு, மற்றை நாட்டவர் கண் முன் கம்பீரமாக எழுந்து நின்று விவேகானந்தர் வீர கர்ச்சனை புரிந்தது இந்த நகரில்தான். ஏனைய நாட்டினரும் இந்திய நாட்டின் பெருமையை உணரக் காரணமான அந்த மாநாடு நடைபெற்றது இங்கு தான்.

உலகத்திலேயே நாகரீகம் மிகுந்ததும்-விஞ்ஞான உண்மைகளை மானிட வாழ்வின் வெற்றிக்கு அடிமைப் படுத்திக் கொண்டிருப்பதுமான புது உலகம் என்று அமெரிக்காவைக் குறிப்பிடுகிருர்கள். சிகாகோ நகரம் உலகப் பிரசித்தி பெற்றது. 1940 ஆண்டு முதல் நாள் சிகாகோ நகரில் இருந்தேன். செல்வச் செருக்கும் போகபோக்கியங்களும் நிறைந்த அந்த அழகிய நகரில் ஆடம்பரத்தின் உறைவிடமான வீடுதி

யொன்றில் நான் இறங்கியிருந்தேன். மது வகைகள் அருந்தி, பெண்களுடன் கைகோர்த்து ஊர் வியக்கக் களித்து நின்றுடும் உல்லாச புருஷர்கள் நிறைந்திருந்த இடம் அது. மண்ணின் துன்பங்களை மறந்து ஒரே மயக்கத்தில் மெய்மறந்திருக்கும் அந்த இடம் யாரையும் தன் வசப்படுத்திக்கொள்ளக்கூடியது. நான் அங்கே தங்கி அந்தச் சுழலில் நானும் கலந்திருந்த போதிலும், உணர்ச்சிக்கு அடிமைப்பட்டுக் களியாட்டயர்ந்து என்னை மறந்து விடாமல் அனைத்தையும் ரசமான நாடகக் காட்சியாகத் தனி நின்று பார்த்து வியந்திருந்தேன். அறிவைச் சூறையாடும் அந்த நாகரீகத்தில் சதா தன்னை நினைவு படுத்திக்கொண்டு சுயநினைவில் கவனத்துடன் இருக்கவேண்டுமென்ற கவலை எனக்கு,

நான் எழுதி வைத்திருந்த குறிப்பு, என்னுடைய கரங்கள் அடிக்கடி திறந்து பழகும் பணப்பையில் பத்திரமாகப் படுத்திருந்தது, இரவு வேளைகளிலும் தோன்றியபோதும் அடிக்கடி அதை படித்துக்கொண்டேன். புது வருஷப் பிறப்பில் பெண்டிரும் ஆடவரும் களித்து நின்ற அந்த ஹோட்டல் கோலாகலங்களில் நான் 'சாட்சி பூதமாக' அங்கு இருந்திருக்கிறேன். இரவு நெடுநேரம் சென்றபின்னர் அவரவர் ஆடி ஓய்ந்து அயர்ந்துவிட்டபோது நானும் என் இருக்கை சேர்ந்தேன்.

கூட்டத்தில் கரைந்துபோகாமல் என்னை மீட்டுக்கொண்டு என்னிருக்கை சேர்ந்த அரை மணி நேரத்தில் என் அறைவாயிற் கதவு தட்டப்படும் சப்தம்கேட்டேன். அந்த அகாலத்தில் அதன்பொருள் புரியாத நான் கதவைத் திறந்தபோது அலங்கோலமான உடையில் நான்கு அமெரிக்க அழகிகள் என் அறையில் சுதந்திரமாக நுழைந்து ஆசனங்களில் அமர்ந்துகொண்டார்கள். எப்படியிருக்கும் நிலைமை! அழகிகள் நன்கு குடித்துக் களிவெறியில் கண்கள்

சிவந்து உடல்கள் நிலைதெரியாமல் முறுக்கேறித் தளிர்த்துத் தள்ளாடிய நிலையில் என்னை விழுங்கிவிடுவதுபோலப் பார்த்தார்கள். எழுந்து நால்வரும் என்னைத் தொட்டு விளையாட ஆரம்பித்துவிட்டனர். என்பாடு சங்கடமாகப் போய்விட்டது.

ஒவ்வொருத்தியாக மெதுவாகப் பிடித்து இழுத்துச்சென்று வெளியே விட்டுவந்தேன். மறுபடியும் அவர்கள் உள்ளே நுழைந்துவிட்டார்கள். எனக்கு மிகவும் கோபமாக வந்தது. அவர்களை உறுத்துப் பார்த்தேன். எவளும் என் கோபத்தை லட்சியம் செய்பவளாகத் தோன்றவில்லை. 'தொலைந்து போங்கள்' என்று சத்தமிட்டேன். அவர்கள் குடித்து வெகுநேரமாகிவிட்டபடியால் உடல் கட்டுமீறிக் கொண்டிருந்தது போலும், ஒவ்வொருத்தியாகத் தள்ளாடிக்கொண்டே பிணம்போலக் கொஞ்ச நேரத்தில் என் அறையிலேயே சாய்ந்துவிட்டார்கள். என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. அந்த இரவு பூராவும் தூக்கமில்லாமல் நான் அங்கேயே விழித்துக் காவல் இருந்தேன். வேடிக்கையாக இருந்தது இப்படியும் இருப்பார்களா என்று. எப்போது நான் கண்ணயர்ந்தேனோ தெரியாது. மறுநாள் காலையில் அவர்கள் எழுந்துசென்று தங்களைப் புதுப்பித்துக் கொண்டு மீண்டும் என்னிடம் வந்தார்கள். நான் முகம் கொடுக்கவில்லை. இரவு நடந்தது ஒன்றும் தங்களுக்கு நினைவில்லையென்றும், அபசாரமாக ஏதாவது நடந்துகொண்டிருந்தால் தங்களை மன்னிக்க வேண்டுமென்றும் அடக்கமாகவும் மரியாதையாகவும் அவர்கள் கழிவிரக்கம் தெரிவித்தார்கள்,

உண்மைதானே, பாவம். அவர்கள் சுயநிலையில் இருக்கவில்லையல்லவா? உள்ளே போன சரக்கு அவ்வளவு 'உயர்வானது' அவர்கள் அதற்கு அடிமைப்பட்டிருந்தபோது மனிதப் பண்பையே இழந்து மிருகமாகிவிட்டதில் வியப்பில்லையல்லவா? நான் சிரித்த

வாறே விடைகொடுத்தேன். அவர்களில் ஒருத்தி, பிறகு ஒரு சமயம் என்னைத்தான் மணக்க விரும்பு வதாக ஒரு உருக்கமான அன்புக் கடிதமே கூட எழுதி என்னைக் கவர முயற்சித்தாள். நான் அவளுக்கு பதில் எழுதும்போது அவளிடம் எனக்கு அனுதாபமே மிகுந்திருந்தது. இந்திய நாட்டின் பண்பு, கலாசாரம் இவற்றை இன்னதென்று அறிந்து கொள்ளாமல் அமெரிக்கப் பெண்கள் இந்தியரை மணக்க விரும்புவதில் பயனில்லையென்று அவளுக்கு நான் எழுதி சமாதானம் செய்தேன்.

சிகாகோவில் இருந்தபோது பல மாநாடுகளில் இந்தியாவின் பிரதிநிதியாக இருந்து நான் கலந்து கொண்டேன். அமெரிக்க தளவாடங்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றபோது, ராகோலா உற்பத்தியாளர்களுடன் நான் வர்த்தக சம்பந்தமான சர்ச்சைகள் புரிந்தேன்.

அதே வருஷம் பிப்ரவரி மாதத்தில் சிகாகோ வில் நடைபெற்ற அகில உலக வர்த்தக மாநாடு ஒன் றில் நான் கலந்து கொண்டேன். யு. ஸ் வர்த்தக உடன் படிக்கைகள், கிரேட் பிரிட்டனுடன் நாணய மாற்று போன்ற விஷயங்களிலும், ஏற்றுமதி இறக்கு மதி பற்றிய துறைகளிலும் விஷயங்களை ஆழ்ந்து ஆராய்ந்து பேச வேண்டியதாயிற்று. ஸ்ரீமதி லேமன் கிரே என்ற சீமாட்டி தன் அன்பின் அடையாளமாக அது போது எனக்கு மலர்க் கொத்து ஒன்றை பரி சளித்தார்,

சிகாகோ ஹெர்மன் ஹோட்டலில் "காயின் மெஷின் கன்வென்ஷன்" கூட்டம் நடை பெற்ற போது ஆரோரா ஸ்டோன்ஸ் கார்ப்பரேஷன் காரர் கள் நடத்திய ஆராய்ச்சி ஒன்றிலும் நான் கலந்து கொண்டேன். சிகாகோவிலிருந்து செயின்ட் லூயி

என்னும் இடத்திற்குச் சென்றேன். அங்கு ஒரு பள்ளிக்கூடத்தில் சில காலம் பயிற்சி பெறுவதே என் நோக்கம். சில வாரங்கள் சேர்ந்தாற்போல் தங்கியிருந்த அமெரிக்க நகரம் செயின்ட் லூயிதான். அங்கு சென்றிருந்தபோது நல்ல மழை காலம். சூழ்நிலை மிகவும் கெடுதலாக இருந்தது. கொடுமையான குளிர், கம்பளியோ, நெருக்கமான உடைகளோ இல்லாமல் வெளியே தலை நீட்ட அமெரிக்க மக்களுக்கே சாத்தியமில்லாத சீதோஷ்ண நிலை. அந்த இடத்திலும் கூட சாதாரண தமிழ் நாட்டு உடையில், வழக்கம் போன்றே வேஷ்டி, ஷர்ட், துண்டு இவற்றுடன் தான் நடமாடிக்கொண்டிருந்தேன், அப்போதெல்லாம் வேளா வேளைக்கு உணவு கூட அருந்த நேரமில்லை. ஒரு நாள் காலையில் 9 மணிக்கு வேலை தொடங்கி மறு நாள் பகல் 12 மணி வரையிலும் உணவோ உறக்கமோ கூட இல்லாமல் ஒரு கோப்பைத் தண்ணீர் கூட அருந்தாமல் கருமமே கண்ணாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தேன்,

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? சிறு பிராயத்தில் குவியாத உள்ளம், வயது முற்றிய பின் ஒன்றில் குவிவது கடினம் தான். எதற்கும் ஒரு விதி விலக்கு இருக்கத்தான் செய்கிறது.

சிறு பிராயத்தில் பயிலாத நான் 47-வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்துப் பரீக்ஷையும் கொடுத்துப் பட்டமும் பெற்றேன். வெளி நாட்டில் சென்று விஞ்ஞானக் கல்லூரி ஒன்றில் யந்திர விஞ்ஞானம் பற்றிய கலைப்பயிற்சி பெற நேர்ந்த வாய்ப்பு முதன் முறையாக என் வாழ்வில் என்னைப் பற்றி மாணவனாக்கியது.

சர்வகலாசாலைப் பட்டதாரிகள் மட்டுமே படிக்கக் கூடிய படிப்பு அது. நான் அந்தக் கல்லூரியில் முதல் இந்திய மாணவனாக 1940-ல் சேர்ந்தேன். செயிண்ட் லூயி என்னும் அமெரிக்க நகரத்தின் கார்

டர் கார்ப்பரேடர் ஸ்கூல் என்பதே என்னை மாணவனாக ஏற்றுக்கொண்ட அப்பாடசாலை.

அந்தப் பாடசாலை மாதந்தோறும் 40 மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பெரும் பணியைச் செய்துகொண்டிருக்கிறது. ஒரு மாணவனுக்கு 200 டாலர்கள் வீதம் வந்தப் பயிற்சிக்குச் செலவிடுவதில் அந்தப் பாடசாலை நிர்வாகிகள் மகிழ்ச்சியே யடைகிறார்கள். விளக்க உரைகள் தத்துவரீதியான அறிவும், யந்திரங்களில் எதிர் நின்று வேலை செய்வதன் மூலம் அனுபவ பூர்வமான பயிற்சியும் அளிக்கப்படுகின்றன, வாரம் ஒன்றுக்குப் பதினறு டாலர்கள் வீதம் உபகாரச் சம்பளம் எனக்குக் கிடைத்தது.

ஒவ்வொருவரும் சர்வ கலாசாலைகளில் பலப்பல வருடங்கள் யந்திரக் கலைகள் படித்துப் பட்டங்கள் பெற்று அனுபவ ஞானம் நாடிச் சில வாரங்கள் இந்தப் பாடசாலையில் பயின்று நிபுணர்களாக வெளியேறுவார்கள். பட்டதாரிகளல்லாதவர்களுக்கு இங்கே வேலையில்லை. ஆனால் அந்தப் பாடசாலையின் சரித்திரத்திலேயே, என்னைப் போன்று — பள்ளிப் படிப்போ, சர்வகலாசாலைப் பட்டங்களோ இல்லாத ஒருவனை—அதுவும் அயல்நாட்டு மாணவனை உவந்து ஏற்றுக்கொண்டது அதுவே முதல் தடவையாகும். என்னைப் பொருத்த வரையில் நான் அங்கு மிகவும் கடுமையாக வேலை செய்தேன் என்பது உண்மைதான். எனக்குத் தேவையான அறிவை அங்கே நான் முற்றிலும் பெறமுடிந்தது. அப்போது நான் சற்று உடல் நலம் தளர்ந்திருந்தேன். உடல் சீர் பட்ட பிறகு மனித சமுதாயத்திற்குப் பயன்படுவதான கலை எதையும் சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் கற்கத் தவறக்கூடாது என்ற உணர்ச்சி எனக்கு அங்கு பயின்றதன் விளைவாக ஏற்பட்டது. நான்தான் அங்கு படித்த முதல் இந்திய மாணவன். அங்கு என்னுடன் பயின்ற தோழர்கள் அனைவரும் நிபுணர்களும் என்

னிடம் காட்டிய மதிப்பும் பரிவும் எனக்குப் பெரும் உற்சாகமளித்தன. பாடசாலையைவிட்டு வெளியேறும்போது மாணவர்கள் சேர்ந்து புகைப் படம் எடுத்துக்கொண்டோம். தமிழில் என் நன்றியைத் தெரிவித்து ஒரு பாராட்டுச் செய்தியும் அந்தப் பாடசாலை நிர்வாகிகளுக்குக் கொடுத்தேன். அந்த நிர்வாகத்தினர் இடக்கும் பத்திரிகை ஒன்றில் என் செய்திக் கடிதம் அப்படியே படம் எடுத்து அச்சிடப்பட்டதுடன் நாங்கள் கலந்துகொண்ட விருந்து ஒன்றின் புகைப்படமும் வெளிவந்தது. எனக்கு அங்கு பட்டமும் வழங்கியிருக்கிறார்கள்.

நான் பயின்ற அந்த 'முதல் பாடசாலை' நிர்வாகிகளின்பால் நன்றி பாராட்டி நான் தமிழில் எழுதியதும், அப்படியே அமெரிக்கப் பத்திரிகையில் பிரசுரமானதுமான கடிதம் வருமாறு :—

"அன்புள்ள ஐயா,

உலகத்திலேயே முதன் முதலாக ஏற்பட்டதும் மிகப் பழமையானதும் மற்றெல்லா பாஷைகளுக்கும் பிறப்பிடமானதும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பெரும்பாலோரால் பேசப்படுவதுமான "தமிழ்"ப் பாஷையில் இந்தக் கடிதத்தை இந்தியாவிற்கு மறுபாதியிலிருக்கும் உங்கள் ஊரிலிருந்து மிகச் சந்தோஷத்துடன் எழுதுகிறேன்.

"இந்தியாவிற்கு மிக அத்தியாவசியமானதும் இந்தக் கைத்தொழிலில் மிக முக்கியமானதும் இந்த நிமிஷம் வரையில் நூதனமாக ஏற்பட்டுள்ள வேலைப்பாடுகளை பூரணமாகக் கையாளக்கூடியதுமான முறைகளை இங்கு உங்களிடமிருந்து தெரிந்து கொள்ள எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்கும், அமெரிக்கா ஜனங்களுக்கு இந்தியாவிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை உங்கள் கூட்டங்களில் பேச சந்தர்ப்பமளித்ததற்கும் மிகவும் சந்தோஷமடைகின்றேன்.

## FACTORY SCHOOL GRADUATE



G. D. NAIDU
Managing Agent
United Motors (Coimbatore) Ltd.

The first student from India to attend the St. Louis Factory Service School is Mr. G. D. Naidu, Managing Agent of United Motors Service, Coimbatore, India. Mr. Naidu operates a fleet of 280 buses of American manufacture and maintains six service garages to care for these buses. His organization has all the equipment necessary to rebuild motors and build bodies.

About 1500 men are regularly employed. In addition, a school is operated the year around for approximately 150 apprentices.

[illegible]

The above letter was written by Mr. Naidu in the Tamil language, defined by Webster's dictionary as "The oldest, most cultivated, and rich language of the Dravidian languages." Following is an English translation:

"I am very glad to have had this rare opportunity of learning from you very important first-hand information of this industry, a dire necessity for India. Also I am glad for the opportunity given by you to tell some facts of India, which is also a need for the American citizens to know of India. Certainly, I enjoyed here my actual first student life better and more than any other students or professors. I hope every other organization will follow the path in their line, same as Carter's example, and do their duty to the benefit of the public, country, and themselves.

"Again I wish to extend my appreciation to your officers and professors in this department for their courtesy and personal interest given to the students."

Yours very sincerely,
G. D. NAIDU, Managing Agent United Motors (Coimbatore) Ltd.



Photograph of a banquet given by Mr. Naidu to the students and instructors of the Factory Service School in appreciation of the courtesy and cooperation extended him while in St. Louis.

“எனது வாழ்நாட்களில் வேறெந்தக் காலத்திலும் எந்த இடத்திலுமிருந்ததை விடவும், வேறெந்த மாணவர்களோ கல்வியாளர்களோ அனுபவித்ததை விடவும் பல மடங்கு சந்தோஷத்தை இங்கு நான் முதல் முதலாக மாணவனாக உங்களிடம் இருந்த பொழுது அனுபவித்தேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

“மற்றெல்லா தொழிற்கூடங்களும் இந்த கார்டர் ஸ்கூல் உதாரணத்தைப் பின்பற்றி தங்கள் தொழில் முறைகளில் செய்யவேண்டிய தங்கள் கடமைகளை பொதுஜன நன்மைக்கும் தேச நன்மைக்கும் தங்கள் நன்மைக்குமாகச் செய்வார்களென நம்புகிறேன்.

“தங்கள் ஸ்கூலை நடத்தும் உத்தியோகஸ்தர்களும் உபாத்தியாயர்களும் மாணவர்களை மரியாதையாகவும், கௌரவமாகவும் நடத்திவந்ததையும் அவர்களைச் சொந்தமாகப்பாவித்து அவர்களுக்கு எடுத்துக்கொண்ட சிரத்தையையும் நான் மிகப் பாராட்டுவதோடு எல்லோருக்கும் என் மனப்பூர்வமான வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் மிகவும் உண்மையுள்ள

கோ. துரைசாமி நாயுடு.

---

பாடசாலை நேரம் தவிர மிகுந்த சமயங்களில் நான் ஆங்காங்கு அழைப்புகளுக்கிணங்க பல இடங்களுக்கும் சென்று சொற்பெருக்குகள் நிகழ்த்தியிருக்கிறேன். அமெரிக்க வழக்கப்படி சொற்பெருக்குகளுக்கு சபையினர் சந்தா செலுத்தும் தொகையைச் சொற்பொழிவாளர்களுக்குச் சன்மானமாக அளிப்பதுண்டு. ஒரு இடத்தில் அப்படி அளிக்கப்பட்ட தொகையை நான் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன்.

கலை, கைத்தொழில், சமூகம் ஆகிய துறைகள் பற்றிப் பல சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளேன். வாழ்வின் பல துறைகளைப் பற்றியும் ஒரு இந்தியருடைய பார்வையும் ஆராய்ச்சியும் முடிவும் இன்னதென்று அறிந்துகொள்வதில் அமெரிக்கருக்கு அளவற்ற ஆவல் இருக்கிறதென்று தெரிகிறது. எனவே எனது பேச்சு அவர்களை மிகவும் கவர்ந்திருக்க வேண்டும்.

சற்று ஓய்வாக எங்கேனும் ஓரிடத்தில் சில நேரம் நான் அமர்ந்திருந்தால் என்னைச்சுற்றி உடனே சிறு கூட்டம் சேர்ந்துவிடும். இந்தியாவைப் பற்றி எண்ணற்ற கேள்விகள் கேட்டு விடையறிய, அந்தக் கூட்டத்தினர் முயற்சி செய்வார்கள். அவர்களுடைய ஆவலும் வியப்பும், அவர்களுக்குப் பதில் கூருமல் போய்விட யாருக்குத்தான் இடம் கொடுக்கும்! அமெரிக்கர்கள் அதிதிகளை உபசரிப்பதில், நட்பு முறையில், நன்னடத்தையில் மிகச் சிறந்து விளங்குகிறார்களென்பது எனது அனுபவம். ஆனல் ஆன்மீக ஞானத்தில் அவர்கள் நம்மைவிடப் பின்னல்தான் இருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும். தொழில் வளத்திலும் விஞ்ஞானத் துறையிலும் உலகில் எந்த நாட்டினரையும்விட அமெரிக்கர்களே தலைசிறந்து விளங்குகிறார்கள் என்பது நான் கண்டறிந்த உண்மை.

ஒரு கூட்டத்தில் நான் பேசும்போது குறிப்பிட்ட சில தத்துவங்கள் பற்றி மீண்டும் விரிவான பிரசங்கங்கள் புரியும்படியான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுவிட்டன. "பிறரை ஏமாற்றாதே- உன்னையும் ஏமாற்றிக் கொள்ளாதே, பிறர் பொருளைத் திருடாதே—உன் பொருளையும் கூடத்தான். மதுவருந்துவதால் உள்ளம் சிதைந்துபோகிறது, உடலைபேணி வளர்க்க வேண்டும்—ஒழுக்கம் விழுப்பம் தரும்—இயற்கை அழகே அழகு" இத்தகைய தத்துவங்களை நான்

பேச்சுப் பொருளாகக் கொண்டதுமன்றி, இந்த அடிப்படைகளில்தான் இந்தியர்கள் நிலைபெற்று விளங்குகின்றனரென்றும் அங்கு விளக்கினேன்.

பிறரை வஞ்சிப்பதும் பிறர் பொருளை கவர்வதும் தீது என்ற அறவுரையை அமெரிக்கர்கள் புரிந்து கொண்டார்கள் என்றாலும் தன்னைத்தானே வஞ்சிக்கக்கூடாது—தன் பொருளையே திருடிக்கொள்ளக் கூடாது என்ற வாசகங்கள் அவர்களுக்குப் புதிதாகவும் புதிராகவும்கூட இருந்தன. ஆன்மீக ஞானம் குறைவு என்பது தவிர அவர்களுக்கு இந்த உபதேசம் விளங்காமற்போனதற்கு வேறு என்ன காரணம் இருக்கக்கூடும்? அமெரிக்கரின் வாழ்க்கையையும் நாகரீகத்தையும் பாராட்டிப் பேசிய ஒரு கூட்டத்தில் நான் பின்வருமாறு கூறினேன். "மற்ற நாட்டவருக்கு எத்தனைபோ விதமான விரோதிகள் இருக்கிறார்கள். ஆனால் அமெரிக்கருக்கு மிகப் பயங்கரமான இரு விரோதிகள் இருக்கிறார்கள். ஒருவர் திருவாளர் புகையார், மற்றொருவர் திருமதி புகைச்சியார்."

பெண்கள் கூட்டமொன்றில் நான் பேசியதை அமெரிக்க தினசரிப் பத்திரிகையொன்று ஆர்வத்துடன் பிரசுரித்ததுமன்றி நான் அமெரிக்கப் பெண்களின் நாகரீகத்தைக் கேலிசெய்து கூறிய வார்த்தைகளையும் பெரிய எழுத்தில் பிரசுரித்திருந்தது.

"அமெரிக்க அழகிகளின் குதியுயர் பூட்ஸ், உதட்டுச்சாயம் இவற்றை இந்தியர் கண்டிக்கிறார்" என்ற தலைப்பிட்டு "மில்வாக்கீ ஜர்னல்" என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதிற்று.

"இந்தியாவில் கோயம்புத்தூர் என்னும் நகரத்திலிருந்து இங்கே வந்திருக்கும் ஜி. டி. நாயடு என்ற அறிஞர் அமெரிக்கப்பெண்கள் உதட்டுச்சாயம் பூசுவதையும் குதியுயர் செருப்புக்கள் அணிவதையும் ஏற்றுக்

கொள்ளவில்லை. இளம் பெண்கள் சிகரெட் குடிப்பதையும் அவர் கண்டிக்கிறார். நாயுடு கோயம்புத்தூரின் யுனைடெட் மோட்டார்ஸ் லிமிடெட், இம்போர்ட்டர்ஸ் லிமிடெட் மற்றும் பல ஸ்தாபனங்களின் தலைவர். அவர் இப்போது அமெரிக்க சுற்றுப் பிரயாணத்திற்காக வந்து நமது மில்வாக்கி நகரத்தில் தங்கியிருக்கிறார். வர்த்தக சம்பந்தமான அவருடைய பல அலுவல்களுக்கிடையே குழந்தைகள் கல்வி சம்பந்தமான ஆராய்ச்சி மன்றத்தின் நடவடிக்கைகளிலும் கலந்து கொண்டிருக்கிறார். அங்கு நடமாடிய கூட்டத்தினிடையே பெண்களைப் பார்த்துவிட்டு நாயுடு மேற்கூறிய கருத்துக்களை அறிவித்தார். இந்தியாவில் பெண்கள் தாம்பூலம் தரித்துக்கொள்வதன் மூலம் உதடுகள் மோகனமான சிவப்பு நிறத்தையடைகின்றனவாம். தாம்பூலம் தரிப்பது மனோல்லாசம் தருவதுடன் ஜீரண சக்தியும் பற்களுக்கு உறுதியும் தருகின்றதாம். அமெரிக்கப் பெண்கள் அர்த்தமில்லாமல் சிகப்புச் சாயத்தை உதடுகளில் பூசிக்கொள்வது ஒரு பயனுமில்லாத காரியம் என்று அவர் கூறினார். குதியுயர் பாதரட்சைகள் அணிவதனால் இயற்கையான அழகு பாதிக்கப்படுவதுடன் இளம் பெண்களின் போக்கையும் கெடுத்துவிடும் என்பதும் அவர் கருத்து.

நாயுடு அவர்கள் 1932-ல் முதன் முறையாக அமெரிக்கா வந்தபோது அவருக்கு ஆங்கிலமே தெரியாமலிருந்தது. எட்டு வருடங்களுக்குப் பிறகு அவர் மீண்டும் நம்மிடை வந்து அருமையாக ஆங்கிலம் பேசுகிறார் இதெப்படி சாத்யமாயிற்று என்று நம்முடைய நிருபர் கேட்டபோது அமெரிக்க மக்களுடன் கலந்து பழகி, மகாநாடுகள், கண்காட்சிசாலைகள் இவற்றில் ஈடுபட்டதால் ஆங்கிலம் பழக்கத்திற்கு வந்துவிட்டது என்று கூறினார். கோயம்புத்தூரில் தன்னுடைய மோட்டார் பஸ் போக்குவரத்துக்

கம்பெனியை ஆரம்பித்து 12-ஆண்டுகளாக ஓய்வுகூட இன்றி அவர் கடுமையாக உழைத்த பிறகு 1932-ல் பல நாடுகளுக்கும் யாத்திரை சென்றார். இந்தத் அமெரிக்காவிலேயே பல இடங்களுக்கும் சென்று ஆராய்ச்சி புரியவே வந்திருக்கிறார். 'பிரஷ்' 'டூத் பேஸ்ட்' இப்படி நாகரீகமாக அமெரிக்கர்கள் பல் துலக்கி வந்தாலும் ஒருவருக்காவது இந்தியர் களைப் போன்று பல் உறுதியாக இல்லை என்று அவர் கேலி செய்கிறார். ஒரு வேளை இந்தியர்களின் கலா சாரம் அல்லது உணவு ஏற்பாடுகள் காரணமாக இருக்கலாம் என்றும் அவர் கருதுகிறார். நாயுடுவின் உணவுவகை என்ன தெரியுமா? ஒரு கோப்பைத் தக்காளிச்சாறு, ஒரு தட்டு அத்திப்பழம் ஒரு கவளம் சோறு. இவ்வளவுதான், மூன்று வேளை ஒரு நாளைக்கு."

மேலே கண்டதுதான் அமெரிக்கப் பத்திரிகை யான மில் வாக்கி ஜர்னல் எழுதியுள்ள குறிப்பு.

செயிண்ட் லூயியிலும் மற்ற இடங்களிலும் நான் தங்கியிருந்த காலத்தில் அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள் என்னை வட்டமிட்டுக்கொண்டேயிருந் திருக்கிறார்கள். என்னுடைய புகைப் படமும் பல கோணங்களில் செய்திப் படங்களும் பத்திரிகைப் பக்கங்களை நிரப்பிக்கொண்டிருந்தன. நான் தொழிற் சாலைகளுக்குச் சென்று யந்திரங்களைப் பார்வையிட்ட போதெல்லாம்கூட அவற்றைப் புகைப்படமெடுத்து பத்திரிகைகள் பிரசுரித்தன.

16 மில்லி மீட்டர் காமிரா என்பது புகைப்படக் கருவிகளில் நேர்த்தியானதும் நுண்மையானது மாகும். இந்தக் கருவியைக் கண்டுபிடித்த அலெக் ஸாண்டர் விக்டர் என்பவருடன் நான் சர்ச்சை புரிந்த போது "இந்திய விஞ்ஞானப் புதுமை உற்பத்தி யாளருடன் அமெரிக்க விஞ்ஞானப் புதுமை உற்பத்தி

யாளர்" என்ற தலைப்பிட்டு புகைப்படம் பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று.

சாதாரணமாக மனிதர்கள் விளம்பரப் புகழ்ச்சிகளில் பெருமையடையத்தான் செய்கிறார்கள். ஆயினும் இங்கே அமெரிக்காவில் ஒருவனுடைய பெயர் பத்திரிகைகளில் அடிபடுவது மிகவும் சங்கடத்தில் கொண்டுபோய்விடுகிறது. பத்திரிகைகளில் ஒருவர் பெயர், அதுவும் என்னைப்போல் இந்தியன் அல்லது வெளிநாட்டான் ஒருவன் பெயர், அடிபட்டால் அமெரிக்க ஆடவரும் பெண்டிரும் உடனே விருந்துபசாரங்கள் நடத்தி உபந்யாசம் கேட்கத் தயாராகி விடுகிறார்கள்,

தேவன் போர்ட் என்னும் இடத்தில் நான் இயல்பான உடையுடன் தெருக்களில் நடமாடியதன் காரணமாக எனக்குச் சிறு சங்கடம் ஒன்று விளைந்தது.

மூலகச்சமும், சொக்காயும், மேல் துண்டும் அணிந்திருந்த என்னைக் கண்ட அமெரிக்கப் பெண்மணிகள் சிலர், அருவறுக்கத்தக்க ஆடைகளில் ஒரு அன்னிய மனிதன் தெருக்களில் திரிந்து தங்கள் அழகுணர்ச்சியைப் புண்படுத்துவதாக போலீஸாரிடம் முறையிட்டுக் கொண்டார்கள்.

போலீஸார் என்னைக் கைது செய்துகொண்டு போய்விட்டனர். காரணத்தை உணர்ந்த நான் புன்முறுவலுடன் போலீஸாருடன் சென்றேன். பிறகு போலீஸார் உண்மையை உணர்ந்ததும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு என்னை விடுவித்தனர், இந்தச் சம்பவம் அதே நகரத்தில் நான் ஆற்றிய சொற்பெருக்கொன்றின் பொருளாக அமைந்தது. 16 மில்லி மீட்டர் காமிராவைக் கண்டுபிடித்த அமெரிக்கரான அலெக்ஸாண்டர் விக்டர் என்பவருடன் நான் சந்தித்து அளவளாவியிருந்த காட்சியைப் படம் பிடித்துப் பிரசுரித்த "டெய்லி டைம்ஸ்" என்ற பிரபல

ஆங்கில தினசரிப் பத்திரிகை தேவன் போர்ட் போலீஸாரின் தவறையும் அமெரிக்கப் பெண்களின் அறியாமையையும் குறிப்பிட்டுப் பின்வருமாறு எழுதிற்று.

"மேலேயுள்ள படத்தில் அலெக்ஸாண்டர் விக்டர் என்ற அமெரிக்க விஞ்ஞானியையும் திருவாளர் ஜி. டி. நாயுடு அவர்களையும் காணலாம். அலெக்ஸாண்டர் விக்டர் 16 மில்லி மீட்டர் காமிராவைக் கண்டுபிடித்தவர். நாயுடு அவர்கள் மின்சாரத்தினுல் இயங்கும் சவரக் கத்தியைக் கண்டுபிடித்தவர். நாயுடு தானே தயார் செய்த சவரக்கத்தி வேலை செய்யும் விதத்தை அலெக்ஸாண்டர் விக்டருக்கு விளக்கிக் காட்டியதுடன் ஒரு கததியைப் பரிசாகவும் அளித்திருக்கிருர். இந்தக் கத்தியின் பிடியில் மின்சாரப் பெட்டி (பாட்டரி) மிகத் திறமையுடன் பொதிந்து வைக்கப்பட்டிருக்கிறது. முகத்தில் கத்தி வைத்து அதை நகர்த்த ஆரம்பித்தவுடன் கைப்பிடியில் இருக்கும் பாட்டரி வேலை செய்து வேண்டிய மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ளுகிறது. உடனே அதில் இருக்கும் மோட்டார் வேலைசெய்ய ஆரம்பிக்கிறது. அதன் வேகத்தால் கத்தி சவரம் செய்பத் தயாராகிவிடுகிறது. இவ்வளவு ஏற்பாட்டையும் மிக மிக நுண்ணிய முறையில் ஒரு சவரக் கத்தியில் இணைத்திருக்கும் சாதனை வியக்கத்தக்கது.

"தேவன் போர்ட்டுக்கு வந்திருக்கும் நாயுடு கோயம்புத்தூரில் மிகப் பெரிய கைத்தொழில் கல்விச் சாலை ஒன்றின் தலைவர். இவர் தேவன் போர்ட் நகரத்தில் உடைகளைப்பற்றி அரியசொற்பெருக்கு ஒன்றை நிகழ்த்தியிருக்கிருர். ஒரு வாரம் தொடர்ந்து தன்னைப் போல் வேஷ்டி கட்டிக்கொண்டு பார்த்தால் இறுகிய வேறு உடைகளை அமெரிக்கர் விரும்பமாட்டார்களென்றும் அவர் குறிப்பிட்டார். இந்திய நாகரீகத்தில் ஆடைகளைப் பற்றிய அவர் பேச்சை தேவன் போர்ட் போலீஸார் கேட்டு மிகுந்த பயன் அடைந்



திருப்பர் என்று நம்புகிறேம். ஏனெனில் அவருடைய ஆடையை வெறுத்துச்சில பெண்கள் செய்து கொண்ட முறையீட்டைக் கேட்டு அவரைப் போலீஸார் கைது செய்தார்கள். நாயுடு அவர்களின் பேச்சு போலீஸாருக்கு நல்ல 'அறவுரை' யாக இருக்கு மன்றே? 100 டிகிரிக்கு மேற்பட்ட சூடு மிகுந்த இடங்களில் இறுக்கிய கால் சட்டைகளும் மேலங்கிகளும் அணிந்திருப்போர் அநேகமாக ஆடைகளுக்கிடையில் சிறைபட்டுக் கிடப்பதாக அவர் எடுத்துக் காட்டுகிருர்"

1940-ம் ஆண்டு ஜூலை 26-ந் தேதி இதழில் டைம்ஸ் பத்திரிகை எழுதிய குறிப்புதான் மேலே கொடுத்திருப்பது.

அதே ஆண்டில் ஆகஸ்டு இருபதாம் தேதியன்று சால்ட்லேக் என்ற நகரத்திலிருந்து வெளியாகும் "தி டெசர்ட் நியூஸ்" என்ற பத்திரிகையில் என்னைப் பற்றி குறிப்பொன்று வெளியாயிற்று.

"இந்திய மோட்டார் மன்னன் அமெரிக்க அனுபவத்தைச் சேகரிக்கிருர்" என்ற தலைப்பில் வெளியான அந்தக் கட்டுரையின் சாரம் பின்வருமாறு :-

"இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய தேசங்களில் சுமார் ஒரு ஆண்டுக்கு மேலாகச் சுற்றுப்பிரயாணம் புரிந்து தாய்நாடு திரும்பும் வழியில், கோயம்புத்தூர் மோட்டார்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மோட்டார் மன்னன் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் இன்று சால்ட்லேக் நகரத்தின் விருந்தினராகத் தங்கியிருக்கிருர். போக்குவரத்துத் துறையில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அவர் சாதித்துள்ளவை பாராட்டுக்கும் பின்பற்றுதலுக்கும் உரியன. நாற்பத்தாறு ஆண்டுகள் நிரம்பிய திருவாளர் நாயுடு, ஒற்றைப் பஸ்ஸுடன் தன்னுடைய ஸ்தாபனத்தை ஆரம்பித்தவர்.

"இப்பொழுது அவருடைய நிர்வாகத்தின் கீழ் 280 பஸ்கள் இந்தியாவில் ஓடுகின்றன. இத்தனை பஸ்ஸுகளையும் ஓட்டும் ஒன்பது கம்பெனிகள் இவர் ஒருவருடைய தலைமையில் இயங்குகின்றன. இவை தவிர ஒரு யந்திரத் தொழிற்சாலையும், மின்சாரத் தொழிற்சாலை ஒன்றும், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமும் இவர் நடத்தி வருகிறார். கம்பெனிகளில் வேலை செய்யும் யாரையும் நிர்வாகக் குழுவினரின் அனுமதியின்றி வேலையிலிருந்து நீக்க இவருக்கே அதிகாரமில்லாத ஜனநாயக ஏற்பாடுகள் உண்டு. ஆயினும் மோட்டார் வண்டியின் சக்கரங்கள் தவிர வேறு எந்த பாகமாவது வேறு எந்த பொருளின் மீது மோதினாலும் அந்த வண்டியின் சாரதியை உடனே வேலையிலிருந்து நீக்கும் கண்டிப்பான அதிகாரம் இவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இவருடைய ஸ்தாபனத்தில் இருக்கும் மோட்டார் வண்டிகளினால் விபத்துகள் என்பதே இல்லாத நிலை ஏற்பட்டிருப்பது மெச்சத்தக்கது. பத்து லக்ஷம் மைல் ஓடும் வரையில்கூட ஒரு வண்டி எதிரே எங்கும் இடித்துக்கொள்வதில்லையென்று தெரிகிறது. ஜன நடமாட்டமும் வளைவுகளும் நிறைந்த இந்திய ரோட்டுகளில் இது மிகப்பெரும் வெற்றிதான்.

"நாயுடு தானே முயன்று படித்துக்கொண்ட ஒரு மேதை. அமெரிக்காவில் அவர் பலப்பல இடங்களுக்கும் சென்று அனுபவ ஞானம் படைத்திருக்கிறார். கண்காக்ஷிகள், வர்த்தக சாலைகள் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டும் படங்கள் எடுத்துக்கொண்டும் சொற்பெருக்குகள் ஆற்றியும் புள்ளி விபரங்கள் திரட்டியும் நூல்கள் பிரசுரங்கள் சேகரித்தும் அவர் திரும்புகிறார். இவையெல்லாம் இந்தியாவிலுள்ள அவருடைய கல்விச்சாலைகளின் உபயோகத்துக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. தன்

முயற்சியினாலேயே! அவர் ஈட்டும் பொருளையெல்லாம் கல்வித் துறைக்கே ஈடுபடுத்தும் கலைஞர் அவர்.

"நாயுடு ஒரு ஹிந்து. சைவ முறை உணவு கொள்ளுகிறார். அமெரிக்க ஏழை ஒருவனுடைய அன்றாட இன்றியமையாத் தேவைகளைக்கூட அவர் வீண் ஆடம்பரமென்று கருதுகிறார். தனக்கு ஒரு நாளைக்கு ஒரு டாலர் மட்டும் இருந்தால் போதுமென்பது அவர் வாழ்க்கைச் செலவுக் கணக்கு. தனக்கென்று எப்போதும் அவர் உபயோகிக்கும் சாமான்களும் ஆடைகளும் மிகமிகச் சொற்பமே யானாலும் அவர் ஊருக்கு எடுத்துச்செல்லும் சாமான்களின் எடை ஏழாயிரம் பவுண்டு இருக்கிறது. அத்தனையும் புத்தகங்கள், சினிமாப் படங்கள், புகைப்படக் கருவிகள் ஆகியவையேயாகும். 1932-ல் அவர் ஹிட்லருடனும் அவருடைய தோழர்களுடனும் சல்லாபித்திருந்தபோது எடுத்த படம் ஒன்றில் ஹிட்லரின் கையெழுத்தையும் வாங்கி வைத்திருக்கிறார். இது ஒரு அபூர்வமான பொருள். உலகமெங்கிலும் அவர் சென்று பழகிய நகரங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை டைப் அடித்த பெருங் கோவை ஒன்றும் அவரிடம் உள்ளது. அது மட்டும் சுமார் நூறு பக்கங்களுக்கு மேலிருக்கும். இங்கிருந்து சான்பிரான்சிஸ்கோ வழியாக அவர் இந்தியாவுக்குப் புறப்படுகிறார்.

"1940-ல் நான் அங்கு தங்கியிருந்தபோது அமெரிக்கர் ஒருவர் இந்தியாவில் ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"திருவாளர் நாயுடு அவர்கள் கண்டுபிடித்திருக்கும் அரிய விஞ்ஞானப் பொருள்களை இங்கே நாங்கள் கண்டு வியந்துபோனோம். ஆனால் அவற்றைப் பெருவாரியாக இங்கே உற்பத்தி செய்து விநியோகிக்கும் உரிமையை அவர் எங்களுக்கு விற்க முடியாதென்று

கண்டிப்பாகக் கூறிவிட்டார். அமெரிக்கராகிய எங்களுக்கு அந்தப் பொருள்களின் அருமையும் பயனும் நன்கு தெரியும். உண்மையிலேயே அந்தப் பொருள்களுக்கு ஏற்ற சந்தை அமெரிக்காதான். எங்களுக்கு அவற்றை விற்ருல் அது எவ்வளவோ பயனுடையதாயிருக்கும். ஆனால் என்ன செய்வது? அவர்தான் எங்கள் விருப்பத்திறகு இணங்குவதில்லையே!

"நாயுடு அவர்கள் இங்கே, எங்கள் நாட்டில் அறிந்துகொண்ட பல அறிய விஞ்ஞான நுணுக்கங்களுக்காக மிகவும் மகிழ்ந்து பகிரங்கமாக அவற்றைப் பாராட்டி வருகிருரென்றும், இவ்வளவு பெரிய மேதையை சாதாரணமாகக் காணமுடிவதில்லையென்றும் என் நண்பர் ஒருவர் புகழ்ந்துகொண்டேயிருக்கிருர். இதைவிட நாயுடு அவர்களின் அபாரமான திறமையினுல் இருபதினுயிரம் டாலர்கள் வீணுகிக் கொண்டிருந்த ஒரு சிறு நுணுக்கம் எங்களுக்குப் புரிந்துவிட்டது. அவருடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு இந்தப்பெரும் நஷ்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டோம். ஒரு யந்திரத்தின் இயக்கம் சீர்படாமல் தொல்லை கொடுத்துக்கொண்டிருந்த போது, என்னசெய்வதென்று அறியாமல் அவதிப்பட்டோம். நாயுடு அவர்கள் கூறிய ஆலோசனையின்படி அந்த யந்திரத்தைத் திருத்தி அமைத்ததும் எங்களுக்கு வெற்றி கிட்டியது. தக்க சமயத்தில் அவருடைய அந்தத் திறமையான ஆலோசனை எங்களுக்குக் கிடைக்காமல் போயிருந்தால் 20 ஆயிரம் டாலர்கள் எங்களுக்கு விரயமாயிருந்திருக்கும்.

என்னுடைய பேடண்ட் தயாரிப்பான சவர ரேசர் (பிளேட்) கத்தி இவற்றை தங்களுடைய தொழிற்சாலையில் தயாரித்து விநியோகிக்க உதவி செய்வதனுல் மாதம் ஒன்றுக்கு மூவாயிரம் டாலர் ஊதியம் தருவதாக அமெரிக்க தொழிற்சாலை ஒன்று

என்னைக் கேட்டுக் கொண்டது. அவர்களது மதிப்புக்கு நான் மகிழ்ச்சியும் நன்றியும் பாராட்டிய போதிலும் அமெரிக்கா வந்திருப்பது உத்தியோகம் பார்த்து சம்பாதிப்பதற்காக அல்லவென்றும், அமெரிக்க அனுபவங்களைக் கற்றுணர்ந்து இந்தியா திரும்புவதே என் நோக்கமென்றும் கூறினேன்.

இவற்றையெல்லாம் இங்கே குறிப்பிடுவதன் கருத்து, அமெரிக்க நாட்டு மக்களின் தொழில் ஊக்கத்தையும் பிறர்பால் அவர்கள் காட்டும் வஞ்சனையற்ற மதிப்பையும் விளக்கவேயன்றி வேறல்ல.

அமெரிக்காவில் நான் தங்கியிருந்தபோது அங்கு என்னுடைய அனுபவங்களைப் பற்றியும் வர்த்தக சம்பந்தமாகவும் அடிக்கடி இந்தியாவில் உள்ள நண்பர்களுக்கு விரிவான கடிதங்கள் எழுதியிருக்கிறேன். எனவே சுருக்கெழுத்துக்காரர் ஒருவரை நியமித்துக் கொள்ளவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. வாரம் ஒன்றுக்கு முப்பது டாலர் வீதம் சம்பளம் கொடுத்து நான் நியமித்துக்கொண்ட சுருக்கெழுத்துக்காரர் அவ்வப்போது நான் கூறும் கடித வாசகங்களைக் குறித்துக் கொண்டு டைப் செய்து வந்தார்.

பல அமெரிக்க ஸ்தாபனங்களில் மின்சாரம், யந்திரங்கள் சம்பந்தமான பல சாமான்களுக்கு 'ஆர்டர்' கொடுத்து ஏராளமானவற்றைச் சேகரம் செய்வதும் முக்கியமான வேலைகளில் ஒன்ருக இருந்தது. இதன் காரணமாக கடிதப் போக்கு வரத்துக்கள் ஒவ்வொரு நாளும் மலையாகக்குவிய ஆரம்பித்துவிட்டன. சுருக்கெழுத்துக்காரர் செய்த பிழையொன்றினுல் ஒரு சமயம் 180 டாலர்கள் எனக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.

சுருக்கெழுத்து குமாஸ்தாவாக வந்து வாய்த்தவள் அமெரிக்க இளநங்கை யொருத்தி. இந்தியப் பெயர்களை அவள் டைப்செய்யும் போது வேடிக்கை

யான பல தவறுகள் ஏற்பட்டுவிடுவதுண்டு. ஒரு சமயம் அவள் டைப் அடித்த மேல் விலாசம் ஒன்று "ரிடையர்ட் கம்யூனிஸ்ட், எக்ஸ்டென்ஷன், கோயம் புத்தூர்" என்று இருந்தது. எப்படி விலாசம்! நியூ யார்க் வர்த்தகர் ஒருவரிடமிருந்து என் பெயருக்கு வந்த கடிதத்திலும் மேல் விலாசம் வேடிக்கையாக டைப் அடிக்கப்பட்டிருந்தது, "யூனைடெட் மோட்டார்ஸ், கோயம்புத்தூர், ஜி. பி. நாயுடு, ரூம் 855. சிகாகோ".

நான் மாமிச பக்ஷிணி அல்ல, நல்ல சைவ உணவுக்காரன், ஆயினும் முட்டைகள் சாப்பிடுவதில் எனக்கு ஆக்ஷேபனையொன்றும் கிடையாது. முட்டைக்கும் பாலுக்கும் அதிக பேதமில்லை யென்பதே என்னுடைய கருத்து. எனினும் அமெரிக்காவிலிருக்கும்போது நான் முட்டைகூட சாப்பிட விரும்பியதில்லை காரணம் அங்கே சமையல்காரர்கள் மாமிச உணவு சமைத்துப் பரிமாறும் கரண்டிகளிலேயே முட்டையையும் பக்குவம் செய்ததைக் கண்டதனுல் நான் முட்டையை சாப்பிட அருவறுப்படைந்தேன்.

அமெரிக்காவில் உணவு விலை யானைவிலை குதிரை விலையாகக்கூட இருந்தது, ஒரு கோப்பை தக்காளி ரசத்துக்குக் கொடுக்கும் விலை, இந்தியாவில் இரண்டு வேளை ராஜ போஜனம் சாப்பிடலாம், என்பதில் ஐயமில்லை.

எதிர்பாராத பல அசௌகரியங்களுக்கும் நான் ஆளாக நேர்ந்ததுண்டு. வயிற்றுவலி என்னை அங்கேயும் தொடர்ந்து தொல்லைக்கு ஆளாக்கியது. அது மட்டுமல்ல, கையில் போதிய பணம் இல்லாமல் கூட நான் அவதிப்படவும் நேர்ந்தது. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்ததனுல் இந்தியாவிலிருந்து குறிப்பிட்ட அளவுக்கு மேல் அமெரிக்காவுக்குப் பணம் அனுப்புவது தடைப்பட்டிருந்ததே காரணமாகும்.

செயிண்ட் லூயில் நான் தங்கியிருந்தபோது கோயம்புத்தூரிலிருந்து என்பேருக்குப் பத்தாயிரம் ரூபாய் வரவழைக்க ஏற்பாடு செய்தேன். கோவையில் என் காரியாலயத்திலிருந்து, ரூபாய் பத்தாயிரமும் இம்பீரியல் பாங்கு மூலம் அனுப்ப முயற்சித்ததாகவும் ஆனால் அவ்வளவு பெரிய தொகையை அனுப்பிவைக்க பாங்கு மறுத்துவிட்டதாகவும் தந்தி வந்தது. இந்தத் தந்தியைப் பார்த்ததும் எனக்குத் திகில் ஏற்பட்டுவிட்டது. பணத்துக்கு என்ன வழியென்று தெரியவில்லை. பல வாரங்கள் வரையிலும் எல்லாச் செலவுகளையும் சுருக்கிக்கொண்டு எங்கும் வெளியில் வியாபார நிமித்தம் செல்லாமல் இருக்க வேண்டியதாகிவிட்டது. அதுவரையிலும் பத்தாயிரம் டாலர் வரையிலுமே நான் பல கம்பெனிகளில் சாமான்களுக்கு ஆர்டர் கொடுத்திருந்தேன்.

ஆயினும் இந்த நிலையை உணர்ந்த அமெரிக்க வியாபாரிகள் சிலர் நான் அமெரிக்காவிலிருந்து இந்தியா சென்ற பிறகு தொகை அனுப்பிவைத்தால் போதுமானதென்று கூறி, வலிய எனக்குத் தேவையானவற்றைக் கொடுத்து உதவி செய்தார்கள். ஆயினும் எனக்கு இந்தியாவிலிருந்து தேவையான பணத்தை வரவழைக்க முயற்சித்து, நியூயார்க் நகரத்திலிருந்த இந்திய வர்த்தக கமிஷனரான ஸ்ரீமான் ஹெச். எஸ். மல்லிக் என்ற அதிகாரியை அணுகி உதவி கேட்டபோது திரும்பி இந்தியா செல்வதற்கான தொகையைமட்டும் வேண்டுமானால் இந்தியாவிலிருந்து தருவித்துக் கொடுக்க முடியுமென்றும் அதற்குமேல் தன்னால் ஒன்றும் செய்ய இயலாதென்றும் கூறிவிட்டார். எப்படியோ பணத்துக்கு ஒருவாறு வழி பிறந்தது.

மிக மிகக் குறைந்த உடைகள், அன்றாட உபயோகத்துக்கான சாமான்கள் மட்டுமே கொண்டிருந்தாலும், அமெரிக்காவிலிருந்து புறப்படும்போது

என்னிடம் சேர்ந்துவிட்ட பொருள்கள் மலைபோல் குவிந்துவிட்டன.

ஊருக்குத் திரும்பி வருவதற்குத் தேவையான தொகைக்கு மட்டும் ஏற்பாடு செய்துகொண்டு கடல் மார்க்கமாகப் புறப்பட்டுவிட்ட நான் தூரக் கிழக்குப் பிரதேசங்களின் வழியாக இந்தியாவின் மேலைக் கடற் கரையில் கொச்சி துறைமுகத்தில் வந்திறங்கினேன். ஒரு ஆண்டுக்கு மேலாக அயல் நாடுகளுக்குச் சென்றிருந்து நான் இந்தியா திரும்பிவருவதற்கு முன்பாக, 'நான் ஒரு நாஜி அனுதாபி' என்ற 'கீர்த்தி'யும் வதந்தி உருவத்தில் கொச்சி துறைமுகம் வந்து சேர்ந்துவிட்டது.

எனவே, என்னை கப்பலிலிருந்து வரவேற்க, சுங்க அதிகாரிகளும் துப்பறி நிபுணர்களும் தயாராய் காத்திருந்ததில் வியப்பில்லை. என்னுடைய பெட்டி படுக்கைகளையும், பிலிம் சுருள்கள், புத்தகங்கள் பைல்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் சோதனை போட்டார்கள். என்னிடமிருந்த பெரிய கோவை ஒன்றில் நான் சென்று சுற்றிப் பார்த்த இடங்களைப் பற்றிய சரித்திர, பூகோள, ஜனன மரண, சமுதாயப் புள்ளி விபரங்கள் விபரமாக டைப் அடித்த ஏடுகள் நிறைய இருந்தன. ஜெர்மனியைப் பற்றிய உண்மைகள் அவற்றில் எங்கேனும் ஒளிந்து கொண்டிருக்கக் கூடுமோ என்று அதிகாரிகள் ஆவலுடன் தேடிப் பார்த்திருப்பார்கள், நாஜிகளுடன் எனக்கு ஏதாவது ரகசிய ஒப்பந்தங்கள் இருக்கக்கூடுமென்றும் அவர்கள் சந்தேகப்பட்டிருக்கலாம். எனவே என் வசமிருந்த முப்பத்தேழாயிரம் கடிதங்களையும் ஒன்று கூட விடாமல் அதிகாரிகள் படித்துப் பார்க்க வேண்டிய தொல்லைக்கு ஆளானார்கள்.

இப்படி ஐந்து முழு நாட்கள் கண்ணில் திரி போட்டுக்கொண்டு. கொச்சி துறைமுகத்தில் அதிகாரிகள் என்னைத் தங்கள் பரிசோதனைக்கு உள்ளாக்

கிய பிறகு, பட்டதெல்லாம் வீண் சிரமம் என்று அறிந்து, என்னை விட்டுவிட்டார்கள். என்னைத் தொல்லைக்காளாக்குவதில் மிகவும் சிரத்தையுள்ள போலீஸ்காரர்கள் இந்தச் சோதனையில் தோல்வியடைந்ததுடன், "நாஜி அனுதாபி நாயுடு" என்று வந்த "வதந்தி" மற்ற வதந்திகளைப்போலவே தோன்றிய சுவடு தெரியாமல் மறைந்தது.

மூன்றுவது பிரயாணத்தில் ஐரோப்பிய நாடுகளை அதிகம் சுற்றிப்பார்க்க எனக்கு வசதியில்லை. நான் லண்டன் போய்ச்சேர்ந்த புதிதில் சில நாட்களுக்குள் உலக இரண்டாவது மகா யுத்தம் தொடங்கியதே காரணம் என்று முன்னமேயே கூறியிருக்கிறேன்.

ஜெர்மனி நாட்டிற்குச்சென்று விரிவாகச் சுற்றிப் பார்க்கவேண்டும் என்ற எனது ஆவல் நிறைவேறக் கூடாததாயிற்று. எனவே, எனது திசைக்காட்டும் கருவி புத்துலகம் நோக்கி என்னை அனுப்பியதில் வியப்பில்லை. இதுவும் நல்லதாய்ப் போயிற்று, ஏனென்றால், செல்வச் செழிப்பாலும், தொழில் ஊக்கத்தாலும், உலகம் பூராவும் தங்கள் டாலர் ஆதிக்கத்தைச் செலுத்தும் அமெரிக்க நாடுகளிலே விந்தையான விஞ்ஞான அனுபவத்துடன் வாழ்க்கையிலேயே முதன் முறையாக எனது 47-வது வயதில் பள்ளி மாணவனாகச் சேர்ந்து படிக்கும் அரிய வாய்ப்பும் கிடைத்தனவன்றோ? எத்தனை தடவைகள் சுற்றிப் பார்த்தும், தணியாத பிரயாண ஆவலோடு திரும்பினேன். கண்டு, கேட்டு, அறிந்த விஞ்ஞானப் புதுமைகளையெல்லாம், நமது நாட்டில் வந்து பயன் படுத்துவதன் மூலம் நமது நாட்டு மாணவர்களுக்கும் தொழில் துறைக்கும் சிறந்த தொண்டுபுரிய வேண்டும் என்ற ஆவலைச் சுமந்தவாறு எனது 3-வது பிரயாணம் முற்றுப்பெற்றது.

# 4-வது பிரயாணம்

பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் மறுபடியும் ஐரோப்பிய பிரயாணம் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. காரணம் மிகத்தெளிவானது. 3-வது பிரயாணத்தை முடித்துத் திரும்பிய பின்னர், பல புதிய தொழில்களைத் தொடங்குவதற்குத் திட்டமிட்டுச் செய்த முயற்சிகள் யாவும் திசைமாறிப் போயின. உலகிலேயே மிகச் சிறந்த போக்குவரத்து சாதனங்களில் ஒன்று என்று, நிபுணர்கள் கருதிப் பாராட்டிய எனது முதன்மையான தொழிலிலிருந்தும் நான் ஓய்வு பெறும்படியான நிலைமை எனக்கு ஏற்பட்டுவிட்டது. நேர்மையான வழிகளில் சமூகத்திற்குத் தொண்டு செய்ய விரும்பும் என்னைப்போன்ற ஒருவனின் சேவை தேவையில்லை யென்றே சமூகம் கருதுவதாக நான் உணரும் நிர்ப்பந்த சூழ்நிலைக்காளானேன். வேறு பல தொழில்களை இங்கே தொடங்கி, நான் வெற்றிபெற முடியாமற்போன காரணங்களைப்பற்றி விரிவாக ஆராய இடமில்லை. யந்திர விஞ்ஞானக் கல்வித்துறைகளிலே மாணவர்களின் அருமையான காலத்தையும் பெற்றோர்களின் செல்வத்தையும் சிக்கனப்படுத்த வேண்டும் என்ற ஆவலில் நான் மேற்கொண்ட முயற்சிகள் நற்பயன் தராமல் போனதே எனக்கு மிகவும் வேதனையளித்தது.

வாழ்க்கையில் முதல் 25 ஆண்டுகள், கல்வி கற்று, அடுத்த 25 ஆண்டுகளில் உழைத்துப் பொருளீட்டிய பின்னர், சமூக சேவைக்கே வாழ்வெல்லாம் உழைக்க வேண்டும் என்ற கோட்பாடு என்னுடையது. முதல் இரண்டு பகுதிகள் வெற்றிகரமாக முடிந்துவிட்ட போதிலும் இறுதி லட்சியத்தை நோக்கி முன்னேறுவதில் தோல்வியே எனக்கேற்

பட்டதென்று சொல்லவேண்டும். இனிமேல் ஒரு தொழிலும் செய்து பயனில்லை என்று ஒதுங்கிவிட்ட என் உள்ளத்திலே, மறுமுறையும் ஐரோப்பா செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது கொஞ்சம் வியப்பானதுதான்.

இந்த பிரயாணத்திற்குக் குறிப்பிட்ட நோக்கம் உண்டா அல்லது வெறும் உல்லாசப் பிரயாணம் தானு, என்று திட்டமாகச் சொல்லமுடியாது. இரண்டுமாக இருக்கலாம். ஆனுல் குறிப்பிட்ட நோக்கம் உண்டு என்று வைத்துக்கொள்வதாயிருந் தால், ஒரு நோக்கம்தான் என்று கருதவேண்டிய தில்லை. பல விஷயங்களை மனதில் கருதியே இந்த பிரயாணத்தை மேற்கொண்டேன்.

முதலில், போருக்கு முன்பிருந்த மேலை நாடு களின் தொழில் வளமும் அந்த மக்களின் ஊக்கமும் போருக்குப் பிறகு எவ்விதமான மாறுதலையடைந் திருக்கிறது, என்பதை நேரில்போய்ப் பரர்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது எனது நோக்கங் களில் ஒன்று. மேலும் 1936-ம் ஆண்டு முதற் கொண்டே இந்தியாவில் இல்லாததும், இருப்ப வற்றில்கூடப் புதுமையான விஞ்ஞான முன்னேற்றங் கள் கொண்டதுமான புதிய தொழிற்சாலைகள் சில வற்றை நம்நாட்டில் தொடங்க வேண்டுமென்ற ஆசையில், அதற்கான பல ஏற்பாடுகள் பற்றி ஐரோப்பிய தேசங்களிலுள்ள பல ஸ்தாபனங்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்திவந்தேன். இடையே பல முயறசிகளை நான் நிறுத்திவிடும்படியான காரணங்கள் ஏற்பட்டபோதிலும் ஒரு சிலவற்றை மட்டும் முற்றிலும் கைவிட்டுவிடாமல் வைத்திருந் தேன். நேரில் ஐரோப்பா சென்று சம்பந்தப்பட்ட வர்களை சந்தித்துப் பேசினுல் அவற்றை மீண்டும் உருவாக்கலாமென்பதும் எனது பிரயாண நோக்கங் களில் ஒன்று.

சிறிது காலம் நிம்மதியான ஓய்வை அனுபவிக்க வேண்டுமென்ற அடிப்படையான நோக்கமும் உண்டு. இங்கே நான் அல்லும் பகலும் உண்ணும் போதும், உறங்கும்போதும் வேறு வேலைகளில் உடல் ஈடுபட்டிருந்தாலும், மனம் இடைவிடாமல் பொருந்திக்கிடந்ததான தொழில் ஒன்று உண்டு. அந்தத் தொழிலை ஓரளவேனும் அறவே மறந்திருப்பதைப் போல ஓய்வு என்ன இருக்கிறது?

நான் இந்தியாவைவிட்டுப் புறப்பட்டுப் போன திலேயிருந்து திரும்பி வந்துசேருகிற வரைக்கும் ஏதோ சிலநாட்கள் தவிர மற்ற காலங்களில் நான் அடைந்த மன நிம்மதியையும் இன்பத்தையும் போல் என் ஆயுளில் எப்போதும் அடைந்ததேயில்லை.

1950 மே மாதம் ஏழாம்நாள் பாகநேரி ஸ்வாமி நாதன் டாக்டர் ராமசாமி அய்யர் ஆகிய நண்பர்களுடன் நான் சென்னையிலிருந்து விடைபெற்றுப் புறப்பட்ட பிறகு ஒருநாளேனும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியோ வேலையோ இல்லாமல் பொழுதைப் போக்கவில்லை.

நாங்கள் கவனித்த வேலைகளைப்பற்றி யெல்லாம் முழுவதும் விடாமல் குறிப்பதென்றால் தனி நூலாகவே ஆகிவிடக்கூடும்.

நாங்கள் லண்டனில் சென்றிறங்கிய பிறகு ஓரிரு வாரங்கள் வரையிலும் சூழ்நிலையும் காலநிலையும் எங்களுக்குக் கொஞ்சமும் ஒத்துவரவில்லை. எனவே, மன உற்சாகம் ஏற்படவேயில்லை. ஆயினும், இங்கு நடைபெற்ற பிரிட்டிஷ் தொழிற் கண் காட்சி எங்கள் அயர்வைப் போக்கி, பலவிதங்களிலும் எங்கள் நேரத்தை பொன்னுக்கியது. லண்டன் மா நகரிலும் பர்மிங்ஹாமிலும் இணைத்திருந்த இந்தப் பெரிய காட்சிசாலையில் ஒரு சிறு அம்சத்தையும் கூர்ந்து கவனிக்க நாங்கள் தவறவில்லை. மிக எளிய பொருளிலிருந்து விலைமதிக்க வொண்ணுததான அருமையான

சாமான்கள் ஒவ்வொன்றையும் நாங்கள் நுணுகித் தெரிந்துகொண்டோம். கடந்த காலத்தில் மகாயுத் தங்களின் காரணமாக இடைவிடாது, உழைக்க நேரிட்ட மனிதன் தானடைந்த எல்லையற்ற அனுப வத்தைக்கொண்டு இவற்றையெல்லாம் இயற்றியிருக் கிறன். யுத்தத்திலே நேரிடையாக ஈடுபடாத நமது நாட்டினர் உலக யுத்தத்தினல் பாதிக்கப்பட்டு, தங்கள் தொழில் வளம் கருகிப்போயிருக்க, இந்த நாட்டினர் யுத்தத்தைத் தங்கள் வளர்ச்சிக்குறிய சாதனமாக்கிப் பெரும் தொழில் வல்லமை படைத் திருக்கும் விந்தையை எப்படி வர்ணிக்க முடியும்? உண்மையிலேயே இந்தக் காட்சி இன்றைய பேரதி சயம். எதிர்காலத்திலும் பெரும் வியப்பாகவே இருக்கும்.

நாங்கள் இங்கே வரும் முன்பு உலகப்போரினல் இங்கிலாந்து சீரழிந்து போயிருக்குமென்றும், இந்தக் காட்சிசாலையிலேயும் அவர்களது சீர்குலைந்து போன தொழிலின் சின்னங்களே நிறைந்திருக்கு மென்றும் எண்ணியிருந்தோம். ஆனல் நாங்கள் அங்கு கண் டது முற்றிலும் வேருகும்.

பன்னிரண்டாயிரம் ஏக்கர் பரப்பில் ஓராண்டு முழுமையும் அரும்பாடு பட்டு உருவாக்கும் நியூயார்க் நகரத்தின் உலகப் பொருட்காட்சிகூட இதன் முன் நில்லாது என்ற உண்மையை நாங்கள் உணர்ந்தோம். இந்தக் காட்சியின் ஒரு பிரிவு லண்டனிலும் மற் ருென்று பர்மிங்காமிலும், பத்தே நாட்களில் உரு வாக்கப்பட்டு சுமார் 4000-க்கு மேற்பட்ட யந்திர வகைகளும் ஏனைய சாதனங்களும் தொகுத்து வைக் கப்பட்டு, அன்ருடம் வந்து செல்லும் மக்கட்குப் புதிய உலகத்தின் சாதனைகளை யெல்லாம் நேருக்குநேர் பார்த்து, படித்துக்கொள்வதற்கு ஒரு சர்வகலாசாலை யைப்போல் இருந்தது ஆச்சர்ய மல்லவா? கடல் கடந்து வருகின்ற அந்நிய நாட்டினர்க்கெல்லாம்

நுணுக்கமான செய்திகளைத் திறமையாக விளக்கிக் காட்டுவதற்கு அரிய ஏற்பாடுகள் காட்சிசாலை அதிகாரிகள் செய்திருந்தார்கள். இங்கிருக்கும் அற்புதங்களை யெல்லாம் நம்முடைய நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்ப்பதில் எங்கள் சக்தியின்மையை எண்ணித்தான் வருந்தவேண்டியிருந்தது. போர்க்கருவிகளையும் விமானங்களையும் செய்து குவிப்பதில் ஈடுபட்டிருந்த இங்கிலாந்து தேசம், போருக்குப் பின்னர் என்ன செய்திருக்கிறது என்பதை இந்தக் கண்காட்சி பளிங்குபோல் காட்டியது. எனினும் இந்தக் காட்சிக்கு வந்திருக்கும் சாதனைகளைவிட, இடம் பெருத அரும் தொழில்களே மிகவும் அதிகம் எனலாம், அவையனைத்தையும் ஒன்று திரட்டிக்காட்ட இடம் போதவில்லைபோலும்! வந்திருந்தவற்றை மட்டுமே ஒன்றுவிடாமல் சுற்றிப்பார்த்துத் தெரிந்துகொள்ள முயன்ருலுங்கூட வருடக் கணக்கில் காலம் ஆகிவிடும்.

இந்தப் பொருட்காட்சி சாலையல்லாது, வேறு பல கண் காட்சிகளையும் பார்வையிட்டேன். அவை பற்றிப் பின்னுல் விரிவாகக் கூறுவேன்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானுல் ஐரோப்பியர் போர்காலத்திற்கு முன்பிருந்ததைவிட சகல துறைகளிலும் ஐநூறு முதல் ஆயிரம் சதவிகிதம் வரைகூட அவர்கள் முன்னேறியிருக்கிருர்கள். உற்பத்தியை அவ்வளவு பெருக்கியிருக்கிருர்கள். இறக்குமதியை எதிர்பாராமல் வாழக்கூடிய முறையில் விவசாயத் துறை வளர்ச்சி யடைந்திருப்பதைக் கண்டேன்.

போரில் அழிந்துபோன கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டுவிட்டன. தொழிலாளிகள் முன்னிலும் அதிக நல உரிமைகள் பெற்று வாழ்கிருர்கள்.

ஏற்றுமதியில் அவர்கள் கொண்டிருக்கும் ஊக்கம் வியப்புக்குரியது. இங்கிலாந்திலுள்ள ஒருவருக்கு ஒரு கார் வேண்டுமானுல், அதற்காக ரெஜிஸ்

டர் செய்த தேதியிலிருந்து, 2 அல்லது அது முதல் 5 வருஷம் வரை காத்திருந்து பெறவேண்டும்-காரும் இங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. யுத்தத்துக்கு முன்பைவிட பல ம. ங்கு உற்பத்தி ஆகிறது. அப்படியிருந்தும் ஏற்றுமதிக்குத் தான் முதல் சலுகை காட்டுகிறார்கள்.

உலகத்திலேயே கார்கள் மயமான தேசம் என்று சொல்லக்கூடியதும் செல்வத்திலேயே மிதந்து கொண்டிருக்கக் கூடியதுமான அமெரிக்க நாட்டிலுங்கூட ஆயிரக்கணக்கான கார்களை இங்கிலாந்திலிருந்து வாங்குகின்றனர். கார்களுக்கு தகாத தேசம் என்று சொல்லக்கூடியதும் இப்போது சீன தேசத்தைவிட மோசமானதென்று சொல்லக்கூடியதுமான நம் இந்தியாவுங்கூட பெருவாரியான கார்களை இங்கிலாந்திலிருந்து வாங்கி வருகிறது. இந்தியாவிலிருந்து இங்கிலாந்து போகிற ஒருவருக்கு ஒரு வாரத்தில்—ஏன் ஒரு நாளில்கூட ஒரு கார் வாங்கிக் கொள்ளமுடியும். இந்தியாவில்கூட பணமுள்ளவர்கள் எப்போதும் எந்த இடத்திலும் கார் வாங்க முடிகிறது. இங்கிலாந்தில் பிறந்தவருக்கு, கார் அகப்படாதிருக்கும் போது, மற்ற தேசத்தவருக்கு வேண்டியதற்கு அதிகமாகவே கார்கள் கிடைக்கிறதென்றால், அதற்குக் காரணம் என்ன? தங்களது அருமையான தொழில் திறமைகளின் பலன்களை இதர தேசங்களுக்கு விற்று, தங்கள் தேசம் செல்வத்தில் தழைத்து ஓங்கவேண்டும் என்ற அவர்களின் ஆவலைவிட வேறு என்ன இருக்கமுடியும்?

மேற்கு நாடுகளில், அடுத்த ஒன்று அல்லது அநேக வருஷங்களுக்கும் கூட உற்பத்தியாவதை ஏற்றுமதி செய்வதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள் இப்படி அதிக தேவைகளைப் பதிவு செய்திருந்தாலும் மேற்கொண்டு வரும் தேவைகளையும் அவர்கள் வரவேற்கவே செய்கின்றனர்.

அடுத்து ஸ்டாக் ஹோமில் நடைபெற்ற விவசாய மகாநாட்டிற்கு இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக நண்பர் சுவாமிநாதன் சென்றபோது மாநாட்டில் என்ன நடைபெறுகிறது என்பதைக் காண வேண்டுமென்ற ஆவலில் நாங்களும் உடன் சென்றோம்.

போரின் கொடுமையிலிருந்து தப்பிப்பிழைத்து தலைதூக்கிய அந்த நாட்டின் அற்புதமான நகரம் எங்களுக்குப் பெரும வியப்பளித்தது. அங்குள்ள மக்கள் சர். ஸி. வி. ராமன் பிறந்த நாட்டிலேயிருந்து வந்திருக்கும் எங்கள்பால் காட்டிய பண்பும் பரிவும் மிகப் பெரிது. நாங்கள் முன்பின் அறியாத ஒரு புது மனிதர் தற்செயலாக எங்களைச் சந்தித்தபோது வலிந்து எங்களுக்குதவ முன்வந்தார்,

நகரத்தின்காட்சியின்பங்களையும் தொழிற்சாலைகள், கழகங்கள், நிறுவனங்கள் இவற்றில் நடைபெறும் வேலைகளையும் நாங்கள் நின்று சுவைப்பதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் தானே உடன் இருந்து அவர் புரிந்தார். உலகம் பூராவுக்கும் எஃகு ஏற்றுமதி செய்யும் பெரிய உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குச் சென்று, நாங்கள் பல உண்மைகளைத் தெரிந்துகொள்ள அவருடைய செல்வாக்கு மிகவும் பயன்பட்டது. ஃப்ராங்கல் என்னும் இந்தக் கனவான் கூட்டுறவு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஒன்றின் ஆணையாளர், சவர பிளேடுகள், ரேசர்கள், செயற்கைப்பட்டு உற்பத்தி, மோட்டார் தொழிற்சாலை, விஞ்ஞானப்பள்ளி ஆகிய இவற்றிற்கெல்லாம் சென்று அவற்றின் தலைவர்களோடு பழகி, பல விஷயங்களை அறிந்துகொண்டோம்.

லாண்டின் என்ற ஒருவர் எங்கள் வழிகாட்டியாக இருந்தார். நண்பர். ஃப்ராங்கல் எங்களுக்காக எவ்வளவு மைல்கள் சுற்றி எவ்வளவு பெட்ரோல்

செலவழித்து எங்கள் வசதிகளுக்காக மகிழ்ச்சியுடன் பொறுப்பேற்றுக்கொண்டார்!

யாதொரு பயனும் எதிர்பாராமல் முகமறியாத மனிதர்களுக்கு இவ்வளவு உபசரணை செய்வதாலே அவருக்கு என்ன மகிழ்ச்சியோ! ஆனால், இந்த உயர்ந்த பண்பு பாராட்டவும், பின்பற்றவும்பட வேண்டியதாகும். நண்பரின் உதவியை மேலும் மேலும் பெறுவது சங்கோஜ உணர்ச்சியைத் தூண்டி விட்டது. ஒருவாறு விடைபெற்று டென்மார்க்குக்கு பிரயாணமானோம்.

இருபது வருஷங்களுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்து என்னுடன் நட்புரிமைபூண்ட நண்பர் ஒருவர் 'கோபன் ஹேகன்' நகரத்தின் விமான நிலையத்திலே தம் மனைவியுடன் வரவேற்க வந்திருந்தார். இந்த நண்பரின் பெயர் "லியோகிளாஸன்வான் காஸ்". இந்த நண்பரும் ஒரு வினாடிகூட எங்களை சும்மா யிருக்க விடவில்லை. சவரத் தகடுகளையும், அவற்றை உற்பத்தி செய்யும் யந்திரங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை யொன்றையும் பார்வையிட்டோம்.

வேறெங்கும் கண்டிராத புதுமுறையில் காகிதங் களையும், துணியையும், தண்ணீரில் அச்சிடும் அச்சு இயந்திரசாலை அருமையானதாக இருந்தது. நம்முடைய நாட்டிற்கு இந்த இயந்திரங்களைப் பெறுவதற்காக வேண்டி அங்கு சில ஏற்பாடுகள் முடித்துக் கொண்டோம். "டிவோலி" என்ற பெரிய களியாட்டுக்கூட மொன்றையும் கண்டோம். இங்கும் கற்றுக்கொள்வதற்குரிய பல காட்சிகள் உண்டு. மறுநாள் காலை அச்சு, மருத்துவம், மின்சாரம், ஜவுளி ஆகிய இயந்திரக் கண்காட்சி ஒன்றும் எங்களுக்குக் கிடைத்தது.

1932-ல் என்னுடைய முதல் ஐரோப்பிய பிரயாணத்திற்கு காரணமாக இருந்த ஜெர்மன் தம்பதி

கள் இந்தத் தடவையும் ஹாம்பர்க் நகரில் என்னை எதிரேற்று ஜெர்மனிச் சுற்றுப் பிரயாணத்திற்குப் பேருதவி புரிந்தார்கள். என்னுடைய தொழில் ஆர்வமும், அறிவும் இந்தத்தடவை ஜெர்மன் விஜயத்தினுல் மிகவும் பெருகியிருக்கிறது என்ருல் அதற்கு எனது நண்பர்களான இந்தத் தம்பதிகளே காரணமாகும். போருக்கு முன்பு இருந்ததைவிட நண்பரின் நிலை இப்பொழுது மாறுபட்டிருந்தும் பல நகரங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அழைத்துச் சென்று காட்டினுர்.

ஜெர்மன் யாத்திரைக்கு ஐம்பது பவுன் மட்டுமே நமது அரசாங்கத்தார் அனுமதியளித்திருந்த காரணத்தால் எனக்காக சுமை யேற்றுக்கொண்டு இத்தகைய நண்பர்கள் முன்வராவிடில் பிரயாணத்திட்டம் இவ்வளவு விரிவாக நிறைவேறியிருக்க முடியாது.

நெடுநாள் தொடர்புடைய எனது நண்பர்கள் பலரை விடுமுறை காரணமாக நான் சந்திக்கவும் கூடவில்லை. எப்படியும் எதிர்காலத்திலே, இவர்களோடு நல்ல வர்த்தகத் தொடர்பு நாங்கள் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு விடைபெற்ருேம், ஹனேவர் சென்றும் அங்கு பல நண்பர்களைக் காண முடியவில்லை. "தாஸ்பன்" எனும் நண்பர் ஹனேவர் நகரத்தின் அழிந்துபோன கோரப்பகுதிகளை எங்கட்குக் காட்டினர்.

இருபதாவது நூற்ருண்டின் விளைவுகளில் அழிந்த நகரமான கோலன் சென்று சுற்றிப்பார்த்தோம். ஹாம்பர்க்கிலிருந்து ஸ்டட்கார்ட்டுக்கு ரயிலில் வரும்பொழுது குண்டுகளால் தகர்த்தெறியப்பட்ட மாளிகைகளையும் தொழிற்சாலைகளையும் கண்டோம். அந்த வேதனையை எப்படி வர்ணிக்கமுடியும்! பெரிய பெரிய இரும்புச் சட்டங்களும், எஃகு விட்டங்களும், வளைந்தும் உருகியும் சிதறியும் தொத்திக்

கொண்டிருக்கும் சின்னுபின்னமான கட்டிடங்கள் அகதிகளாக வானை நோக்கி ஏங்கி நின்றன.

இவ்வளவு பயங்கர அழிவுக்குப் பிறகும் போர் முடிந்து இவ்வளவு குறுகிய காலத்திற்குள் உணவுக்கோ, வேறு பொருளுக்கோ கட்டுப்பாடுகள் தேவையில்லாத ஒரு தாராள நிலைக்கு ஜெர்மனி உயர்வடைந்திருப்பதுதான் ஆச்சர்யம் உண்மையிலேயே பிரிட்டனும் அமெரிக்காவும். தங்கள் நாடுகளிலே பொருள் உற்பத்தி விநியோகக் கட்டுப்பாடுகளிலே இருந்து மீளமுடியாமல் இன்னும் தவித்துக்கொண்டிருந்தபோதிலும், உலகப்போரில் உருக்குலைந்து உலைந்து போய்விட்ட ஜெர்மன் போன்ற நாடுகளில் மக்களின் உணவுத் தேவையை அவர்கள் சமாளித்துக் கொள்ளவும் தொழில்களை மீண்டும் தொடங்கி முன்னேறவும் பெருதவி செய்து வந்திருப்பதைப் பாராட்டவே வேண்டும்.

இங்கிலாந்திலே, உணவு, ஏனைய பொருள்கள் ஆகியவற்றின் மீதுள்ள கட்டுப்பாடுகள் இன்னும் நீக்கப்படவில்லை. ஆயினும், இங்கிலீஷ், அமெரிக்க உயர்ந்த சிகரெட்டுகள், மிட்டாய் வகைகள், துணி ரகங்கள் ஆகியவற்றை ஜெர்மன் எல்லைக்குள்ளே யாதொரு சங்கடமுமில்லாமல் தேவையான அளவு பெறமுடிகிறது. ஜெர்மன் ஹோட்டல் ஒன்றில் ஒரே மேஜையிலமர்ந்து சாப்பிடும்போது ஜெர்மானியன் வயிறு புடைக்க உண்ண அனுமதித்து, ஆங்கிலேயன் தனது அளவை சுருக்கிக்கொள்கிறுன் என்பதைக் கவனித்தால் அங்கே அந்த நாட்டின் வளர்ச்சிக்கு பிரிட்டிஷார் எத்தகைய தியாகத்திறகு ஆளாகிறுர்கள் என்பது தெரியும். "மார்ஷல்" உதவி போன்றவை எந்த அளவு ஜெர்மனியருக்குக் கிடைக்கிறது என்பது எனக்குத் தெரியாவிட்டாலும், உலகில் தொழில் முற்போக்குள்ள எந்த நாட்டுடனும் சரிநிகரான ஒரு நிலைக்கு ஜெர்மனி விரைந்து முன்னேறி

விட்டது என்று சொல்லமுடியும். போர்க் காலத்திலும் இறுதியிலும் ஜெர்மனியின் நிலைமை மிகவும் பரிதாபம். உணவே இல்லையென்று சொல்லலாம்.

அரை அல்லது முக்கால் பவுண்டு வெண்ணெய்க்கு 100 முதல் 200 ரூபாய் பொறுமானமுள்ள நகைகளையோ தட்டுமுட்டுச் சாமான்களையோ கொடுத்துத்தான் பெறவேண்டும். 400-500 ரூபாய் மதிப்புள்ள ஒரு மேஜையைக் கொடுத்து ஒரு ஜோடி கால் செருப்புகள் வாங்கினவர்களும் உண்டு.

போர் நிறுத்தத்தின் போது ஜெர்மன் நாணயமான மார்க்குகளின் மதிப்பு மிகவும் தாழ்ந்துபோய் இருந்தது. கொஞ்சகாலத்திற்கு முன்பு 100 ஜெர்மன் மார்க்குகளை 6 டச்சு மார்க்குகளுக்கு கைமாற நேர்ந்ததினால் கோடிக் கணக்கான மார்க்குகள் வைத்திருந்தவர்கள் பெரு நஷ்டமடைந்தார்கள். அமெரிக்க உதவியில்லாமல் போயிருந்தால் ஜெர்மனி உணவு இன்றி முற்றிலும் அழிந்து போயிருக்கும்.

ரஷ்ய ஆதிக்கத்தில் சிக்கியுள்ள பல பிரதேசங்களில் நாங்கள் பிரயாணம் செய்ய முடியவில்லை.

1935-ல் நான் சென்று வேலை செய்த ஒரு தொழிற்சாலையிலே இந்தத் தடவையும் சென்று பழக ஓர் சந்தர்ப்பம் வாய்த்தது. வேறு இடங்களில் பெற முடியாத மூலப் பொருள்கள் அரைகுறையாக உருவானவை—உயர்ந்த பிளேடுகள் தயாரிப்பதற்கானவை இவற்றை நம்முடைய நாட்டிற்கு இறக்குமதி செய்து பயன் படுத்துவதற்கு ஏற்ற சில ஏற்பாடுகள் செய்து கொண்டேன். "நார்பிட்" என்னும் எனது நண்பர், அவருடைய குமாரன் இருவரும் இதில் எனக்குத் துணைபுரிந்தார்கள்

அமெரிக்கக் கண்காணிப்பில் இருக்கும் ஜெர்மன் பிரதேசத்தின் தலைநகரம் ப்ராங்பர்ட் என்பது. போருக்குப்பிறகு ஜெர்மன் தொழில் வளர்ச்சி எவ்

வளவு சிறப்பாக நடைபெற்று உயர்ந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதுபோன்று இங்கே விவரிக்க முடியாத வகை வகையான பொருள்களும் யந்திரங்களும் நிறைந்த கண்காட்சி சாலை ஒன்றை பார்வையிட வாய்ப்பு ஏற்பட்டது. இவற்றை விளக்கிக் காட்டும் புத்தகங்கள் பல சேர்த்துக் கொண்டோம்.

ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் தொழில் முன்னேற்றத்தைக் கவனித்தால் ஐரோப்பாவில் மற்ற நாடுகள் எவ்வாறு முன்னேற்றம் அடைந்திருக்கின்றன என்பதை ஒருவாறு யூகிக்கலாம். "மின்சார பல்பு" செய்யும் தொழிற்சாலையில் பெரும்பாலான யந்திரங்களை ரஷ்யா எடுத்துக்கொண்டு போய்விட்டது. போருக்குப்பின் அந்த தொழிற்சாலையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் வேறு வேலைகளில் ஈடுபட நேர்ந்துவிட்டது என்றாலும் அவர்கள் ஒன்று சேர்ந்து மீதி நேரத்தில் இந்தத் தொழிற்சாலையில் சம்பளமின்றி கட்டிடங்கள், யந்திரங்கள் ஆகியவற்றை மறுபடியும் புதுப்பித்து உருவாக்குவதற்கான பல வேலைகளையும் பல மாதங்கள் தொடர்ந்து ஆவலுடன் செய்து வந்தார்கள். பின்னர் அந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தனர். இந்த நிலையில் அவர்கள் தங்கள் உழைப்புக்கு அரைக்கால் அல்லது கால்பாகம் ஊதியம் உவப்புடன் ஏற்றுக்கொண்டு அநேக மாதங்கள் மிகக் கடினமான வேலைகள் செய்து வெற்றிகண்ட பின்னரே முழுச்சம்பளம் பெற்று வருகிறார்கள்.

தொழிற்சாலைச்சட்டம் இங்கு இருந்தாலுங்கூட ஒவ்வொரு தொழிலாளியும் இராப் பகல் வேலை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். நம் தேசத்தி லிருப்பதுபோல் "எப்போது மணி அடிப்பார்கள் எப்போது வெளியில் போகலாம்" என்று இருக்கும் ஒரு தொழிலாளியையாவது, நான் பார்த்த நூற்

றுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகளில் ஒரு இடத்திலாவது நான் கண்டதில்லை. ஒவ்வொருவரும் தன் தேசம் என்பதை நினைத்து தன் தொழில் ஒன்றே தான் தன் செல்வம் என்பதையும் உன்னி ஊக்கம் தளராது ஒழுங்காக வேலை செய்து, செல்வத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

முழுவதும் அழிந்துபோன பிறகு—யுத்தத்திற்குப்பின்னர் புதிதாகத் தொழில்களை ஆரம்பித்து இப்போது ஜெர்மனி முன்னேற்றமடைந்திருப்பதைப் போல வேறு எந்த நாடும் அடையவில்லை என்று சொல்லலாம்.

ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கும்போது தாம் செய்யும் யந்திரங்களை ஏனைய தொழிற்சாலைகளுக்குக் கொடுத்தும், வேறு தொழிற்சாலையில் செய்யும் யந்திரங்களை அல்லது கருவிகளை. அல்லது மூலப் பொருள்களை தாங்கள் வாங்கிக்கொள்ளுகிறார்கள், இம்முறையில் ஒவ்வொருவரும் தான் செய்யக்கூடியதைச் செய்து கொடுத்து அதற்குப் பதிலாகத் தனக்கு வேண்டிய ஆயுதங்களையோ அல்லது சாமான்களையோ வாங்கிக்கொண்டு தொழில்களில் யுத்தத்துக்கு முன் இருந்ததைவிட ஒரு மடங்கு அல்லது இரண்டு மடங்கு ஏற்றுமதி செய்யும் சக்தி உடையவர்களாய் இருக்கிறார்கள்.

இன்னும் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஜெர்மனியில் மெர்ஸிடோஸ் ப்யூஸ் என்னும் தொழிற்சாலை யுத்தத்தின்போது குண்டுவீச்சுகளினால் அடியோடு நாசமாக்கப்பட்டது. ஒரு நாளில்மட்டும் இந்தத் தொழிற்சாலையின்மேல் 19,000 குண்டு விழுந்திருக்கின்றன. இதே மாதிரி 1,20,000 வரை இந்தத் தொழிற்சாலைமேல் குண்டுகள் வீசப்பட்டு ஒரு புகைப்போக்கி குழாயும் ஒரு கார் நிற்கும் கூரையும் தவிர்த்து ஏனைய கட்டிடங்கள் யாவும் தரைமட்டம் ஆகிவிட்டன.

யுத்தம் நின்றபின், இந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் இந்தத் தொழிற்சாலை முழுவதும் நவீன முறையினால் கட்டிடங்கள் நிறுவப்பெற்று, தற்சமயம் நாள் ஒன்றுக்கு 200-300 கார்களும் லாரிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வெளியேறுகின்றன. இதற்கு உள்ளிருக்கும் விசாலமான பாதைகளே 10 மைல்களுக்கு மேல் நீலமாக இருக்கிறது என்றால் இந்தத் தொழில் எவ்வளவு தூரம் எவ்வளவு குறுகிய காலத்தில் முன்னேறி இருக்கிறதென்பதைப் பாருங்கள்.

உற்பத்தியாகும் மிஷின்களோ அல்லது பொருள்களோ தரத்தில் ஒருக்காலும் குறைந்ததல்ல. விலையில் மற்ற தேசங்களைப்போல் உயர்ந்தது அல்ல. இது மட்டுமில்லாமல் யுத்த காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எல்லா நவீன முன்னேற்றங்களும் உன்னத உற்பத்திப் பொருள்களும் உடையவர்களாய் இருக்கிறார்கள்.

யுத்தத்துக்கு முன் ஒரு "மிஷின்" 10 சதுர அடி அளவில் 2 டன் கனத்தில் செய்யப்பட்டு 100 சாமான்கள் உற்பத்தி செய்யக்கூடியதாய் இருந்ததானால் இப்போது அதே, விதமான சாமான்களை உற்பத்தி செய்வதற்கு—முந்திய மிஷின்களின் வடிவத்தில் கால் பாகமும், எடையில் கால் பாகமும் உள்ள யந்திரங்களைச் செய்து குணத்திலும் ரகத்திலும் இரண்டு மடங்கு உயர்ந்ததாகவே செய்துவருகிறார்கள்.

நம் நாட்டில் நடப்பதை இதனோடு ஒப்பிட்டு சீர்தூக்கிப் பார்க்கும்போது யாருக்கும் வருத்தந்தான் உண்டாகும். இங்கே ஒருவர் மற்ற ஒருவர் மேல் குறை சொல்லிக்கொண்டிருந்தாலும், தொழிலாளிகள் தாங்களாகவே ஒரு சிறிதளவு யோசித்து, தொழில் செய்யும் துறை மட்டிலும், மேனாடுகளைப் பின்பற்றி நடப்பார்களேயானால், நம் நாடும் மற்ற

நாடுகளைப் போலவே உயர்ந்த நாடாக மதிக்கப் படலாம்.

சண்டை உற்பத்தியானதும் ஜெர்மனி, சண்டையினுல் முழுவதும் அழிந்துபோனதும் ஜெர்மனி, அப்படியிருந்தும் இன்று ஜெர்மனியில் எந்த சாமானும் கட்டுப்பாடின்றிக் கிடைத்து வருகிறது. அவர்களுக்கு வேண்டிய மாமிசம், முட்டை, அரிசி பருப்பு, காய்களுக்கும் மற்ற தேசத்திலிருந்தே வருகிற வாழைப்பழம், புகையிலை ஆகியவற்றிற்கும் ஜெர்மனியில் பஞ்சம் இல்லை. நம் நாட்டில் நாம் உபயோகித்துவரும் உப்பமாவோ, பர்பியோ நாம் ஜெர்மனியில் செய்யவேண்டுமானுல் ஒரு அரை மணி நேரத்தில் சாதாரண ஊர்களில்கூட கிடைக்கவேண்டிய சாமான்கள் எல்லாம் கிடைக்கும் என்ருல் அங்குள்ள வசதியைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கின்றது.

முந்தி இருந்த நாணயமாகிய மார்க்கின் மதிப்பு மிகக்குறைந்துவிட்டதால் தற்காலம் பணக்கஷ்டம் கொஞ்சம் இருக்கின்றது என்று சொல்லலாம். ஆனுல் ஒவ்வொரு ஜெர்மனியனும் ஜெர்மனியப் பெண்ணும் செய்துகொண்டிருக்கும் இடைவிடா உழைப்பு என்னும் செல்வம், ஒவ்வொரு வருஷமும் அனுப்பக்கூடிய சக்தி படிப்படியாக வளர்ந்து வருகின்றபோது, பணக்கஷ்டம் என்பது மறைந்துவிடுகிறது.

ஸ்டட்கார்டில் நான் தங்கியிருந்தபோது அந்தப் பிரதேசத்து விவசாய மந்திரியிடமிருந்து என்னைக் கண்டுபேச விரும்புவதாக அழைப்பு வந்தது. பருத்தி, சோளம், பருப்பு, பப்பாளி ஆகிய செடிகளின் வளர்ச்சியில் நான் புரிந்திருக்கும் பரிசோதனைகளும் அடைந்திருக்கும் வெற்றியையும் பற்றி விரிவாகப் பேசவேண்டுமென்பது அவரது விருப்பம் என்று அறிந்தேன். அன்று காலையில்தான் எனது

வருகையைப்பற்றி விரிவாக அவர் அறிந்திருந்த போதிலும், அன்றைய பிற்பகலே, விவசாய இலாகா அதிகாரிகளும், மந்திரியும் கூடிய சிறு கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். விவசாய சம்பந்தமாகக் கலந்து பேசினேம். தாவர வாழ்க்கையைப் பற்றி முறையாகக் கற்று ஆராய்ந்திராவிடினும், செடிகளின் வளர்ச்சியையும் விளைவையும் பலமடங்கு பெருக்கிக் காட்டும் தற்செயலான ஒரு வித்தை எனக்கு எப்படியோ, வசமாகிவிட்டது. வேறு ஏதோ பரிசோதனையில் ஈடுபட்டிருந்தபோது ஒரு மருந்து தயாராயிற்று. இதனை ஊசிவழியாகச் செடிகளில் ஏற்றியதில் அரிய பலன் அளித்தது. சர். சி. வி. இராமன் இதனை ஒரு அற்புதமென்று கூறினர். நான் விளைவித்த பப்பாளிப்பழங்கள், பருத்தி விதைகள் ஆகியவற்றைக் கொண்டுபோய் இருந்தேன். இந்த ஆராய்ச்சி நமது நாட்டுப்பத்திரிகைகள் சிலவற்றின் மூலமாக மேல் நாடுகளுக்கும் எட்டியிருந்தது.

எங்கள் திட்டப்படி ஜெர்மனி சுற்றிப் பிரயாணத்தை இரண்டு மூன்று தினங்களில் முடித்துக் கொண்டு தீரவேண்டும். அதற்குமேல் பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை. ஆயினும் காரியார்த்தமாகப் பல தொழிற்சாலைகளைப் பார்வையிடுவது இன்றியமையாததாகி விட்டபடியால் இரண்டு மூன்று வாரங்களுக்கு திட்டத்தை விரிவுப்படுத்த வேண்டியதாகியது.

யந்திரங்களில் நின்று வேலை செய்துவிட்டு அவற்றைவிட்டுப் பிரிய மனமில்லை. அவற்றில் எதையும் வாங்கிவிடுவதற்கு நாணய வசதியுமில்லை. இந்த நிலையில் வீணில் பல இடங்களுக்குச் சென்று எதையும் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டாமென்றே தோன்றியது. இக்கட்டான எனது நிலையை நண்பர் ஸ்டோல் எப்படியோ யூகித்துக்கொண்டார்,

அவரே வலிந்து எனக்கு வேண்டிய துணைபுரிய முன் வந்தார். இல்லையென்றால் அவ்வளவு குறைந்த காலத்தில் பல வேலைகள் செய்ய முடிந்திராது. ஜெர்மனியில் நான் செய்துமுடித்த வேலைகள் சிலவற்றைப் பற்றிமட்டும் இங்கு சில குறிப்புகள் தருகிறேன்.

1939-40-ல் நான் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றிருந்த காலத்தில் விஞ்ஞானக் கலைநுணுக்கப் பள்ளிக்கூடங்களில் சென்று பயில்வதும், சில தொழிற்சாலைகளில் சேர்ந்து வேலை செய்வதும் ஆகிய பல சாதனைகளில் ஈடுபட்டேன். ஆயினும் யந்திரங்கள் எதனையும் சொந்தமாகவே வாங்கிவிட வேண்டுமென்று கருதியதில்லை. உபயோகமான விஷயங்களை சிறிதேனும் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொந்த வாழ்வின் தேவைகளுக்கு ஏதேனும் பொருளீட்ட வேண்டுமென்றும் தான் அப்போது நான் விரும்பினேன்.

இந்தத் தடவை நான் ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டு இங்கு வந்திறங்கிய போது, முன்போலவே எனக்கு விருப்பமான சில காரியங்களில் இறங்கினேன். ஆனால் எனது சொந்த அறிவுப் பெருக்கம் மட்டுமே இதில் எனக்கு அடிப்படை நோக்கமல்ல. எண்ணிறந்த வகைகளில் காணப்படும் விதம் விதமான யந்திரங்களையும் அவற்றின் உபயோகத்தையும் நேரில் பார்த்தபோது நமது தாய்நாட்டின் தொழில் வளத்திற்கும் தொழிலாளர் கைத்திறனுக்கும் உதவுவதான யந்திரங்களைத் தேர்ந்தெடுப்பதே எனது ஆவலாகிவிட்டது.

சைக்கிள் வண்டியின் பல்வேறு பாகங்களையும் தனித் தனியாக ஒவ்வொரு பாகமும் தயாரிக்க, தனித் தனித் தொழிற் கூடங்கள் இங்கே இருந்தன. சுமார் 15 வகையானவை. இவற்றையெல்லாம் நேரில் பார்த்து சைக்கிள் பாகங்கள் பூராவையும்

தயாரித்து இணைக்கும் முழுத்தன்மை கொண்ட தொழிற்சாலை ஒன்றைத் தோற்றுவிக்கும் திட்டம் ஒன்றை மனதில்கொண்டு, இதற்கான ஆலோசனைகளுக்கும் உதவிக்குமாக 'எர்னஸ்ட் ஹிம்ன்' என்ற பிரபல இஞ்சினீர் ஒருவரைப் போய்க் கலந்து ஆலோசித்தேன்.

சைக்கிள் உற்பத்திக்கான தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு ஏற்பாடுகள் செய்வதில் இஞ்சினீயர் எர்னஸ்ட் ஹிம்ன் அவர்களும் மற்றொரு இஞ்சினீயர் ஓட்டோ எட்ஜெல் அவர்களும் மூன்று நாட்கள் என்னுடன் இருந்து உதவினார்கள். ஜில்லாக்கள் தோறுமுள்ள இந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் சென்று காண்பதற்கு நான்கு இஞ்சினீயர்கள், ஒரு காரியதரிசி, இரவுப் பிரயாணம் இத்தனையும் ஏராள விலையாகக்கூடிய விஷயம். சைகிள் உற்பத்திக்கு ஒரு முழு யந்திரசாலை அமைப்பதென்றால் பத்து லட்சத்துக்கு ஆகும். யந்திரங்களைக் கப்பலேற்றி இந்தியாவில் கொண்டுபோய் அவற்றை ஸ்தாபித்து வேலை தொடங்குவதற்கு இவற்றின் விலையில் 60 சத விகிதம் வந்துவிடும். நானும் நண்பர் சாமிநாதனும் யோசித்தோம். இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்யுமுன் சமாளிக்கவேண்டிய பொருளாதார வசதி, சர்க்கார் அனுமதிகள் பலபேருடைய விருப்பு வெறுப்புகள் போன்ற எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன. இக்காரியத்தில் எவ்வளவோ சந்தேகங்களும் அச்சமும் இருந்தபோதிலும்கூட இந்தத் திட்டத்தை விட மனமில்லை,

ஏனென்றால் இதனை வேறு எங்காவது பெற வேண்டுமானால் மேலும் ஏழு எட்டு லட்சங்கள் பிடிக்கும். எனவே சகாயமாகக் கிடைக்கும் அரிய ஏற்பாட்டை விட்டுவிட மனமில்லை. உதாரணமாக நாளொன்றுக்கு சைகிள் செயின்கள் மூவாயிரம் உற்பத்தி செய்வதற்குமட்டும் ஒரு தொழிற்சாலை ஆரம்

பிப்பதனுல்கூட 12 முதல் 15 லட்சங்கள் பிடிக்கும். ஆனுல் என் ஏற்பாட்டில் சகலமான கருவி கரணங்களேயும் 2 லட்சத்துப் பதினுயிர ரூபாயில் முடிவு செய்ய வசதியிருந்தது. இத்துடன் கெடிகார உற்பத்திச்சாலே யொன்றை ஒரு லட்சரூபாய் விலேக்குப் பேசினேன். யந்திரங்களேப் பார்வையிட விரும்பினேன். எஞ்சினீயர் ஹிம்ன் இதற்கு ஏற்பாடு செய்தார். நாங்கள் இருந்த இடத்திலிருந்து ரயிலில் பிரயாணம் செய்து பல இடங்களில் வண்டி மாற்றி 300 மைல்களுக்கு மேல் போக வேண்டுமாகையால் இது சுலபமாக இல்லே. சாதாரணமாக போய் வந்தால் 5 அல்லது 6 நாட்கள் பிடிக்கும். நண்பர் ஹிம்ன் அவர்களின் காரிலேயே காலே 6 மணிக்கு புறப்பட்டு ஆஸ்டிரியா நாட்டின் எல்லே நகரமான 'போகிங்' மாலே 6 மணிக்கு வந்தடைந்தோம். இங்கு தான் குறிப்பிட்ட தொழிற்சாலே நடைபெறுகிறது. எங்கள் வருகையை எதிர்பார்த்து இதன் இஞ்சினீயர்களும் போர்மேன்களும் காத்திருந்தார்கள். தொழிற்சாலேயில் நுழைந்து ஒவ்வொரு யந்திரத்தையும் ஓட்டிப் பார்த்தேன். செயின்கள், கடிகாரங்கள், பாகங்கள் ஆகியவற்றின் மாதிரிகளே சேகரித்துக் கொண்டோம்.

இந்த யந்திரசாலே ஆறு மணி காலத்தில் 1000 சங்கிலிகள் உற்பத்தி செய்கின்றன. ஆனுல் இது 3000 உற்பத்தி செய்யும் சக்தியுடையதாகும். கெடிகாரங்கள் எண்ணற்றவை உற்பத்தி செய்யக்கூடிய திறனுடையவை. சாதாரண கைக்கெடியாரம் ஒன்றை 1 மார்க் 60 பென்னிங்கு விலேயில் தயாரிக்கலாமென்றுல் நம்பவேமாட்டீர்கள். ஜுவல்கள் நிறைந்த உயர்ந்த கெடியாரம் ஆறரை மார்க்குகள் ஆகும். வெள்ளி தங்க முலாம் பூசும் கூலி சேர்த்துக்கொள்ள வேண்டும். 20, 30 மார்க்குகள் ஆகக்கூடிய ஜெர்மன் கெடிகாரம் நம் நாட்டில் 120 முதல் 140 ரூபாய்வரை

விலைபோகும். நமது செல்வம் பிற நாட்டாரின் உழைப்பிற்கும் லாபத்திற்குமாக எப்படி வெளியே போகிறது என்பதைப் பாருங்கள்.

இரவெல்லாம் வேலைசெய்து காலையில் ம்யூனிச் நகரம் திரும்பினோம். பன்ரு என்னும் ஹிட்லரின் ஜென்ம பூமியை வழியில் கடக்கவேண்டியிருந்தது. பெர்ட் செஸ்கார்ட்டன் என்ற பிரசித்திபெற்ற இடமும் அங்குதான் இருந்தது. போக்கு வரத்து அனுமதிச் சீட்டுப் பரிசோதனையின் காரணமாக எங்கள் பிரயாணம் சற்று தேக்கமடைந்தது. பின் புறப்படத் தொடர்ந்தபோது வழியில் நல்ல இருட்டு. தவிர, பெரும் பாலங்கள் சேதமடைந்திருந்தன. எனவே அதிகம் அங்குமிங்கும் விரிவாகச் சென்று சுற்றிப் பார்க்க இயலவில்லை.

ரிச்செர்டர் என்பவரின் தொழிற்சாலையே டெஸ்டிங் மிஷின்களுக்காக நாங்கள் குறித்தது. அதிபரே உதவி செய்தார். தொழிலாளர் பலர் விடுமுறை பெற்றுப் போனதனால் ஓய்வாக இருந்தது. யந்திரங்களை வேலை செய்துபார்க்க இது சவுகரியமாக அமைந்தது. கண் கண்டதை கை செய்யக்கூடிய அளவில் நுட்பமான யந்திரங்களில் வேலை செய்து நொடியில் விஷயங்களைப் புரிந்துகொள்ளும் ஆவலுடன் கூடிய இம்மாதிரி ஒரு மனிதரைத் தான் பார்த்ததேயில்லை என்று அந்தத் தொழிற்சாலை அதிபர் தன்னிடம் வியந்து கூறினர் என்று என்னிடம் நண்பர் ஸ்மித்மான் பின்னர் தெரிவித்தார்.

அண்ணமலை சர்வகலாசாலைத் துணை வேந்தர் எஞ்சினீயரிங் கல்லூரி மாணவர்க்குப் பயன் தருவதான சில உபகரணங்களைத் தேர்ந்தெடுத்து வருமாறு என்னிடம் கேட்டிருந்தார். எனது பயிற்சிக் கூடத்திற்கும் ஒரு தொகுதி கருவிகரணங்கள் சேகரிக்க வேண்டுமென்ற எண்ணமும் எனக்கே உண்டு. இவற்றை யெல்லாம் மனதில் கொண்டுதான் நண்பர்

ரிச்சர்ட் அவர்களுடன் பிடிவாதம் செய்து மிகவும் சகாயமான விலையில் ஒரு செட் யந்திரங்கள் தர வேண்டுமென்று கேட்டு உறுதி வாங்கிக்கொண்டேன்,

மின்சார மோட்டார்கள் என்சின்கள் உற்பத்தியாகும் ஆல்பர்ட் ஹார்த் பாக்டரி எங்கள் அடுத்த ஆராய்ச்சி. இங்கே போர்க்காலத்தில் பத்தாயிரம் தொழிலாளருக்கு மேல் வேலை செய்து வந்தார்கள். இப்பொழுது அவ்வளவு ஆட்களில்லை. ஆனாலும் ஆயிரக்கணக்கில் ஒவ்வொரு நாளும் யந்திரங்கள் செய்து குவிக்கப் படுகின்றன. இயங்கும் சில குறிப்பிட்ட யந்திரங்களில் வேலை செய்து பார்த்தேன்.

புதுவிதமான லேத்து ஒன்றையும் பொருக்கினேன், உபகரண உற்பத்தி பயிற்சிக்கு மிகவும் ஏற்றது இது. இதனை நான் ஓட்டிப் பார்த்தபோது இதன் அமைப்பில் ஒரு குறை இருந்ததைக் கண்டு பிடித்தேன். முதலில் நான் காட்டிய குறையை அதன் இஞ்சினீயர்கள் அவ்வளவாக ரசிக்கவில்லை. விளக்கிக் கூறிய பிறகு ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் முதலில் விளங்கிக் கொள்ளாத காரணம் என்னுடைய ஆங்கிலப் பேச்சுதான் என்பதை பின்னர் புரிந்துகொண்டேன். ஜெர்மனியரின் ஆங்கில ஞானத்திற்கும் என் பேச்சிற்கும் ஒத்துவரவில்லை போலும். டைரக்டர் ரிச்சார்வெய்ஸ் எனது விளக்கத்தினால் மகிழ்ச்சியடைந்துவிட்டார். அவர்களது ஆபீஸ் அறையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது மேஜையை சுற்றிக்கொண்டு என்னருகே வந்து அமர்ந்து இந்திய முறையில் எனக்கு நன்றிகூறி—அதாவது உணர்ச்சிப் பெருக்குடன்—நான் அதை விட்டுப் புறப்படுமுன்பே நான் கூறியபடி லேத்தில் மாறுதல் செய்துவிடுவதாகக் கூறினர். அவர் காட்டிய பரிவுக்கும் அன்புக்கும் நான் வணக்கம் தெரிவித்தேன்.

ரிச்சார்வெய்ஸ் அவர்களிடம் விடை பெற்ற பின்னர், நண்பர் ஸ்மித்மான் அவர்கள் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்கூடம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றூர். இலேசான மரப்பலகைகளால் தயாரிக்கப் பட்டு மேலே ஒரு வித துணியால் கவசமிடப்பட்ட பெட்டிகள் இங்கே தயாராகின்றன. முதலில் இவற்றைப் பார்த்தபோது இந்தத் துணி பெட்டிகள் எத்தனை நாளைக்குத் தாங்கப்போகிறது என்றெண் ணினேன். பெட்டிக்குக் கவசமிடும் அதே துணியை வாங்கிப் பலம்கொண்டமட்டும் இழுத்துப் பிய்த்துப் பார்த்தேன். ஒரு இழைகூட அசையவில்லை. மாதி ரிக்கு இந்தத் துணி கொஞ்சம் கேட்டு வாங்கிக் கொண்டேன்.

ஹெர்மன் ஹால்பின் என்ற இஞ்சினீயர் தயா ரித்திருக்கும் சின்னஞ்சிறிய கார் ஒன்றைப் பார்வை யிடச் சென்ருேம். இந்த மோட்டார் காரின் எடை 440 பவுண்டுதான். ஒரு காலன் பெட்ரோலுக்கு 70 மைல் சவாரி கொடுக்கக்கூடியது, இதன் விலை 275 புவுன்கள் ஆரம்ப முயற்சி யாகையால் பெருக்கமான அளவுக்கு இன்னும் உற்பத்தி செய்யவில்லை.

இதை விட்டுப் புறப்பட்டு, ஒருசிறிய இடத்தில் நடைபெறும் ஹெர்ல் ஹென்ஸ்ராம் பாக்டரிக்குச் சென் ருேம். இவர்களுடைய பெரிய தொழிற்சாலை ஒன்று பெர்லினிலேயே இருக்கிறது, இங்குள்ள சிறு தொழிற்சாலையில் எலக்டிரிக் மோட்டார், ரேடியோ பாகங்கள் இவற்றை வைண்டிங் செய்வதற்கான புது விதமான யந்திரங்களைத் தயாரிக்கிருர்கள். பார்க்கப் பார்க்க வெகு நேர்த்தியான பொருள்கள் இவை. இவற்றிலெல்லாம் நானும் நின்று வேலை செய்து பார்த்தேன். இவற்றை விலைக்கு வாங்கிவிட வும் விரும்பினேன். அங்குள்ள எதனையும் கொடுத்து விட அவர்களால் இயலவில்லை. எனினும் ஒரு சில வற்றையேனும் அனுப்பி வைப்பதாக வாக்களித்

தார்கள். நுட்பங்கள் அறிந்திராத சாதாரண தொழில் மகன் எவனும் உடனே புரிந்துகொண்டு இவற்றைக் கையாளக்கூடிய மாதிரியில் மிகவும் சுலப மான அமைப்புகளைக் கொண்ட கருவிகள் இவை. ஒரு வாரப் பயிற்சியில் கற்றுக்கொண்டு தேர்ச்சி பெற்று விடலாம்.

முன்பு நான் தேடிப்போயிருந்தபோது சென்னைக்குச் சென்றுவிட்டிருந்த அன்பர் வில்ஹெம் திரும்பி வந்ததை அறிந்தேன். பம்பாயில் இண்டர் நேஷனல் பிசினஸ் பீரோ மானேஜிங் டைரக்டரான வி. ஜி. குல் கர்னியும் அவருடன் வந்திருந்தார். சிண்டெல்பில் கென் என்னுமிடத்தில் வில்ஹெம் அவர்களின் கம் பெனிக்குச் சென்றோம். டிரக்குகள், எஞ்சின்கள், ஆகியவை தயாராகின்றன. கோவையில் டீசல் கார் தொழிற்சாலை ஒன்று தொடங்கவேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தேன். சில ஆயிரம் ரூபாய் களில் ஒரு விவசாயப்பண்ணை, ஓரிரு லட்சங்களில் ஒரு மில் என்று ஆரம்பிக்கிறோமே அந்தமாதிரி இதை செய்யலாமா என்று கருதியிருந்தேன். இந்த பாக் டரியைப் பார்த்த பிறகுதான் அரசாங்கம் பேருதவி தந்தாலன்றி நாமே ஒரு டீசல் கார் பாக்டரி தொடங் குவது முடியாத காரியமென்று விளங்கிக் கொண் டேன். ஏனென்றால் இத்தகைய தொழிற்சாலை ஒன்றை திடீரென்று ஒரு நாள் சிருஷ்டித்துவிட முடி யாது. முதலில் பாகங்களைத் தருவித்து இணைப்பு வேலைகளில் இறங்கிப் பின்னர் ஒவ்வொரு பாகமாக நாம் தயாரித்து முழுதும் சொந்தச் சாமான்களாகவே செய்து வண்டியைப் பூட்ட எவ்வளவோ காலம் ஆகும் நான் பார்த்த இந்தப் பாக்டரி எல்லைக்குள் அதற்கு இன்றியமையாத நடமாட்டத்திற்காகப் போடப்பட்டிருக்கும் ரஸ்தாவின் நீளம் மட்டும் எவ் வளவு தெரியுமா? பத்து மைல்கள். யந்திரங்களின் விலைமட்டும் ஒரு கோடி மார்க்குகள் ஆகும். தேர்ச்சி

பெற்ற நிபுணர்கள் பல்லாயிரவர் வேண்டும். இதை யெல்லாம் எண்ணிப்பாருங்கள் எவ்வளவு ராட்சத வேலை இது என்று தெரியும்.

நண்பர் வில்ஹெம் இந்த மாதிரி தொழிற்சாலை தொடங்க எனக்கு வேண்டிய உதவிகள் புரிவதாகக் கூறினர். ஸ்டட்கர்ட் நகரத்துப் பிரபல தினசரிப் பத்திரிக்கையான "ஸ்டட்கர்டர் ஜ்ஸுடங்க்" காரியால யத்தைச் சேர்ந்த 'வில்லிஸ்டூயர் வால்டு' என்னும் நண்பர் மூலமாக ஒரு டாக்டர் அறிமுகமானர். அவர் பெயர் ப்ரிட்ஜ்ஃபாலாபர். இவர் மிகச் சிக்கனமான விலையில் ஒரு அருமையான புகைப்படக் கருவியைத் தயாரித்திருக்கிறர். நாளொன்றுக்கு இரண்டாயிரம் காமிராக்கள் உற்பத்தியாகியும்கூட வெளிச்சந்தை யில் தாராளமாகக் கிடைப்பதில்லை, புது மாதிரியான பூட்டு ஒன்றும் கண்டு பிடித்திருக்கிறர். ஒன்றின் சாவி மற்றென்றுக்குச் சேராமல் இருபது லட்சம் சாவிகள் இந்த ஒரே மாதிரியான பூட்டுக்கு உற்பத்தி செய்து காட்டியிருக்கிறர். இந்தவகைப் பூட்டு ஒன்று மாதிரிக்கு வாங்கியிருக்கிறேன். எடைகாட்டும் புது மாதிரி யந்திரம் ஒன்றும் இவர் தயாரிப்புத்தான். 8 அங்குல விட்டம் உள்ளது இது. யந்திரத்தின் கனம் 3 அங்குலங்கள். 800 டன் எடையை இச்சிறிய யந் திரம் நிறுத்துக்காட்டும். இதே ரகத்தைச் சேர்ந்த மிகச்சிறிய எடைக்கருவியின் விட்டம் மூன்றே அங் குலங்கள். இது 10 டன்கள் எடை தூக்கும். வேறு எடைக் கருவிகள் எதுவும் நுட்பமாய் இருப்ப தில்லை.

நம்முடைய நாட்டில் இதுவரை கண்டிராத பல நூதன யந்திரங்கள் செய்யும் பாலின் பாக்டரிக்குச் சென்றேன். தேவைக்கு ஏற்ற உற்பத்தி நடைபெரு விட்டாலுங்கூட, நான் இவற்றில் காட்டிய கவனத் தையும் ஆவலையும் உணர்ந்து சில யந்திரங்களை கொடுக்க மனம்கொண்டார். உடனே யந்திரம்

எதனையும் கொடுக்க முடியாவிட்டாலும் சில பரிசுப் பொருளையளித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

ரெடிமேட் வீடுகளைத் தயாரிக்கும் வேலைக்குப் பயன்படக்கூடிய ஒரு தொகுதி யந்திர சாமான்களை இந்தியாவில் எனது காட்சிசாலைக்கு உதவுவதாக நண்பர் ஸ்டோல் அவர்கள் வாக்களித்தார். கிறிஸ்துமஸ் சமயத்தில் இருவரும் வேறு சில நண்பர்களும் கோவைக்கு வருவதாக வாக்களித்தார்கள். இவர்களுடைய வருகையினால் நமது தொழில் வளர்ச்சிக்குப் பெரும் நன்மைகள் ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

பிளாக்பாரஸ்ட் கண்காட்சிசாலையில் ப்ரூக்ப்ரெக்ஸ் என்னும் ஆடோமோபைல் டெஸ்டிங் சாமான் ஒன்றில் பல தினுசுகளைப் பார்வையிட்டு சிலவற்றை வாங்கினேன். இதுவரை ஆங்காங்கு சேகரம் செய்து குவித்துவைத்திருக்கும் பொருள்களையெல்லாம் தொகுத்து மூட்டைகட்டிக் கப்பலேற்றி இந்தியாவுக்கு அனுப்பிவைத்துவிட முடியுமாவென்று மலைப்பாக இருந்தது. முதலில் தேவையான நாணயமாற்று வசதி கிடைக்கவேண்டுமே. முன் தடவை பாரிஸ்மா நகருக்குச் சென்றிருந்தபோது 'பாலின்' என்னும் நண்பரை சந்தித்தோம். விவசாயப் பேரவையின் தலைமை அதிகாரி இவர். இந்தியாவுக்கு வந்திருந்து வேண்டிய பணிபுரிவதாக இவரும் ஒப்பினார்.

இப்படியாக ஒரு மூச்சு ஜெர்மன் பிரதேசங்களில் சுற்றிப் பார்த்துவிட்டு எங்கள் பிரயாணம் ஸ்விட்சர் லாந்தை நோக்கித் திரும்பிற்று.

ஸ்விட்சர்லாந்து என்றவுடனே கடிகாரங்களைப் பற்றிய நினைவு உண்டாகும். ஜெர்மனிய ஸ்டட்கர்ட்டிலிருந்து நாங்கள் புறப்பட்டு ஸ்விஸ் தேசத்து பேசில் நகரம் போய்ச் சேர்ந்தோம். இந்த நாட்டில்

மட்டுமின்றி ஐரோப்பாக் கண்டத்திலேயே மிகப் பெரிய மருந்து உற்பத்திச் சாலையான சிபா அண்டு ரோச் லேபரடரீஸ் இங்குதான் இருக்கிறது. இங்கே நூற்றுக்கணக்கான டாக்டர்கள் ஆயிரக்கணக்கான மருத்துவக் கலா வல்லுநர்களும் வேலை செய்கிருர்கள். அல்லும் பகலும் ஓய்வின்றி நவீன ஆராய்ச்சிகளிலும் மருந்து உற்பத்தியிலும் இவர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள்.

பின்னர் நாங்கள் சென்ற இடம் ஜினிவா. சரித்திரப் பிரசித்தி பெற்ற ஜினிவா நகரத்தைப்பற்றி அறியாதார் யார்? இங்கே பல தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்க்க நேரமில்லை. ஆயினும் பழைய சர்வதேசச் சங்கத்தின் கட்டிடத்தைப் போய்ப் பார்க்கத் தவறவில்லை நாங்கள். இப்போது இந்தக் கட்டிடம் ஐக்கிய நாடுகள் சபைக்கு உரியதாயிருக்கிறது. நாங்கள் போன சமயந்தான் அகில உலக தொழில் — பொருளாதார மாநாடுகள் நடைபெற்றன. இந்தியாவிலிருந்து லாலா ஸ்ரீராம், ஸர். ராமசாமி முதலியார் போன்றவர்கள் இவற்றில் கலந்துகொள்ள வந்திருந்தார்கள். நம் நாட்டிலிருந்து வந்த பல நண்பர்களை அங்கே நாங்கள் சந்திக்க வாய்த்தது.



கெடிகாரங்கள் — ஜுவல்கள்—ஆகியவற்றையும் இவற்றை உற்பத்தி செய்யும் யந்திரசாலைகள் நிறைந்த லாசேன் நகரம் எங்களது அடுத்த விஜயத்திற்கு உரியதாயிற்று. இங்கே ஒரு ஸ்தாபனத்தின் நிர்வாகத் தலைவரான மிஸ்டர் கின்யார்ட் எனது விருப்பத்திற்கிணங்க, கெடிகார உற்பத்தி யந்திரத்தை வேலைசெய்து பார்த்து அதனைக் கற்றுக்கொள்ள எனக்குத் துணைபுரிந்தார். இதன் ஏற்றுமதி அதிகாரியான மிஸ்டர் வால்கன் என்னும் அரிய மனிதர் எங்கள் உண்டி, உறையுள் வாகன வசதிகளுக்கும் பொறுப்பேற்றுக் கொண்டு அங்கு நாங்கள தங்கியிருந்த நாட்கள் பூராவும் உதவி செய்தார். அவரும் அவரது மனைவியும் எங்களுக்கு உதவ வராவிட்டால் நகரத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கெடிகாரத் தொழிற்சாலையை சென்று பார்க்கவும் பயிலவும் எங்களுக்கு வசதி யிருந்திருக்காது. கடிகார உற்பத்திசாலையில் சில அடிப்படை நுணுக்கங்களை நான் பயின்று கொண்டேன். நமது நாட்டில் மாணவர்களுக்கு இந்தக் கலைப் பயிற்சியைத் தருவதற்கு ஏற்ற யந்திரங்களையும் கருவிகளையும் கொடுத்து உதவுமாறு நான் நண்பர் கின்யார்ட் அவர்களிடம் வேண்டினேன்,

கெடிகார உற்பத்திச்சாலையில் சென்று கலை நுணுக்கங்களைப் பார்வையிடுவதே கடினமாயிருக்க, அதனைப் பயிலவும் வசதி தந்து, சில கருவிகரணங்களை இலவசமாகவும் சிலவற்றை மிகக் குறைந்த விலைக்கும் எனக்கு அளித்து உதவிய அவருடைய அன்பு என்னை பரவசப் படுத்திவிட்டது. ஒரு முழுத் தொகுதி யந்திரங்களை நாங்கள் பெறுவதற்காகத் தன்னிடம் இல்லாததும் வேறு தொழிற்சாலைகளில் மட்டுமே கிடைக்கக் கூடியதுமான பாகங்களை விலைக்கு வாங்கிக்கொடுத்தார் அவர். காரியாலய நேரம் கடந்த பின்னர் அவரது தொழிற்சாலையில் நான் இருந்து யந்திரங்களில் வேலைசெய்து பார்க்கவும்

பயிலவும் உதவி செய்த நண்பர் வால்கன் அவர்களது அன்பையும் பரிவையும் நான் மறக்கவே முடியாது.

ஜினிவாவுக்கு நாங்கள் பழையபடி திரும்பிவந்து விட்டோம். ஒமேகா கெடிகாரங்கள் என்று பிரசித்திபெற்ற ரகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இருக்கும் "பீன்" என்னும் இடத்திற்கு டாக்டரும் நானும் சென்றோம். இங்கே இதற்கான டிரெயினிங் ஸ்கூல் ஒன்றும் நடைபெறுகிறது. நண்பர் "கின்யார்ட்" அவர்களிடமிருந்து "ஒமேகா வாட்ச் கம்பெனிக்கு" அறிமுகக் கடிதம் கொண்டு போயிருந்தோம். (கெடிகார உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் "மிஸ்டர் கின்யார்ட்"). ஆயினும் அன்னியர்களை உள்ளேவிட இவர்கள் அனுமதிக்க முடியவில்லை என்று அவர்கள் வருத்தம் தெரிவித்து விட்டார்கள் தொழிற்சாலையில் அன்னியர் வந்து பார்வையிடும் நிகழ்ச்சியினால் உற்பத்தியும் நுணுக்கமான பாகங்கள் தயாரிப்போரின் கவனமும் சீர்குலைகிறதென்றும் கடந்த முப்பது ஆண்டுகளில் ஒரே ஒரு அமெரிக்கர் தவிர வேறு யாரையும் உள்ளே பார்வையிட அனுமதித்ததில்லை யென்றும் கூறினார்கள், டிரெயினிங் ஸ்கூலிலும் வகுப்பு நடைபெறும் போதும் எங்களைப் பார்க்க விடவில்லை. அவர்களது நியமத்தை வற்புறுத்திக் கலைக்க விருப்பமில்லாமல் ஒருநாள் பூராவும் அங்குமிங்கும் சுற்றிவிட்டு "லாஸேன்" நகருக்கே சென்றுவிட்டோம். மறுபடியும் அங்கு வால்கன் தம்பதிகளுடன் தேநீர் அருந்திவிட்டு காரியாலய நேரம் முடிந்த பின்னர் வர்த்தக சம்பந்தமாகச் சிறிய தொல்லைகளும் அவருக்குக் கொடுத்தேன்.

இரவு நெடுநேரத்திற்குப் பிறகு நடந்து தொலை தூரம் வந்து ஜினிவாவுக்கு வண்டி யேற்றிவிட்டு அவர் விடைபெற்றார்.

பல சமயங்களில் காலை ஆகாரமும் பகலுணவும் இடைவேளை தேநீரும் சிற்றுண்டியும் கூட இல்லாமல் சுற்றியிருக்கிறோம். உணவு அளவு குறைந்தும்கூட ஆரம்பத்தில் நாங்கள் பத்துப் பதினைந்து பவுண்டு எடை அதிகரித்திருந்தோம். ஆனால் ஸ்விட்ஸர் லாந்தை விட்டுப் புறப்படும்போது எப்படியோ நாங்கள் எடை குறைந்து போய் விட்டோம்.

ஸ்விட்ஸர்லாந்து ஒரு மேட்டுப்பாங்கான பிர தேசம், மலைப்பிராந்தியம் என்றே சொல்லவேண்டும். ஆயினும் ஜினிவாவில் தங்கியிருந்தபோது சிறிது உஷ்ணமும் மிகுந்திருந்தது. இரவு நேரங்களில் போர்வையோ கம்பளிச் சட்டைகளோ இல்லாமல் கோயம்புத்தூரில் இருப்பது போலவே சகஜமாகப் படுத்து உறங்க முடிந்தது. ஜினிவா கிட்டத்தட்ட கோவை போன்ற சீதோஷ்ண நிலையடைந்திருந்தது மிக அழகான நகரம் அது.

ஸ்வீடனும் ஸ்விட்ஸர்லாந்தும் ஐரோப்பா கண் டத்திலேயே இரண்டு மணியான நாடுகள். கச்சித மான அமைப்பும் தூய்மையான தோற்றமும் படைத்தவை. இங்கெல்லாம் மக்கள் இனிய பண் பினராகவும் காணப்படுகிறார்கள். இவ்வளவு நல்ல மக்களின் நாடுகளில் போர்க் காரணங்கள் தோன்று கின்றன வென்பது வியப்புக்குரியதுதான். யாரோ சிலர் வைக்கும் கொள்ளித்தான் இது என்பது தெளிவு.

முன் தடவை நானும் டாக்டரும் ஜினிவா வந்த போது பல மைல்கள் டாக்ஸியில் சுற்றித் திரிந்து ப்யூவேரிஜ் என்ற சீமான்கள் விடுதியில் ஒரு இடம் பிடித்தோம். 50 பவுனுக்குள் எங்கள் வசதிகளுக்கும் சுற்றுப் பிரயாணத்துக்கும் சரிக்கட்டிக் கொள்ள வேண்டியிருந்தது. இன்னும் பல இடங்களைப் பார்த் தாகவேண்டும். இத்துடன் ஒரு யந்திரசாலையில்

மெக்கானிக்காக நின்று வேலை செய்தாக வேண்டியுமிருந்தது. ஆகவே வேறு வழியின்றி இந்த ஆடம்பர விடுதியில் தங்கி விரைவில் காரியங்களை முடித்துக் கொண்டு ஒரு நாள்கூட அதிகம் தங்காமல் உடனே திரும்பிப் போய்விட்டோம்.

ஆனால் இந்தத் தடவை ஸ்விஸ் விமான நிலையத்தைச் சேர்ந்த நவரோஜ் என்னும் புதிய நண்பர் எங்களுக்கு இங்கே வாய்த்தார். ஆகையால் சிக்கனமான செலவில் வசதியான ஹோட்டல் ஒன்றைப் பிடித்தோம். ஒரு நாளைக்கெல்லாம் ஒன்பது பிராங்குகள்தான் கேட்டார்கள். இதே வசதியை வேறு ஹோட்டல்களில் 20 பிராங்குகளுக்குக் குறைந்து பெறமுடியாது. முதலில் அவரிடம் நான் இந்தியாவிலிருந்து கொண்டுபோயிருந்த பப்பாளி விதைகள் கொஞ்சம் கொடுத்தேன். சிலவற்றை அவர் பயிராக்கி யிருந்தார். சிறு செடிகளாக அவை தலைநீட்டிக் கொண்டிருந்தன, இந்தப் பகுதியின் தலைவர் இங்கிதமான பண்புடையவராகவும், வருகின்ற விருந்ினரை ஓடி ஓடி உபசரிப்பதில் சலியாத அன்புடையவராகவும் இருந்தார். மறு நாள் வேலையொன்றும் இல்லாமல் போகவே, கடிகாரங்கள் மற்றும் யந்திர சாமான்கள் சிலவற்றை உருவாக்கும் ரேமாண்ட், சிங்க்லெட் என்னும் இருவரும் வர்த்தக சம்பந்தமான சில அரிய ஆலோசனைகள் தந்து உதவினார்கள். அங்கு சிங்க்லெட் அவர்களுடன் அவருடைய காரிலேயே அவரது இல்லத்திற்குச் சென்று அவரது மனைவி, குமாரர்கள் ஆகியவர்களைச் சந்தித்தோம். அவருக்குச் சொந்தத்தில் உருக்குப் பட்டறை ஒன்றும் இன்றிருக்கிறது. உலோகத் தொழிற்சாலை என்று கூறலாம்.

பிரிட்டிஷ் தொழிற் கண்காட்சியில் நான் பார்வையிட்ட எண்ணற்ற பொருள்களில் பெரும்பாலானவை நமது நாட்டுத் தொழில் வளத்திற்கும் பயிற்

சிக்கும் மிக பயன்படக்கூடியவையே யாகும். விற்பனே வரி இவற்றிற்கு மிகமிக அதிகமாக விதிக்கிறார்கள். ஆயினும் சிறிய மாடல் ரெயில்வேக்கள், சிறு மோட்டார் வண்டிகள், எஞ்சின்கள், படகுகள், விமானங்கள், மின்சார மிஷின்கள் இவற்றிற்கு வரியே கிடையாது. வேறுவகை யந்திரங்களில் மிகுந்த ஆர்வம் இருந்தபோதிலும், அனுமதிகள், நாணயமாற்று வசதிகள் ஆகியவற்றில் இருந்த பெருந் தடைகளின் காரணமாகக் கல்வித்துறை சம்பந்தமான பொருள்களிலேயே பெரிதும் கவனம் செலுத்தினேன். பல அரிய பொருள்களே இலவசமாகவும், சிலவற்றை சகாய விலேயிலும் வாங்கினேம். சில நண்பர்களும், எங்களுக்காக விலேகொடுத்து வாங்கி எங்கள் முகவரிக்கு அனுப்பிவைத்த அரிய பொருள்கள் உண்டு. இப்படி உடன் இருந்து உதவிய நண்பர்களில் சார்லஸ் கன்னிங்ஹாம் பார்சன்ஸ் ஆகிய இருவரையும் பெரிதும் போற்றலாம். இவர்கள் நாளெல்லாம் எனக்காக உடனிருந்து ஆங்காங்கு அழைத்துச் சென்றும் வேண்டிய ஏற்பாடுகள் செய்தும் உதவினர்கள். வேற்றிடங்களில் முகமறியாத மனிதர்கள் எதிர்பார்க்கக்கூடிய எவ்விதமான சிறு துன்பங்களும் எங்களே அணுகாவண்ணம் செய்தவர்கள் இவர்கள் இருவரும்.

சாமான்களே இடம்விட்டு இடம் பெயர்த்து எடுத்துச் செல்வதில் சில இடங்களில் சிரமம் ஏற்பட்டதுண்டு. நாணயமாற்று வசதிக் குறைவால் நலிவடைந்ததுண்டு. விடுதிகளில் போதிய இடங் கிடைக்காமல் வேதனேயடைந்திருக்கிறேம். ஆயினும் இந்த இரு நண்பர்களின் துணேயினல் எல்லா சிரமங்களேயும் சமாளித்துக்கொண்டு நிம்மதியாக இங்கிலாந்து முழுமையும் சுற்றிவிட்டேன். நமது நாட்டு மாணவர்களுக்காக இங்கு தனியாக ஒரு இல்லம் அமைத்து நடத்திக்கொண்டிருக்கும் ஆர். எஸ். நாயுடு அவர்

களுக்கும், பயிற்சிக்காக லண்டன் வந்து தங்கியிருக்கும் வெங்கடேசலு அவர்களுக்கும் நாங்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நாயுடுவின் விடுதியில் இந்திய மாணவர்கள் நிறைந்திருக்கிறார்கள். அவர்களின் தேவைகளை கவனித்து உதவி செய்கிறார்கள். இல்லத் தலைவரான நாயுடுவின் நேரான கண்காணிப்பும், சுகாதார வசதியும், உணவு ஏற்பாடுகளும், இனிமையான ஒரு வாடையை அங்கே நிலவச் செய்கிறது. இந்தியாவிலிருந்து வரும் மாணவர்களின் பாதுகாப்பாளராக அவர் இருக்கிறார். இங்கும் சில முக்கியமான பேட்டிகளை எனது இரு நண்பர்களும் எனக்கு ஏற்பாடு செய்தார்கள்.

இந்தியாவை விட்டு நான் மேற்கே புறப்படும் முன்பாக நமது மாகாண மந்திரிமார் சிலருடன், குறிப்பாக திருவாளர்கள் மாதவமேனன், பெருமாள் சாமி ரெட்டியார் இவர்களுடன், தொழில் வளர்ச்சி, தொழிற் கல்வி சம்பந்தமாகப் பல விஷயங்களை கலந்து பேசியிருக்கிறேன். இது சம்பந்தமாக மந்திரியாரிடமிருந்து கிடைத்த கடிதமொன்றில், கற்பிப்பதற்குரிய புரொஜக்டர் தொழிற்சாலை, டீசல் எஞ்சின், சைக்கிள் உற்பத்தி சம்பந்தமாகத் தெளிவான செய்திகளும் திட்டங்களும் தயாரித்து தரும்படி கேட்டிருக்கிறார்கள். சார்லஸ் கன்னிங்ஹாம் அவர்களை இது சம்பந்தமாகத் துணைபுரியும்படி நான் வேண்டிக்கொண்டேன்.

இங்கிலாந்திலும் சரி, ஜெர்மனியிலும் சரி, சில முக்கியமான தொழிற்சாலைப் பார்வைகளிலும், சில பேட்டிகளிலும் எனக்குப் பெருந்துணையாக இருந்தவர் நண்பர் ஆர். வி. ஸ்வாமிநாதன் எம். எல். ஏ. அவர்கள். விவசாயச் சம்பந்தமாக இருந்தப் பிரயாணத்தை மேற்கொண்டார். ஆதலால், இங்கிலாந்து, ஹாலந்து, நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்விட்ஸர்லாந்து

ஆகிய தேசங்களிலெல்லாம், அவருக்கு நிறைய வேலை கள் இருந்தன. ஆயினும் முடிந்தபோதெல்லாம் எங்களுடன் உதவியாக இருந்தமைக்கு எங்கள் நன்றி உரித்தாகும். இவ்வளவு உதவியாக அவர் இருக்கக் கூடுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

மே மாதம் நாங்கள் லண்டன் சென்ற உடன் காலில் ஒரே ஒரு நாள் மட்டும் சாரிங்கிராஸ் ஹோட்டலில் தங்கியிருந்தபின் லங்காஸ்டர் கேட் என்னும் பொன் வாசல் விடுதியில் போய்ச் சேர்ந்தோம். ஸ்வீடனுக்கு நாங்கள் புறப்படும்போது கையோடு கொண்டுபோக வேண்டிய ஒரு சில சாமான்களைத் தவிர மற்ற வற்றையெல்லாம் இந்த ஹோட்டலில்தான் அடைக் கலமாக வைத்துவிட்டுப் போனோம். அப்படி விட்டு விட்டுப்போன சாமான்களில் அருமையான தோல் பை ஒன்றும் உண்டு. கோவையில் 'கோபால் பாக்' மாளிகைத் தொழிற்சாலையிலேயே தயாரிக்கப் பட்டது. சித்தடக்கமாகப் பல பொருள்களைத் தன் னகத்தே வைத்துக்கொள்ளக்கூடிய நூதனமான வேலைப்பாடுகள் அமைந்தது. இந்தப் பையில் பல விதமான கணக்குகளும் கடிதப் போக்குவரத்துக் களும் வைத்துப் பூட்டியிருந்தேன். சென்னையில் நீதிமன்றத்திற்குப் போகும்போது தேவைப்பட்ட தனால் கோவையிலிருந்தே இவற்றைக்கொண்டு வந் திருந்தேன். பம்பாய்க்குப் புறப்படும் விமான அவ சரத்தில் இவையும் எப்படியோ என்னுடனேயே வந்துவிட்டன. இந்தக் கணக்குகள் தவிர, லண்டன் பொருட்காட்சிசாலையில் சேகரம் செய்த அருமை யான வெளியீடுகள், இந்திய உடைகள் யாவும் இந்தப் பையில்தான் இருந்தன.

ஸ்வீடன், டென்மார்க், ஜெர்மனி, ஸ்விட்சர் லாந்து ஆகிய தேசங்களில் சுற்றிவிட்டு விமான மார்க்கமாக லண்டன் வந்து சேர்ந்தோம். ஹோட் டலுக்குச் சென்று கொடுத்துவிட்டுப் போயிருந்த

தோல்பையை கேட்டேன். சில நாட்கள் வரை அவர்கள் தாமதம் செய்த பிறகு ஏதோ சாக்குப் போக்குச் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். கடைசியில் ஹோட்டல் கீழ் தளத்தில் அவர்களின் கிடங்குகளுக்குச் சென்று தேடி எடுக்கும்படியாகிவிட்டது. மற்றவையெல்லாம், கிடைத்தனவேயன்றி இந்த ஒரு பை மட்டும் காணப்படவில்லை.

நாங்கள் ஸ்வீடனில் தங்கியிருந்தபோது அதே சமயத்தில் இந்த ஹோட்டலில் வந்து தங்கிவிட்டுப் போன யாரோ இருவர் இந்தப் பையையும் தங்களுடன் கொண்டு போயிருக்க வேண்டுமென்று விசாரித்ததில் ஒருவாறு புலனாயிற்று. அவர்களின் விலாசத்தைத் தேடிக் கண்டுபிடிக்க எவ்வளவோ முயற்சித்தும் முடியவில்லை,

என் பை காணமற்போனதற்கு நான் கவலைப்படவில்லை. அதற்குள் நான் காப்பாற்றி வைத்திருந்த அமெரிக்க, இங்கிலீஷ், ஜெர்மனியக் காகிதங்கள் அனைத்தும் அருமையான செய்திகள் கொண்டவை. விவசாய சம்பந்தமான எனது சொந்தத் தாள்கள் அது சம்பந்தமான சுமார் நூற்றுக்கு மேலான புகைப்படங்கள் ஆகியவையெல்லாம் இழக்கும்படியாகி விட்டதுதான் எனக்கு வருத்தத்தைக்கொடுத்தது.

பாடிங்டன் போலீஸ் ஷ்டேஷனில் இந்தப் பை திருட்டுப்போனது சம்பந்தமாக ஒரு பிராது கொடுத்தோம். நாளது வரையில் அவர்களால் அதைத் கண்டுபிடிக்க முடியவில்லையென்றே சொல்லி வருகிறார்கள், பை காணமற்போய்விட்டது என்று அறிந்தவுடனே எனக்கு வேதனையும் துடிப்பும் ஏற்பட்டது உண்மைதான். எனினும் ஒரு வகையில் அதையும் ஒரு நன்மையாகவே கருதவேண்டியிருந்தது. அந்தப் பை கிடைத்து அதற்குள் நான் சேர்த்துவைத்திருந்த

பெருந் தொல்லைகளையெல்லாம் மறுபடியும் நான் வெளியே எடுத்துப் பார்த்து அவைபற்றி என்னைக் குழப்பிக்கொள்ள வேண்டிய அவசியமில்லாமற் போய்விட்டதல்லவா?

லண்டன் பொருட்காட்சியில் சந்தித்துப் புதிதாக அறிமுகம் செய்துகொண்ட பல நண்பர்களைப் பற்றிய விபரங்கள், விலாசங்கள், அவர்களைப்பற்றிய குறிப்புகள் யாவும் அந்தப் பையில்தான் இருந்தன. அவர்களை யெல்லாம் மறுபடியும் போய் சந்தித்துப் பேச எண்ணியிருந்தேன். விவசாய ஆராய்ச்சி சம்பந்தமான குறிப்புக்களையும் புகைப் படங்களையும் கொண்டுபோய், விவசாய நிபுணர்களையும், பண்ணைகளையும் நேரில் பார்த்து விவாதிக்க எண்ணியிருந்தேன். இந்த வேலைகளும் (பை காணமற்போனதனால்) தீர்ந்து விட்டது பாருங்கள்!

இதைத் தொடர்ந்து, எனது 4-வது உலக பிரயாணமும் ஒருவாறு இருதிக் கட்டத்திற்கு என்னை நிர்ப்பந்தப்படுத்திவிட்டது. உலக வல்லரசுகளின் போக்கையும், விரைந்து சூழும் விளைவுகளையும் காண இந்தியாவின் நினைவும், என் பிரயாணங்களால் அங்கு போய் செய்யப்படவிருக்கின்ற திட்டங்களும் மாறி, மாறி என் உள்ளத்தில் ஊடுருவின. பெருமூச்சு விட்டேன். என்றாலும் இறுதியாக மற்றொரு காட்சியையும் விட்டுவிடாமல் பார்த்துவிடலாமென்று நானும் டாக்டரும் ஆயத்தமானோம்.

"தற்காப்பு முதலில்" என்ற பெயருடன் ஒரு அருமையான கண்காட்சிக்குப் போக விரும்பி லண்டன் டெர்மினல் ஹவுஸிலுள்ள கண்காட்சிக் காரியாலயத்திற்குச் சென்றோம். அங்கு வரவேற்பு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்த பெண்மணி, காட்சியைக் காண்பதற்கு ரோஸ்பா ஹவுஸ் என்னுமிடம் செல்லும்படி கூறியதுடன், உடனே காட்சி

சாலையை டெலிபோனில் அழைத்து எங்களுக்கு உடன் இருந்து எல்லாவற்றையும் சுற்றிக் காட்டும் படி அவர்களுக்கு அறிவித்தார். நாங்கள் சென்ற போது காட்சிசாலை அதிகாரிகள் அன்புடன் ஒவ் வொன்றையும் நுணுக்கங்களுடன் விவரித்தார்கள். பாதைகளில் நடக்கும்போதும், வண்டிகள், கார்கள் ஓட்டிச் செல்லும்போதும் எப்படி நடந்து கொண் டால் விபத்துக்கள் நேராவண்ணம் தற்காத்துக் கொள்ளலாம் என்று காட்டும் பல அரிய காட்சிகளை அங்கு கண்டோம். நடைபாதை பாதுகாப்பு பற்றிய இவ்வளவு அரிய ஞானத்தை மக்களுக்குக் கற்பிக்கும் ஆர்வத்தையும் எங்கும் காணமுடியாது. நமது மாணவர்களுக்கு ஞானத்தைப் புகட்டுவதில் நமது அரசாங்கமும் இத்தகைய முறைகளைக் கடைபிடித் தால் மிகுந்த நன்மை விளையும். இந்தப் பிரசுரங்கள் பலவற்றை வாங்கி இந்தியாவிலுள்ள நூற்றுக் கணக்கான நண்பர்களுக்கு ஏராளம் தனித்தனியாக அனுப்பி வைத்தேன். அதைப் பெறும் அன்பர்கள் அவற்றைத் தக்க வழியில் பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறேன். இவற்றை வாங்கித் தபாலில் சேர்க்கும் காரியத்தில் (சுமார் 700 கட்டுகள்) பார்சன்ஸ் என்னும் நண்பரும் டாக்டர் ராமஸ்வாமி அய்யரும் வார இறுதியிலும், ஞாயிற்றுக் கிழமை யிலும் இரவு நெடுநேரமாகும்வரைகூடக் கண் விழித்து ஆர்வத்துடன் வேலை செய்தார்கள். நான் எழுந்து விளக்கணைத்து டாக்டரைக் கட்டாயமாகப் படுக்கைக்கு அனுப்பவேண்டியதாயிற்று என்றால் எவ்வளவு உற்சாகத்துடன் அந்த வேலை நடைபெற் றிருக்க வேண்டும். ஆல்டுவிச்சிலுள்ள இந்தியா ஹவுஸ், எர்ல்ஸ் கோர்ட்டிலுள்ள இந்திய மாணவர் விடுதி இரண்டும் தென்னாட்டு உணவு வகைகளைத் தயாரித்துக் கொடுத்து வசதியளித்தது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன் என்று சொல்ல வேண் டும். வீட்டுச் சாப்பாடு போலவே, பருப்பு, சாம்பார்,

கறி, ரசம், அப்பளம், தயிர், தயிர்ப் பச்சடி, மசாலா தோசை, உப்புமா, போண்டா, அரிசிச் சோறு ஒன்றும் குறைவில்லை. இனிப்புகளில் மைசூர் பாகு, பர்பி ரஸகுல்லா, குலாப்ஜான், லட்டு, இன்னும் கார வகைகள், மிக்ஸர் யாவும் கிடைத்தன. வெள்ளைக்கார நண்பர்களுடன் இந்த விருந்து மிகவும் ரஸமானதாக இருந்தது. நம்மைவிட அவர்கள் அதிக சுவையுடன் இவற்றை உட்கொண்டார்கள். இந்தியா ஹவுஸ் வேறு வகைகளில் புரியும் தொண்டு முழுமையும் எங்களுக்குத் தெரியாவிடினும் அருமையான சாப்பாடு போடுவது பற்றி மிகவும் பாராட்ட வேண்டும்.

கையுடன் பப்பாளி பழங்கள் விதைகள், பருத்தி, சோள வித்துக்கள் கொண்டு போயிருந்தேன். பரீட்சார்த்தமாகப் பல நண்பர்களின் உபயோகத்துக்கு அவற்றை கொடுத்திருந்தேன்.

நம்முடைய விதைகள் அங்கே ஒன்றும் ஆவதில்லை. நான் திரும்பி வருவதற்குள் சில செடிகள் இரண்டு மூன்றடி வளர்ந்தனவென்பது எனக்குத் தெரியும். ஒரு விஷயம், குளிர்ந்த பிரதேசங்களில் டைகளும், காலர்களும், பூட்சுகளும், கம்பளிச் சட்டைகளும் உபயோகிக்கும் நாகரீகம் இருக்கிறது. அதையே வெப்பம் மிகுந்த நம்முடைய பிரதேசங்களில் வலுக்கட்டாயமாக அணிந்துகொள்ளுகிறுர்கள் இல்லையா? அதைப்போல நமது விதைகளையும் அந்த நாட்டு மண்ணில் கட்டாயமாகப் பயிர்செய்து பார்க்கலாம்.

ஆசியா, ஐரோப்பா என்ற அடிப்படையில் உலகத்து அரசியல் தத்துவார்த்தங்கள் அங்கே அடிபடுகின்றன. பெரும்பாலும் உலகத்தைக் கம்யூனிஸ்ட் கம்யூனிஸ்ட் அல்லாதார் என்ற அடிப்படையில்தான் அதிகம் சிந்திக்கிறுர்கள். கம்யூனிஸ்ட் பீதிதான் இங்கு பெரிதும் காணப்படுகிறது.

"இங்கு வந்ததிலிருந்து இதுவரை நாங்கள் பார்த்ததும், கேட்டதும் தெரிந்ததும் அடைந்ததும் முழுவதும் அங்குவந்து ஒன்றுவிடாது சொல்லவோ காட்டவோ முடியுமாயின் அதைவிட மனோதத்துவக் கலை கற்க வேறொரு சிறந்த உபகரணமும் ஈடாகா! என்று உறுதியாகச் சொல்லலாம். ஆனால் அவ்விதம் மறக்காமல் விடாமல் சொல்லக்கூடிய அளவுக்குப் போதுமான சக்தி எங்களிடம் எவ்வளவிருக்கிறது என்பது தான் பிரச்னை.

இத்தனை சுற்றுப் பிரயாணங்களுக்குப் பிறகும் நான் கண்டறிந்த ஓர் பெரிய உண்மையை சொல்ல வேண்டுமல்லவா?

இந்த மேற்கு நாடுகள் பிற துறைகளில் எவ்வளவு பிற்போக்காயினும் பண்பாட்டில் நமக்கு இணையாக எந்நாடும் எக்காலத்திலும் வரப்போவதில்லையென்பது உறுதி. ஆனால் ஒரு சமயம். இதை



மாற்றுவதற்கெனவே மற்ருெரு ஹிட்லர் வந்தால் முடிந்தாலும் முடியலாம் மேற்கிலிருப்பவர்களின் தினசரி முறைகளைப் பார்க்க, அதாவது காலையில் எழுந்திருக்கும்பொழுதே அவசரம் — பஸ்ஸுக்குப் போக அவசரம் — சாப்பாட்டை வயிற்றில் தள்ளி நிறைத்தபின் ஓட்டம் — வேலை நேரங்களில் அதிக அவசரம்—கடைசியில் வீட்டிற்குப் புறப்படும்போது எல்லாவற்றையும்விட அதிக அவசரம். இவைகளை ஓரி த்தில் நின்று, இந்த மனித யந்திரங்கள் வேலை செய்வதை உற்றுப்பார்ப்போமேயானல், மிக அனுதாபப்படுவோம். நம் ஊரில் என்னதான் குறைகளிருப்பினும் ஒவ்வொருவரும் மன நிம்மதி யென்பதை சிறிதாவது சற்று நேரமாவது அடைகிருேம். அதுமட்டிலும் மேற்கு தேசங்களில் இல்லவே இல்லை. நம் தேச குடும்பப் பண்புகளையும் இங்கிருக்கும் மற்ற ஒழுங்கு முறைகளையும் மட்டும் ஒன்று சேர்த்து அவற்றை மேனுடுகளிலும் புகவிடின், அதற்குப் பதில் வேறு உலகம் ஒன்றில்லை யென்பது நிச்சயம். ஆனல் இதை யார் எப்படிச் செய்வது என்பதுதான் கேள்வி!

---

MANI & CO.,
TIRUCHI

# "NAN KANDA ULAGAM"

By

**G. D. NAIDU**

Translated by:

**TRILOKA SITARAM**

**PRICE 1-0-0**

---

Wrapper Printed at Rainbow Printers, Tiruchi.